

# தமிழ்நாடு அரசாங்க விடுமுறை நாட்கள்

**(1965–66)**

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் | 13 | செவ்வாய் | தமிழ்ப் புத்தாண்டு நாள், பக்ரீத் |
| ஏப்ரல் | 16 | வெள்ளி | பெரிய வெள்ளி |
| மே | 13 | வியாழன் | மொகரம் |
| ஜூன் | 30 | புதன் | பாங்கு அரையாண்டுக் கணக்கு முடிவு |
| ஆகஸ்ட் | 30 | திங்கள் | விநாயக சதுர்த்தி |
| அக்டோபர் | 2 | சனி | காந்தி ஜெயந்தி |
| அக்டோபர் | 4 | திங்கள் | ஆயுத பூஜை |
| அக்டோபர் | 5 | செவ்வாய் | „ |
| அக்டோபர் | 23 | சனி | தீபாவளி |
| டிசம்பர் | 25 | சனி | கிறிஸ்துமஸ் |
| டிசம்பர் | 31 | வெள்ளி | பாங்கு வருடாந்திரக் கணக்கு முடிவு |

**( 1966 )**

| | |
|---|---|
| * ஆங்கில வருடப்பிறப்பு | (ஜனவரி 1, சனிக்கிழமை) |
| * போகி | (ஜனவரி 13, வியாழக்கிழமை) |
| * பொங்கல் | (ஜனவரி 14, வெள்ளிக்கிழமை) |
| * குடியரசு தினம் | (ஜனவரி 26, புதன்கிழமை) |

மாதத்தில் எல்லா இரண்டாவது சனிக்கிழமையும், எல்லா ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்களாகும்.

* 1966-ம் ஆண்டுக்கான அரசாங்க விடுமுறை நாட்கள் பற்றிய அதிகார பூர்வமான அறிக்கை இன்னும் வெளியாகவில்லை.

# முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| குடியரசு தினம் | 26, ஜனவரி |
| சர்வோதய தினம் | 30, „ |
| தாகூர் பிறந்த தினம் | 6, மே |
| பஞ்சாயத்து தினம் | 15, ஜூலை |
| சுதந்திர தினம் | 15, ஆகஸ்ட் |
| காந்தி ஜெயந்தி | 2, அக்டோபர் |
| தேசிய ஒருமைப்பாடு தினம் (எல்லைப் பாது காப்புக்காக) | 20, „ |
| அமரர் நேரு பிறந்த தினம் (குழந்தைகள் விழா) | 14, நவம்பர் |

**கிராமநலம்**

மாடி 10 ஏப்ரல், 1965 படி 7

பொருளடக்கம்

—(o)—

வெளியாரைக் கவரும் நிலக்காலனி திட்டம் 3

மக்கள் ஆட்சி 5

அன்புக்கு அடிபணிந்த செல்வச் செருக்கு 9

ஆயிரம் கோடி அளிக்கும் கால்நடைச் செல்வம் 13

பண்டித மதன் மோகன் மாளவியா 15

எல்லாம் ஒரு நிறை 25

உறக்கத்திலிருந்த ஒன்பது கிராமங்கள் 29

வேலையின்மை பிரச்னை இல்லாத கிராமம் 30

**அடுத்த இதழில் :**

**பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் உப-தலைவர்கள் ஆகியோரின்** பெயர்கள் விவரம்.

வெளியிடுபவர் :

திரு என். அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் ;

திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

ஆண்டு சந்தா ரூ. 1·50

சந்தா மற்றும் நிர்வாக சம்பந்தமான எல்லா விவரங்களுக்கும் " பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல-தல நிர்வாகத் துறை, செக்ரடேரியட், சென்னை-9 " என்ற முகவரிக்கு எழுதவும்.

# கூட்டுறவு பாங்குகளின் கடமையும் பொறுப்பும்

(திரு எம். பக்தவத்ஸலம்)

நமது ராஜ்யத்தில் கூட்டுறவு விவசாய நாணய லாவாதேவி நன்கு அபிவிருத்தியடைந்துள்ளது. அந்தந்த மாவட்டங்களிலுள்ள மத்தியக் கூட்டுறவு பாங்குகளின் சிறந்த முயற்சியே, இதற்குக் காரணமாகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் ரூபா ஆறு கோடியாக இருந்த கூட்டுறவு விவசாயக் கடன் வசதி, சென்ற ஆண்டில் ரூ. 43 கோடியாக உயர்ந்தது. எனினும், மொத்த அங்கத்தினர்களில் 40 சதவிகிதத்தினரே கூட்டுறவுக் கடன் வசதியைப் பெற்றுள்ளார்கள். 4-வது திட்ட முடிவுக்குள்ளாக, இந்த அளவைக் குறைந்தது 75 சதவிகிதமாகச் செய்யவேண்டுவது அவசியமாகும்.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 40 லட்சம் அங்கத்தினர்கள் இருந்து வருகிறார்கள். இந்த ராஜ்ய ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளில் உள்ள அங்கத்தினர்களைவிட, இது பல மடங்கு அதிகமானது. இவ்வளவு அதிக அளவு உள்ள அங்கத்தினர்களிடமிருந்து அவை அரசாங்க உதவியை நாடாமல், சொந்தமாய் நிறைய டிபாசிட் திரட்டவேண்டும். மத்திய பாங்குகள் கிளைகளை ஏற்படுத்துவதன் மூலம் ஆங்காங்குள்ள டிபாசிட்டுகளை திரட்ட முடியும். சென்னை ராஜ்யத்தின் மத்திய பாங்குகள் 33 கிளைகளை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளன. மகாராஷ்டிர ராஜ்யத்தில் ஒரு மத்திய பாங்குக்கு சராசரி 20 கிளைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னை ராஜ்யத்திலும் மத்திய பாங்குகள், ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த பகுதியிலும் தங்கள் கிளைகளை நிறுவவேண்டும்.

### விவசாய வளர்ச்சிக்கு உதவவேண்டும்

மத்திய பாங்குகள், தங்கள் நிதிகளை, இன்னும் விவேகமான வழிகளில் பயன்படுத்தி, அதன் மூலம் உயர்ந்தபட்ச அனுகூலத்தை அடைய முயற்சிக்கவேண்டும். விவசாயக் கடன் லாவாதேவியானது சாகுபடி செய்யும் பூமியின் விஸ்தீரணத்தையும் பயிரின் தன்மையையும் பொருத்து இருக்கவேண்டும். கூட்டுறவு மூலம் வழங்கப்படும் கடன்கள், விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு நன்கு உதவவேண்டும். இந்த நல்ல நோக்கத்துடன், அவைகளின் ஒரு பகுதியை ரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள் ஆகிய பொருட்களாக வழங்கவேண்டும்.

விவசாயக் கடன் வசதியை மட்டும் வழங்கும் நோக்கத்துடன் நில்லாது, மத்தியக் கூட்டுறவு பாங்குகள் விவசாயத்தை இலாபகரமான தொழிலாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும். உதாரணமாக, விளைபொருள் பெருக்கத்துக்கு

## நமது மனம் திறந்திருக்கட்டும்!

"தத்துவத்தோடு இணைந்த விஞ்ஞான நோக்குடனும் மனப்பாங்குடனும், நாம் வாழ்க்கையை நோக்க வேண்டும். அதன் மூலம், கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் உள்ளடக்கியதோர் ஒருங்கிணைந்த வாழ்க்கை லட்சியத்தை உருவாக்கிக் கொண்டு, எதிர்காலத்தை அமைதியுடன் நோக்கலாம்."

"கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம் போன்ற எந்தவொரு விஷயமாகவும் இருக்கட்டும், குறுகிய தேசிய கண்ணோட்டத்தில் அணுகுவதை, நான் அடியோடு வெறுக்கிறேன். இது, நாம் விவேகத்தின் உச்சத்திற்குப் போய் விட்டோமென்றும், இனி எதையும் கற்றுக்கொள்ளத் தேவையில்லை என்றும் எண்ணிக்கொள்ளச் செய்கிறது. இவ்விதப்போக்கு, முற்போக்கு குன்றிய மந்த நிலைமையே காட்டுகிறது. மந்த கதியில் இருக்கும் எதுவுமே தேக்க நிலையை அடைந்து, பிறகு படிப்படியே அழிந்து போய் விடும் எல்லா விஷயங்களையும் நோக்கி நமது மனம் திறந்திருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். உலகின் இதர பாகங்களுடன் கலந்துறவாட விழைகிறேன். மற்ற நாட்டவரை நம் நாட்டுக்கு அழைப்போம். அவர்கள் நம்மிடமிருந்து சிலவற்றைக் கற்றுக் கொண்டு, நமக்கும் சில வற்றைப் போதிக்கட்டும். தடைகள் எதுவும் தேவையில்லை."

அமரர் நேரு

வேண்டிய அதிகபட்ச ரசாயன உரம் உபயோகிக்கப்பட வேண்டும். தற்போது ஓர் ஏக்கர் நெற்பயிருக்கு 70 கிலோ கிராமுக்குப் பதிலாக 24 கிலோ கிராம் அமோனியம் சல்பேட் உரம்தான் உபயோகிக்கப்படுகிறது. அதிக அளவு உரம் உபயோகிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மக்களுக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும். இப்பணியைப் புரிய, கூட்டுறவு மத்திய லாவாதேவி பாங்குகள் ஏற்ற ஸ்தாபனங்களாகும். விவசாய நிபுணர்களை நியமித்து மத்தியப் பாங்குகள் தங்கள் எல்லைகளில் இது விஷயமாய் தகுந்த பிரச்சார நடவடிக்கைகளைச் செய்யவேண்டும். மாதிரி விவசாயப் பண்ணைகளை, சில குறிப்பிட்ட கிராம நாணய சங்கங்கள் ஏற்று நடத்தவும், அவைகளில் பின்பற்றப்படும் விவசாய முறைகள், வித்துக்களின் உபயோகம், உரமிடுதல் முதலிய நடவடிக்கைகளை மக்கள் அறிந்துகொள்ளவும் வழி கோலப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகளையும் மத்திய பாங்குகள் மேற்கொள்வதன் மூலம்தான், அவை விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு கடன் வசதி செய்வதன் நோக்கம் உண்மையில் பூர்த்தியடையும்.

நாமும் அந்த முறையை மேற்கொள்வோம்..

மகாராஷ்டிர ராஜ்யத்தில் உள்ள விவசாய நாணய சங்கங்களின் அந்தந்த ஆண்டுக் கடன் தேவைகளை அவற்றின், அங்கத்தினர்களின் தேவையை அனுசரித்து முன்கூட்டியே அறிந்து, அதற்கேற்ப அச்சங்கங்களுக்கு மத்திய பாங்குகள் கடன் அளவுகளை ஆண்டு துவக்கத்திலேயே அனுமதிக்கும் முறை பின்பற்றப்பட்டுள்ளது. இம் முறையை மேற்கொள்வதன் அவசியத்தை, சென்னை ராஜ்யத்தின் மத்தியபாங்குகள் ஆலோசிக்க வேண்டும்.

நமது ராஜ்யத்திலுள்ள கிராமக் கூட்டுறவு சங்கங்கள் தனித்தியங்கும் தன்னிறைவு பெற்ற ஸ்தாபனங்களாக அமைந்திருக்க வேண்டும். இந்த ராஜ்யத்தில், 10,000-க்கு மேற்பட்ட விவசாய நாணய சங்கங்கள் உள்ளன. ஒவ்வொரு மத்திய பாங்கும், அதனதன் எல்லையிலுள்ள சங்கங்கள் விஷயத்தில் பரிசீலனை செய்து, திறமையற்றவைகளைக் கலைத்தும், அல்லது பக்கத்திலுள்ள சங்கங்களுடன் இணைத்தும், சீர்திருத்தம் செய்யவேண்டும்.

அரசாங்கம் அல்லது இலாகாவின் ஆதரவை எதிர்பாராமல், இந்த ஸ்தாபனங்கள், தங்கள் வியாபார நடவடிக்கைகளை செவ்வனே செய்துகொண்டு திட்டமிட்ட முறையில் முன்னேற மத்தியபாங்குகள் அவைகளுக்குவேண்டிய உதவிகள் புரியவேண்டும்.

[34-வது தமிழ்நாடு கூட்டுறவு மத்திய பாங்குகள் மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

## சர்வதேச வர்த்தக---தொழில் சந்தை சென்னையில் நடைபெறும்

சர்வதேச வர்த்தகத் தொழில்கள் சந்தை (Internat onal Trade Fair) யொன்று, 1966-ம் ஆண்டில் டிசம்பர் கடைசி வாரம் முதல் 1967 ஜனவரி இறுதிவரை, சென்னையில் நடைபெற இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கம், மத்திய அரசாங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், அனைத்திந்திய தயாரிப்பாளர்கள் ஸ்தாபனம், இந்தச் சந்தையை நடத்துகிறது. ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறும் மிகப்பெரிய சர்வதேசச் சந்தைகளைப்போன்று, இந்தச் சந்தையும் இருக்கும்.

# வெளியாரைக் கவரும் — நிலக் காலனி திட்டம்

குந்தக் குடிசை இல்லை.

சொந்தமாக ஒரு துண்டு

நிலமும் இல்லை.

அவ்வளவு ஏன் ?

அன்றாட உணவுக்கே

அரும்பாடுதான்.

இப்படி இருந்தவர்கள்

இன்று

மன நிறைவோடு

வாழ்கிறார்கள் !

இது எப்படி ?

புதர்க்காடு சூழ்ந்த மேட்டுப் பிரதேசம். இடையில் ஒருதிடல்—காடு அகற்றப்பட்டு, சமன் செய்யப்பட்ட நிலப்பகுதி, அங்கு சொந்தமாக வீடு கட்டிக் கொண்டு, சுமார் 40 ஹரிஜனக் குடும்பங்கள் வாழ்கின்றன. எல்லாம் குடிசைகள்தான்; ஆனால் அழுத்தமான கட்டுக்கோப்புடன் சீராக உள்ளன. வீதிகள் சுத்தமாக இருக்கின்றன. எல்லோர் முகத்திலும் ஒரு மன நிறைவு பிரதிபலிக்கிறது: தங்கள் குறைகள், தேவைகளைப் பற்றிப் பிறரிடம் கூறும்போதுகூட, அவர்களது முகமலர்ச்சி மாறவில்லை.

இந்தக் குதூகலக் காட்சியை, செங்கற்பட்டு மாவட்டம் காட்டாங் கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த காரணைப் புதுச்சேரி கிராமத்தை அடுத்துள்ள ஹரிஜனக் குடியிருப்பில் காண முடிகிறது: காட்டுப் பிரதேசத்தில், மண் குடிசைகளில் வாழ்ந்தாலும், அவர்களிடையே ஒரு நிம்மதி நிலவுகிறது. அதன் இரகசியம் என்ன? முப்பதாண்டுகளாக, பல இடைஞ்சல்களுக்கிடையே அவர்கள் வாழ்ந்த வாழ்வும், இன்று அவர்கள் பெற்றுள்ள புது வாழ்வின் அருமையும் அவர்களுக்குத்தானே தெரியும்!

**ஒரே குடிசையில் 3, 4 குடும்பங்கள்**

முன்பு, அவர்கள் குடியிருந்த இடம், தாழ்வான பிரதேசம், அடிக்கடி தண்ணீர் தேங்கி, வீடுகளைச் சுற்றிலும் சேறும் சகதியுமாக ஆகிவிடும். பெயருக்குத்தான் அவை வீடுகள். சின்னஞ்சிறியதான அக்குடிசைகள் ஒவ்வொன்றிலும், மூன்று நான்கு குடும்பங்கள்—ஆம், மூன்று நான்கு நபர்கள் அல்ல, குடும்பங்கள்—வசித்து வந்தன. கோழிக்குஞ்சுகள் போல், அவர்கள் அடைபட்டுக் கிடந்தார்கள். காரணம், எல்லாக் குடும்பங்களுக்குமாகச் சேர்ந்து குடியிருப்புக்காக மொத்தம் இருந்த இடம் 5 செண்டுகள்தான், இவ்வளவு குறுகிய பரப்பில், எத்தனை குடிசைகள் போட முடியும்? ஆகையால், முடிந்த அளவுக்கு, ஏதோ வசதியைத் தேடிக்கொண்டு, காலத்தைக் கழித்து வந்தார்கள்.

**துப்புரவு துலங்க..**

இப்போது, ஏறக்குறைய அதே எண்ணிக்கையுள்ள குடும்பங்களுக்காக, ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் பரப்பு, 8 ஏக்கர். அதாவது, முன்பிருந்த இடத்தைப் போல் 160 மடங்கு பெரியது! எனவே விசாலமாக, காட்டோற்றமாக, நல்ல முறையில் குடிசைகளைக் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். இங்கு இப்போது சேறு, சகதி கிடையாது, ஏனெனில், இது மேட்டுப் பகுதி. ஆகையால் தெருக்களும் சுத்தமாக இருக்கின்றன, போதிய வசதிகள்

தரப்பட்டால், ஹரிஜன மக்கள். மற்றவர்களைவிடத் துப்புரவாக இருப்பார்கள் என்று கூறுவது போல், அமைந்திருக்கிறது இந்த ஹரிஜனக் குடியிருப்பு.

### நிலம் கிடைத்தும் பயனில்லை

இப்படி, ஓரளவு திருப்திகரமான குடியிருப்பு வசதி கிடைத்தது மட்டுல்ல, அவர்களது மன நிறைவுக்குக் காரணம். உணவுக்கு அடுத்தபடிதானே உறைவிடம்? அந்த உணவுக்கே போதிய வகையில்லாமல்தான், அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் நிலமற்றவர்கள், விவசாயத் தொழிலாளர்கள். தங்களுக்குச் சொத்தமாக விவசாய நிலம் வேண்டும் என்ற கோரிக்கையைப் பல ஆண்டுகளுக்கு முன்பே எழுப்பினர்கள். தண்ணீர் வசதியையொட்டி, சற்றுத் தாழ்வான காட்டுப் பிரதேசத்தைக் குறிப்பிட்டுக்காட்டி, அந்த இடத்தில் தங்களுக்கு நிலம் ஒதுக்கும்படி கேட்டார்கள் 1936-ல் அவர்களது கோரிக்கை அரைகுறையாக நிறைவேற்றப்பட்டது. அதாவது, அவர்களுக்கு நிலம் தரப்பட்டது. ஆனல் அவர்கள் கேட்ட தாழ்ந்த பகுதியில் அல்லாமல், மேட்டுப் பகுதியில்! இவ்வாறு 84 ஏக்கர்கள் வழங்கப்பட்டன. கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்த ஹரிஜன மக்கள், தங்கள் உழைப்பின் மூலம் பலன் காண்பதில் முனைந்தனர். அரசாங்க பண உதவியுடன் மூன்று கிணறுகளை எடுத்தனர். ஆனல் எட்டு, ஒன்பது கெஜம் ஆழம் தோண்டியும் போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. இது 1944-ம் ஆண்டு நிலைமை. எவ்வளவோ கஷ்டப்பட்டு, பயிர் எழுப்புவர். கடைசி நேரத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் வாடிப்போவதுண்டு. இத்தகைய போராட்டம் நான்கைந்தாண்டுகள் நீடித்தன. சிலர் சொந்த நிலத்தில் விவசாயம் செய்வதில், உற்சாகமிழந்து வெளி வேலைக்குச் சென்று பிழைப்பு நடத்தி வந்தனர்.

### புதுவாழ்வு அளிக்க வந்த திட்டம்

இவ்வாறு இரண்டுங்கெட்ட நிலையில் இருந்த ஹரிஜன மக்களுக்குப் புது வாழ்வு அளிக்க, அண்மையில்வந்தது, ஒரு திட்டம் அதுதான், இந்த ஹரிஜனங்களுக்காக 1962—63-ல் மேற்கொள்ளப்பட்ட நிலக்காலனி திட்டம். இதன்படி, இந்த மக்கள் முப்பதாண்டுகளுக்கு முன் கேட்டபடி, அதே தாழ்ந்த காட்டு பிரதேசத்தில், 84 ஏக்கர் நிலம் அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டது. இதற்காக காரணைபுதுப்சேரி அரிஜனப் பகுதியில் நிலக்காலனி கூட்டுறவு சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு, அதன் 42 உறுப்பினர்களுக்குத் தலா 2 ஏக்கர் வீதம் நிலம் கிடைக்க ஏற்பாடாகியது.

### வசதிகள் பலப்பல

செடிகளும், புதர்களும் மண்டிக்கிடந்த இடத்தை, விவசாயத்திற்கு ஏற்ற நிலங்களாக மாற்றியமைக்க, மேற்படி சங்கத்திற்கு ரூ. 17,000 உதவி மானியமும் ரூ. 6,000 கடனும் வழங்கப்பட்டன. அதோடு புல்டோசர் போன்ற இயந்திரங்களைக் கொண்டு, காட்டை அழித்து, சாகுபடி நிலங்களாக்கும் வேலையில், பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள், நிலக்காலனி சங்கத்திற்குத் தக்க ஒததுழைப்பை அளித்தனர். இந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கவும், அரசாங்கம் உதவி செய்தது. கிணறு ஒன்றுக்கு மான்யமாகவும். கடனுகவும் ரூ. 1000 வழங்கப்பட்டது. இப்படி 6 கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சங்க உறுப்பினர்கள் 42 பேர்களிடமும், உழவு மாடுகள் இருக்கின்றன. இவர்களில் 28 பேர். இப்போதைய திட்டத்தின் கீழ், தலா ரூ. 150 மானியமும் ரூ. 150 கடனும் பெற்று மாடு வாங்கியவர்கள். சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், விதைக்காக ரூ. 20 தரப்பட்டது. கன்றி, போஸ் கலப்பை, கடப்பாறை, மண்வெட்டி முதலிய விவசாயக் கருவிகள் வாங்க தலா ரூ. 50 கடன் தரப்பட்டிருக்கிறது. இவையன்றி உறுப்பினர்கள் அனைவரது பொது உபயோகத்திற்கு, 2 இரட்டை மாட்டு வண்டிகளும். பல விவசாயக் கருவிகளும் சங்கப் பொறுப்பில் இருக்கின்றன. அவரவர்க்குத் தேவைப்படும்போது, இவற்றை உபயோகித்துக் கொள்ளலாம்.

### உற்சாகத்தோடு உழைப்பு

தங்களுக்குச்சொந்தமாக நிலம் கிடைத்திருப்பதால் அதுவும் தாங்கள் கேட்டு வந்த இடத்திலேயே கிடைத்திருப்பதால் அதோடு மேற் சொன்ன வகையான வசதிகள் பலவற்றையும் பெற்றிருப்பதால், இங்குள்ள ஹரிஜன மக்கள், உற்சாகத்துடன் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வயகுண்டா, பிசினி (மோட்டாரக நெல்) வரகு, மிளகாய் ஆகியவற்றைப் பயிரிடுகிறர்கள். நெல் மாசூல், முதல் போகத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 20 கலம் வரை கிடைக்கிறதெனக் கூறுகிறர்கள். கிணறு உள்ளவர்கள், இரண்டாம் போகம் நெல் பயிரிட்டோ மிளகாய் பயிரிட்டோ மேலும் அதிகப் பலன் அடைகிறர்கள்.

இவர்கள் எல்லோரும் விவசாயத் தொழிலாளிகள் ஆகையால் ஒவ்வொரு குடும்பமும் ஆணும் பெண்ணுமாக நிலத்தில் பாடுபடுகிறர்கள். எனவே, இவர்களுக்கு விவசாயச் செலவு அதிகம் ஆவதில்லை.

### கடன் தவணை தவறுவதில்லை

கடனுக்கான தவணைகளைச் செலுத்துவதில், அநேகமாக எல்லோருமே ஒழுங்காக இருக்கிறர்கள். இவர்கள், தங்கள் சொந்த நிலத்தில் வேலையில்லாத நாட்களில் எல்லாம், வெளியில் விவசாய வேலைகளுக்கும் மற்றும் ரோடு, ஏரி மராமத்து சம்பந்தமான வேலைகளுக்கும் செல்வதால். அவர்களுக்கு (1) ஆண்,

(7-ம் பக்கம் பார்க்க).

# மக்கள் ஆட்சி

(திரு ஆர். ரங்காச்சாரி)

**அண்ணல் காந்தியடிகளின் ராம ராஜ்ய இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டது தான் இன்றைய பஞ்சாயத்து ஆட்சி முறை என்கிறோம். அது என்ன, எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பனவற்றைப் பலகோணங்களிலிருந்து ஆராய்கிறார் இக் கட்டுரையாளர்.**

அண்ணல் காந்தி, தான் விழைந்த இலட்சிய ஆட்சியை ''இராம ராஜ்யம்'' என்று குறிப்பிட்டார். அத்தகைய ஆட்சியோடு தொடர்புடையது ''கிராம ராஜ்யம்''. இக் கருத்தைப் பல கோணங்களில் ஆய்ந்து தெளிவுறலாம்.

மொழி இயல் :—தமிழ் மொழியில், ஒரு பொருளோடு இனச் சார்புடைய மற்றைய எல்லாப் பொருட்களையும் குறிக்க, ஒரு பொது வழக்கு உண்டு. சுட்டிய பொருளின் பெயரில், முதல் எழுத்து. குறிலாயிருந்தால் அதற்குப் பதிலாக 'கி' என்னும் குறிலைச் சேர்த்தும், முதலெழுத்து நெடிலாயிருந்தால், அதற்குப்பதிலாக 'கீ' என்னும் நெடிலைச் சேர்த்தும் புதிய சொல் ஒன்றைப் படைக்கும் முறையே இது. ''ஏதாவது புத்தகம்—கித்தகம் கொண்டு வா'' ''எங்காவது காலில்—கீலில் படப் போகின்றது'' என்னும் மக்கட் பேச்சு இதற்கு உதாரணம். ''கி'' ''கீ'' என்னும் எழுத்தையே முதலாய் உள்ள சொற்களுக்கு இம் மாற்றம் வராது. இது பற்றி காலம்சென்ற நகைச்சுவை மன்னரான திரு. என். எஸ். கிருஷ்ணன் வேடிக்கையாய்க் கூறுவார், ''நந்தனார்—கிந்தனார், சுந்தரம்—கிந்தரம்; மதுரம்—கிதுரம்' என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் கிருஷ்ணன்—கிருஷ்ணன் என்றுதானே என்னைச் சொல்ல முடியும் !!'' என்று. இவ்வழியில், இராம ராஜ்யமும் கிராம ராஜ்யமும் ஓர் இனமே என்று கொள்ளுவது தமிழ் நாட்டுக்குப் பொருத்தமாகும் அன்றோ !

மக்கள் இயல் :—ஆதியில், கிராமங்களும் காடுகளும் அவைகளில் இருக்கும் பிராணிகளும் படைக்கப்பட்டன என்கிறது ரிக்வேதம். கடவுள் கிராமத்தைப் படைத்தார் ; மனிதன் நகரத்தைப் படைத்தான் என்பதும் ஒரு ஆங்கிலப் பழமொழி. (God made the village; man made the city) ஆகவே நற்பண்புக்கு விளை நிலமாய் இயற்கையாய் இருக்கத் தக்கது கிராமம்; இதுபோல், நகரம் நாகரீகம் என்னும் பெயரால் நரகமாவதும் இயல்பு. மேலும், நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் இன்றும் கிராமங்களிலேயே வாழ்கின்றனர், அவர்களை எல்லாம் நகரங்களுக்கோ—நகர வாழ்வுக்கோ—மாற்றுவது இயலாத காரியம்; இயலுமானாலும், அம் மாற்றம் விரும்பத்தக்கது அன்று. ஆகவே இலட்சிய ஆட்சி வேண்டுவது, முதலில் கிராமத்திலேதான்.

அரசு இயல் :—நமது அன்புக்குரிய ஒருவரிடம் இருந்து நாம், பிரிய நேரும்போது, சாதாரணமாய் என் உடல்தான் இங்கிருந்து போகின்றது, என் உயிரோ, இங்கேயே நிற்கிறது என்று சொல்லுவது வழக்கம். இராமனின் முடிசூட்டு விழாவின் இறுதியில், விழாக் காண வந்த வேறு மன்னர்களும், குடிகளும், விடை பெற்றுத் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பும்போது, உடலை விட்டு விலகும் உயிர்போல் இருந்தனர் என்று வால்மீகி பொது வழக்குக்கு மாறாக, வரைந்துள்ளார். இதில் அடங்கிய தத்துவம் என்னவெனில், இராமனின் நோக்கில், அவன் நண்பர்களும் குடிகளும் அவனுக்கு உயிர்; அவர்களால் வளரும் உடல் போன்றவனே அவன். இதனை, மன்னுயிரைத் தன் உயிர்போல் பேண வேண்டும் என்ற பொது அறத்தின் புதிய அரசியல் விளக்கமாகவும் கொள்ளலாம். இப்படித்தான், கவிச் சக்கரவர்த்தி கம்பர் கண்டு, தன் காவியத்தின் தொடக்கத்திலேயே, தசரத சக்கரவர்த்தியின் மாண்பு என்னும் முறையில் நன்கு விளக்குகிறார்;—

வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினான்
உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்
செயிர் இலா உலகினில், சென்று, நின்று, வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்.
— கம்பராமாயணம்

நடைமுறையிலும், கிராமத்தில் வாழும் மக்களே நாட்டின் உயிர் என்பது, தெளிவு. அவர்களின் உழைப்பால்தானே, வேளாண்மை நடக்கிறது? அவர்கள் அளிக்கும் உணவின்றி, நகர மக்கள் வாழ முடியுமோ! நாட்டு வளமும் காட்டு வளமும் பயன் தரும் விலங்கின் வளர்ச்சியும் அவர்களின் பொறுப்பாகவே உள்ளன. அறம் தாங்கும் அவர்களின் நலம் கோருவதே, நம் நாட்டின் தலையாய கடமை.

''உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து
உழவினார் கைம்மடங்கின்
இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை.''
—குறள்.

ஆட்சிப் பொறுப்புடையவர் கிராம மக்களை எப்படிப் பேண வேண்டும்? இதற்கும் அவர்களிடமிருந்தே கற்றுக்கொள்ளவேண்டும் என்கிருர் கம்பர் :—

"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
'செய்' எனக்காத்து இனிது அரசு செய்கின்ருன்."

[செய்—சிறிய விளை நிலம்.

'நன்செய்' 'புன்செய்' என்ற வழக்குச் சொற்ருெடர் காண்க.]

ஒரே ஒரு சிறு விளை நிலமே உடைய ஓர் ஏழை அதனை எப்படி கண்ணும் கருத்துமாய்க் காப் பாஞே, அப்படி ஓர் அரசு ஒவ்வொரு கிராமத் தையும் காக்கவேண்டும். இதுவே, கிராம ராஜ்ய மாம் இராம ராஜ்யம்.

ஆட்சி முறை :—மக்கள் தங்கள் நலனுக்காகத் தாங்களே தங்களை ஆளும் முறையை சீரிய ஜன நாயக ஆட்சி—மக்கள் ஆட்சி—என்பர். இம் முறை தமிழ் நாட்டு வரலாற்றுக்கு மிகவும் பொருந்தும். பண்டைக் காலத்தில், குறுநிலத் தலைவர்களும், சிறு நில மன்னர்களும், அடிக்கடி, வீரம், பகை போன்ற காரணங்களை முன்னிட்டுப் போர் புரிந்து வந்தனர். ஆயினும், பெரும்பாலும் கிராம மக்களுக்கும், அவர்கள் தொழிலுக்கும், தீங்கு நேராவண்ணம் காப்பர்; மேலும் கிராம மக்கள், தங்கள் அலுவல்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளும்படி ஆட்சி முறை அமைந்து இருந்தது. அதுபோன்ற ஆட்சி, இன்னும் நிலவ வேண்டும் என்பதே, சான்ருேரின் இலக்கு! கனவு!

நற்பயிர் வளர, முதலில் களையெடுக்க வேண்டும். அது போல், நடுக்காலத்தில், கிராமங்களில் புகுந்த தீய ஒழுக்கங்களையும், பகையையும், பொறுப் பின்மையையும், முதலில் போக்க வேண்டும்; இயற்கைச் சூழ்நிலையும், ஓங்கச்செய்ய வேண்டும். சுருங்கச் சொன்னல், கிராமங்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டும்.

இது யாரால் முடியும்? வெளியிலிருந்து வரும் அதிகாரிகளால், அரசியல் கட்சிப் பற்றுடைய வர்களால், முடியாது என்பது, உறுதி. கிரா மங்களிலேயே வாழ்ந்து, உழைத்து பரிவுடன் அம் மக்களின் நலமே கோரும் பண்புடையோரால் தான் முடியும். இதைத்தான் காந்தியடிகள் வற்புறுத்தி வந்தார். இவ் வழியில் முயலுவோர், இன்று இல்லை என்பது, தவருகும்; ஆயினும், மிகச் சிலரே என்பது, வெளிப்படை.

இச்சந்தர்ப்பத்தில், திரு. காமராஜர், சென்ற ஆண்டில் ஒரு விழாவின்போது செய்த விளக் கத்தை உன்னலாம்.

"இராமனைப் போல், எக்கணமும் பதவியை மகிழ்ச்சியுடன் துறக்கவும், பொது மக் களின் நலத்துக்காகத் தன் நலனையெல் லாம், தள்ளிவிடவும் தயாராய் இருப்பவர் களாயும், ஒழுக்கத்தில் விழுமியவராயும், உள்ளவர்களால்தான், நாட்டுக்கு நலன் செய்ய முடியும்."

—காமராஜ் கருத்துரை

எல்லாவற்றையும் திட்டம்போட்டு நடத்துவது தற்போதைய முறை. இப் பொறுப்பை ஏற்றுச் செயல்படுத்துவது, ஒருவரால் இயலாது; தகுதி யுடையவர் சேர்ந்த ஓர் அவையால்—குழாத்தால்தான் முடியும். இந்நிலை, பாரதத்துக்கும், ஒவ்வொரு மாநிலத்திற்கும், கிராமத்திற்கும் பொருந்தும்.

அமைச்சர் அவை (நிர்வாகக் குழாம்);—தசரத மன்னனுக்கு எட்டு அமைச்சர்கள் இருந்தனர் என்று வால்மீகி ராமாயணம் கூறும். இதனை ஆய்வது பயன் தரும். முதல்வருக்குத் "திருஷ்டி" (நெடு நோக்குடையவர்) என்று பெயர். இதனுல் பெறப்படுவது யாதெனில், நாட்டின் நெடுங் கால நலனைக் கருதி, பல விளைவுகளையும் எண்ணி கொள்கையளவில் திட்டம் வகுக்கக் கூடியவரே அவைக்குத் தலைவர். "மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்" என்பது "வெற்றி வேற்கை." ஒவ்வொரு சமயத்தில், அவர் காட்டும் வழி, புதியதாயும், விந்தையாயும் தோன்றலாம். ஆகவே, அதனை புரிந்துகொண்டு, கொள்கை யளவில் ஆதரவு காட்டி, விளக்கம் செய்ய இன்னொருவர் இருக்க வேண்டும்; இப்படியிருந்தார் இரண்டாவது அமைச்சராம் "ஜயந்தன்" (ஊக்கம் அளிப்பவர்) என்பவர். ஒரு திட்டம் கொள்கை யளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும், அதனை அமுலாக்குவதில் பல தடைகள், தடங்கல்கள், கஷ்டங்கள் இருக்குமெனச் சொல்லப்படும். இவைகளை ஆய்ந்து தக்க பரிகாரம் காண்பார் மூன்ருவது அமைச்சராம் 'விஜயன்' (வெற்றிக்கு வழிகாட்டி) என்பவர். பிறகு அது நடைமுறையில் வர, பல விவரங்களும், விதிகளும், முறையும், ஏற் பாடும் செய்யவேண்டும். இதற்குப் பொறுப்பு ஏற்பவர் 'ஸித்தார்த்தர்' ('நாடிய இலக்கில் சேர்ப்பவர்') என்னும், நான்காவது அமைச்சர்.

பொருளின்றி அமையாது, எத்திட்டமும் அன்ருே? வேண்டிய நிதிக்கு வழி செய்பவர் 'அர்த்தஸா தகர்' (நிதி அமைச்சர்) என்னும், ஐந்தாவதாம் நடு அமைச்சர். இப்படி வேண்டியதற்கு எல்லாம் வகை செய்து, ஒரு திட்டம் நடைபெறும்போது பல காரணங்களால் எதிர்க்கட்சியினரால் எதிர்

பாராத உற்பாதங்களால்—எதிர்ப்பும் விரோதமும் தோன்றலாம்; இதன் விளைவாக நிர்வாகத்தில் உள்ளவர்களின், மனம் அயரலாம்; அப்போது அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இப் பொறுப்பைத் திறம்படச் செய்வார் 'அசோகன்' (அயர்விலான்) என்னும், ஆறுவது அமைச்சர்.

ஒரு திட்டம் உருவாகும்போதும், தடைகளுக்கு மாற்றம் காணும்போதும் பல யோசனைகள் செய்யப்படும். இவைகளை உரிய காலம் வரையில் இரகசியமாய் வைத்துக்கொள்ளவேண்டியது மிக்க அவசியமாகும். இதைக் கவனித்துக்கொள்வார், ஏழாவது அமைச்சராம் "மந்திரபாலர்" (இரகசியம் காப்பவர்). அவரவர்களின் தனிவிருப்பு, உற்சாகம் காரணமாகவும், குண வேறுபாட்டாலும் கருத்து வேற்றுமை எழுவது இயல்பு; எல்லோரும் இணங்கி, ஒத்துழைக்கும்படிச் செய்வதே, இறுதியான எட்டாம் அமைச்சரின் பொறுப்பு; அவர் பெயர் "ஸுமந்திரன்" (நல் ஆலோசகர்).

இக்கால முறையில், இந்த அமைச்சர்களைப் பின்வருமாறு அழைக்கலாம்:—முதல் அமைச்சர் (திட்ட அமைச்சர்) (Chief Minister and Minister for Planning), உப முதல்வர் (Deputy Chief Minister), சிறப்பு அமைச்சர் (Special Minister And Trouble Shooter) நிர்வாக அமைச்சர் (Minister for Implementation) நிதி அமைச்சர் (Finance Minister) உள்துறை அமைச்சர் (Minister for Home Affairs and Public Services), செய்தி—பொது மக்கள் தொடர்பு அமைச்சர் (Minister for Information and Public Relations), இணக்க அமைச்சர் (Minister for Co-ordination).

இவ்வமைப்பில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது ஒன்று உளது; அமைச்சர்கள் எல்லோருக்கும், ஆட்சி விஷயங்கள் அனைத்துக்கும் பொதுப்பொறுப்பு; ஆட்சித் துறைகள் வகையில் தனிப் பாகுபாடில்லை. அவரவர்கள் தகுதிக்கேற்ப ஒவ்வொரு வகையில் எல்லா விஷயங்களுக்கும் பொறுப்பு ஏற்பு உள்ளது. இம்முறை, இக் காலத்திலும் பற்றப்படலாம் என்றே தோன்றுகிறது. முக்கியமாய், கிராம நிர்வாகம் இப்படி அமையலாம்.

இன்னொரு குறிப்பு:—மேற்கண்ட அமைச்ச அவைக்குப் புறம்பாக, வேண்டும்போது அரசனுக்கு (தலைவனுக்கு) ஆலோசனை கூற, அறிவு புகட்டத் தக்க ஒரு சான்றோர் குழாம் இருந்தது. அதில் சேர்ந்தவர்கள், பற்றற்ற ஞானியார், முனிவர் இத்தகைய குழாமும் இன்று வேண்டியதுதானே?

முடிவுரை:—ஆட்சியின் இலக்கும், முறையும், பொதுவாக நாட்டிற்கும் சிறப்பாக கிராமங்களுக்கும், பழைய மரபை ஒட்டி, எப்படி அமையலாம் என்பதைக் கருத்தளவில் ஓரளவு மேலே காட்டப்பட்டது. கிராம நலனுக்கு வேண்டிய திட்டங்கள் ஒவ்வொன்றும், எம்முறையில் இருந்தால், மிக்க பயன் விளையலாம் என்னும் விஷயத்தை இனி விவரமாய் ஆராயலாம்.

ஒன்று மட்டும் மனத்தில் நன்கு கொள்ள வேண்டும். இக் காலத்தில் மக்கள் ஆட்சி என்பது சில மக்களோ, பலரோ, பிற மக்களை ஒடுக்கத் தாங்களே வகுத்துக்கொள்ளும் முறையாய்த் திரிந்துள்ளது என்று "ஆஸ்கார் ஒயில்ட்" (Oscar Wilde) என்னும் ஆங்கில அறிஞர் வருந்தினன். அந்நிலை பரவக்கூடாது. மேலும் "ஒவ்வொரு மனித உள்ளத்திலும், ஒரு கொடிய வேங்கை உறைகின்றது, அது எப்போதும் இரை தேடி அலைகின்றது; எந்த இரையையெனில், பிறரை அடக்கி ஆளவேண்டும்; எப்பொழுதும் அவர்கள் தனக்குப் பணிவுடன் மரியாதைக்கப்பம் செலுத்தவேண்டும் என்பதையே தேடித்திரிகிறது. இதற்காகவே, ஒவ்வொரு மானிடனும், இனியவை பேசுகிறான்; கொடை வழங்குகிறான்; 'பொது நலனே, தமது லட்சியம்' என்று பறை சாற்றுகிறான்" என்று, இன்னொரு ஆசிரியர் கூறியுள்ளார். இதைப் பொது மக்கள், முக்கியமாக, கிராம மக்கள் கருத வேண்டும்; ஆயினும், எல்லோரும் தீயவரே என்று கொள்ளக்கூடாது. தீமைகளைக் களைந்து, சமுதாயத்துக்கு நன்மை பயக்கும் பொதுத் தொண்டுகளில் ஒற்றுமையோடும் உற்சாகத்தோடும் ஈடுபட்டு உழைக்க வேண்டியது அவசியம்.

---

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

1 பெண்ணுக்குச் சேர்த்து) தினசரி ரூ. 2 ஊதியம் கிடைக்கிறது. இந்தச் சொற்ப வருமானத்தின் மூலம், ஏதோ உபாயமாக வாழ்க்கையைச் செலுத்தும் அவர்கள், தங்கள் நிலத்தில் மொத்தமாக மாசூல் வருமானம் கிடைக்கும்போது, அதை தங்கள் முக்கிய செலவினங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதோடு, கடன் தவணைகளையும் அதிகச் சிரமமின்றி செலுத்துகிறார்கள்.

கடன்கள் விநியோகமும், வசூலும், சங்கத்தின் மூலம் நடக்கிறது, ஆகவே சங்கக் கணக்கு புத்தகங்களின்படி, மொத்தமுள்ள 42 உறுப்பினர்களில், 1964-ம் ஆண்டு, நவம்பர் இறுதியில், தவணைகள் கட்டாமல் இருப்பவர் இரண்டே இரண்டு உறுப்பினர்கள்தான்.

வெளியாரைக் கவரும் அளவு வெற்றி

காரணைப்புதுச்சேரி நிலக்காலனி சங்கம் தோன்றி இவ்வளவு பயனுள்ள பணி செய்து வருவதையும், அதனால் பலர் நல்ல பலன் அடைந்துள்ளதையும் பார்த்து, வெளியிலிருந்து சிலர் இங்கு வந்து புதிதாகக் குடியேறி இருக்கிறார்கள். ஏற்கனவே நெடுங்காலமாக அவதியுற்றவர்களுக்குப் புது வாழ்வளிக்க, மேற்கொள்ளப்பட்ட இத் திட்டத்தில் புதியவர்களுக்கு இடமில்லைதான். ஆனால், வெளியாரைக் கவர்ந்திழுக்கும் அளவுக்கு, திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதற்கு இதை விடவேறென்ன சான்று வேண்டும்?



# குறளுக்குத் தலைவன்


தெசிணி, பி.காம். (ஆனர்ஸ்)

*ஆசிரியர் "கவிதை".*


O

திருக்குறளோர் சித்தாந்தம் ; வாழ்க்கைக் காட்டி ;
தென்குளத்தில் குளித்தெழுந்த அறிவுப்பேழை ;
திருக்குறளோர் தத்துவமே — ஐயம் வேண்டாம் ;
தரணியிது திசை தெரிந்து செல்லு தற்கு ;
திருக்குறளோர் கலங்கரையின் விளக்கம் போன்றும் ;
தெய்வமென மானிடரை உயர்த்தும் ஏணி ;
திருக்குறளோர் பிராணவாயு ; அதனை ஏற்கார்
உயிர்வாழார்—தினஞ்செத்துக் கொண்டிருப்பார் !

காந்திஜி ஓர் சித்தாந்தம் ; வாழ்க்கைக் காட்டி ;
தியாகத்துள் புடைத்தெழுந்த அமர மேனி ;
காந்திஜி ஓர் தத்துவமே — ஐயம் வேண்டாம் ;
தரணியிது திசை தெரிந்து கொண்டதாலே
காந்திஜி ஓர் கலங்கரையின் விளக்கம் போன்றும் ;
தெய்வமென மாந்தருக்குள் உயர்ந்த ஜீவன் ;
காந்திஜி ஓர் பிராணவாயு ; அதனை உண்ணும்
பாரதமே பார்க்குள்ளே திலகம் ஆகும் !

உள்ளத்தால் பொய்க்காமல் இருந்து விட்டால்
உலகத்தார் உள்ளத்தில் இருப்பாரென்னும்
வள்ளுவரின் குறளொன்றே போது மென்போம் ;
வாழ்கின்ருர் இம்முறையில் காந்தி இன்றும் !
வள்ளுவரும் இதன் மூலம் காந்தி கண்டார்
வரலாற்ருர் குறளுக்கோர் தலைவன் கண்டார் !
தெள்ளுகுறள் வாழ்வாங்கு வாழ்வான் தெய்வம்
என்றதற்கும் காந்தி ஓர் உருவமன்ருே ?

O

## காட்டு வளம்

தமிழ் நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 16·2 சதவீதப் பகுதியில்தான் காடுகள் அடங்கியுள்ளன. கணக்குப் படிப் பார்த்தால், மொத்த நிலப் பரப்பில் 33 சதவீதம் காடுகளாக இருக்க வேண்டும். காட்டு வளப் பற்ருக்குறையை நீக்குவதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு காட்டு வளம் பற்றிய அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. கிராம நலக் காடுகள் வளர்ப்பு ஆறுகள், கால்வாய்கள் கரை நெடுக மரம் நடுதல் போன்ற திட்டங்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் ஒதுக்கக் காடு களுக்கு வெளியே காட்டுவள வேலை களை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. காட்டு வளத்தை அடிப் படையாகக் கொண்ட தொழில்கள் அண்மையில் நமது மாநிலத்தில் பெருகியுள்ளன. இதனுல், மிலாறு, மூங்கில், கற்பூரம், மென்மரம் முதலிய பொருளாதார வர்த்தக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை வளர்ப்பது பன்மடங்கு அவசியமாகி யுள்ளது.

காட்டு வளத்தினைத் தகுந்த அளவில் அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றி மூன்ருவது திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. காடுகள் நிலத்தைப் பாதுகாக்கின்றன. வெட்டு மரங்கள், மூங்கில், இதர பொருட்கள் உற்பத்தியினை அதிக பட்ச அளவு அதிகரிப்பதும், நகரங்களிலும் கிராமங்களிலும் பெருகிவரும் தேவை களுக்கும் காட்டுப் பொருள்களை அடிப் படையாகக் கொண்டுள்ள தொழில் களில் தேவைகளுக்குமான காட்டு வளப் பொருட்களை உற்பத்தி செய் வதில் தன்னிறைவு பெறுவதும் மூன்ருவது திட்டத்தின் முக்கியமான நோக்கங்களாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற மூன்ருவது திட்டத்தில் ரூ. 212 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்ருவது திட்ட வேலைகள் பற்றி முடிவு செய்த பிறகு ரூ. 26 லட்சம் செலவில் 2,000 ஏக்கரா பகுதியில் ரப்பர் மரங்களைப் பயிரிடுவதற்கான திட்டத்தை மேற்கொள்ளவும் திட்ட மிடப்பட்டது. தேசிய நெருக்கடியை யொட்டி, ரப்பர் மரங்கள் வளர்ப்பின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. எனவே, ரப்பர் மர வளர்ப்புக்குக் காட்டு வளத் திட்டங்களை நிறை வேற்றும் வேகமும் துரிதமாக்கப் பட்டுள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்ருெரு வேலை, விரைவில் வளரும் யூகலிப்டஸ் போன்ற மரங்களை செங்கற்பட்டு, வடற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் ரூ. 2·5 கோடி செலவில் வளர்க்கும் திட்ட மாகும். இத் திட்டம் முதலில் திட்டத்தில் சேர்க்கப்படவில்லையாயினு லும், சென்னை மாநகரின் பெருகி வரும் எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசியமாகியுள்ளது.

நம்பத் தோன்றுதுதான்

ஆனால்

நடந்த சம்பவம்

# அன்புக்கு அடிபணிந்த செல்வச் செருக்கு

பாரதம் முழுவதிலும், மிகச் சிறந்த கிராமப் பஞ்சாயத்தென, 1962-ல் தேர்ந்தெடுக்கப் பட்ட மேலூர் பஞ்சாயத்தின் அருஞ் சாதனைகள் பல. இவற்றிற் கெல்லாம் முக்கிய காரண கர்த்தாவாக விளங்குபவர் சலியா உழைப்பும், குன்றா ஆர்வமும், உயர் பண்புகளும் கொண்ட பஞ்சாயத்துத் தலைவர்தான்.

கேரளம் முழுவதும் பொதுவாகக் காணப்படும் இயற்கை எழில், மேலூர் பஞ்சாயத்துப் பகுதியில் மேலும் சிறப்புற இருப்பதை அங்கு செல்லும் எவரும் கண்டு களிக்கலாம். வானுர உயர்ந்த தென்னை, பாக்கு மரங்கள், வாழை, மற்றும் மிளகுக் கொடிகள், முதலியவை கண்ணுக் கெட்டிய தூரம் செழித்து வளர்ந்திருப்பதைக் காணும் எவரும் அந்தக் கொள்ளை அழகில் மனதைப் பறி கொடுப்பர்.

இந்த அழகையெல்லாம் ரசித்தபடி மோட்டார் காரிலோ பிற வாகனத்திலோ செல்ல முடிகிறதென்றால், அதற்குரிய சாலை வசதி அங்கு இன்று இருக்கிறதென்றால், அந்தச்சாலை ஏற்பட்டதே ஒரு தனி கதை—சுவையுள்ள கதை.

மேலூர் கிராமத்திற்குச் சாலை போடும் வேலை மேற்கொள்ளப்பட்டபோது, சாலை செல்லும் வழியில் நிலம் வைத்திருந்தவர்கள் எல்லாம் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால், ஊருக்குச் சாலை வசதி எவ்வளவு அவசியம் என்பதை, நயம்பட எடுத்துரைத்த பஞ்சாயத்துத் தலைவர், அவர்களது மனதை மாற்றுவதில் வெற்றி கண்டார். எனவே அக்கிராம மக்கள் எல்லாம், சாலைக்கு வேண்டிய அளவு தங்கள் நிலப்பகுதிகளை விட்டுத் தந்தது மட்டுமல்ல, சாலை போடும் திட்டம் நிறைவேற அவர்கள் உழைப்புத் தானமும் அளித்தனர்.

**இரண்டு பர்லாங்**

சாதாரண மக்கள் எல்லாம் இவ்வளவு பரந்த மனப்பான்மையுடனும் பொது நோக்குடனும் நடந்து கொண்டிருக்க, அவ்வூரிலேயே மிகப் பெரிய பணக்காரரான நிலச்சுவான்தார் ஒருவர் மட்டும் சாலை போடுவதற்கான தம் நிலப்பகுதியைத் தர மறுத்துவிட்டார். அவருக்கு ஏராள நிலம் இருந்தது. அதற்கேற்ப, அவர் நிலத்தில் மட்டும் இரண்டு பர்லாங் நீளத்திற்குச் சாலை போட வேண்டியிருந்தது. ஆனால் அவரோ, "நிலம் கிணறு எல்லாம் என்னுடைய சொந்த உடமை. இதை நான் ஏன், மற்றவர்களது நன்மைக்காக விட்டுத்தர வேண்டும்?" என்று வாதம் புரிந்து வந்தார். அவர் பிடிவாதம் தளரவில்லை. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர், தம்மால் இயன்ற அளவு முயற்சித்துப் பார்த்தும், பலன் கிட்டவில்லை. அந்தப் பணக்காரரிடமிருந்து இம்மியளவும் நிலம் வாங்க முடியவில்லை. நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.

**அவர் தலைக்கே வந்தது வினை!**

ஒருநாள், அந்த ஆணவம் பிடித்த நிலச்சுவான்தார் குளித்துக் கொண்டிருக்கையில், தரை வழுக்கிக் கீழே விழுந்தார். தலையிலும் கைகால்களிலும் காயம் அடைந்தார். செய்தி கேட்ட பஞ்சாயத்துத் தலைவரும் இதர உறுப்பினர்களும் விரைந்து வந்தனர்.

ஆம்புலன்ஸ் கார் வரவழைக்கப்பட்டது. ஆனால் அடிபட்டுக்கிடந்த பணக்காரரது வீட்டுவரை கார் செல்ல முடியவில்லை. எப்படி முடியும்? ஊருக்குத்தான் ரோடு வசதி கிடையாதே! எனவே, அவரது வீட்டிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்திலேயே கார் நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், காயமுற்றவரைக் கார் உள்ள இடத்திற்கு தூக்கிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் 250 பவுண்டுக்கும் அதிகமாக எடையுள்ள அந்த நபரை யார் தூக்குவது? அங்கு சூழ்ந்திருந்த பலரும், உறவினரும் கூடத் தயங்கினர். திடீரென முன்வந்தார் பஞ்சாயத்துத் தலைவர். அவரைப் பார்த்து மற்றவர்களும் அவரது துணைக்குவந்தனர். செல்வந்தர் காரில் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்.

ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெற்று பூரண குணமடைந்த நிலச்சுவான்தார் வீடு திரும்பினார். வீடு திரும்பியதும் அவர் செய்த முதல் காரியம்—பஞ்சாயத்துத் தலைவருக்குச் சொல்லியனுப்பினார். அவர் வந்ததும் சாலையின் இரண்டு பர்லாங் நீளத்திற்கு வேண்டியிருந்த தமது நிலப் பகுதியைத் தானமாக வழங்கினார். அதோடு ரோடு வேலையைப் பூர்த்தி செய்வதற்காக ரொக்க நன்கொடையாக ரூ. 101 அளித்தார்.

பணக்காரரின் செல்வச் செருக்கு பஞ்சாயத்துத் தலைவர் காட்டிய பேரன்புக்கு அடிபணிந்தது.

# கிராமப்புற தொழில் பேட்டை

முதலீடு அதிகம் அல்ல

நிச்சயமான மார்க்கெட்

கணிசமான வருமானம்

150 பேருக்கு வேலை வாய்ப்பு

உத்திரப்பிரதேச மாநிலத்தில் முதல் கிராமப் புறத் தொழிற்பேட்டை தேவ்பந்த் என்றவிடத்தில் ஆரம்பிக்கப்பட்டு, வெற்றிகரமாக இயங்கி வருகிறது. சஹரான்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தேவ்பந்த் நகரமுமல்ல, கிராமமுமல்ல—ஒரு நடுத்தரமான ஊர். ஆனால் இது, பண்டைக்காலத்தில் அராபிய கல்விக் கேந்திரமாக விளங்கியதால் வரலாற்றுப் புகழ்பெற்றது. அந்த ஊர் மக்களின் பொருளாதார வாழ்வில், இந்தத் தொழில் பேட்டையின் மூலம், ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்தத் தொழில் பேட்டை வெற்றிகரமாக நடந்துவருவதால், இதை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு, மாநிலத்தில் இதேபோல் பல கிராமப்புறத் தொழிற்பேட்டைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

### தொழில்கள் தேர்வில் விசேட கவனம்

இப்போது தேவ்பந்தில் உள்ள தொழில் பேட்டையில் 30 சிறு தொழில்களுக்குத்தான் வசதியிருக்கிறது. இதில் 26 தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகின்றன. மற்ற நான்கு தொழில்களுக்கான இயந்திரங்கள் பூட்டப்பட்டுவருகின்றன. விரைவில் அங்கு உற்பத்தி தொடங்கிவிடும். என்ன தொழில்களை நடத்துவது என்பதில் தக்க கவனம் செலுத்தப்பட்டது. அதாவது எத்தகைய பொருட்களுக்கு நிச்சயமான மார்க்கெட் கிடைக்கும் என்பதைக் கவனித்து, அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தொழில்கள் மூலம் தகர டப்பாக்கள், விவசாயக் கருவிகள், மோட்டார் சாமான்கள், குழாய்கள், அளவெடுக்கும் 'டேப்'புகள், டிரங்குப் பெட்டிகள், வாளிகள், 'வொயர்' கம்பிகள், சர்வே எடுத்தல், படம் வரைதல் சம்பந்தப்பட்ட கருவிகள், மரஸ்குரூக்கள், மலிவு நகைப்பொருட்கள் முதலியன செய்யப்படுகின்றன.

இத்தகைய தொழில்கள் அடங்கிய இந்தத் தொழில் பேட்டையில் சுமார் 150 பேர்கள் வேலை செய்கின்றனர். எனவே, பெரிதும் விவசாய மக்கள் அடங்கிய இந்தப் பகுதியில், தொழில் பேட்டையின் பலனைப் புதிய முறையில் தங்கள் வாழ்க்கைக்கான வருவாய் பெற அம்மக்களுக்கு வழி ஏற்பட்டிருக்கிறது.

### அரசாங்க உதவிகள்

தொழில் பேட்டையில் சிறு சிறு தொழில் நடத்தும் அனைவருக்கும் தொழிற்சாலை கட்டிடம், மின்சாரம், தண்ணீர், ரோடுகள், கச்சாப் பொருட்கள் முதலிய வசதிகள் அளிக்கப்படுகின்றன. பிரதான நெடுஞ்சாலையில் உள்ள இத்தொழில் பேட்டை தேவ்பந்த் ரயில் நிலையத்திற்கு அருகாமையிலும் அமைந்திருக்கிறது. எனவே தொழில்களுக்கு வேண்டிய பொருட்களை வரவழைக்கவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளி இடங்களுக்கு அனுப்பவும் சௌகரியமாய் இருக்கிறது. தேவையான வசதிகள் எல்லாம் பொருத்தமாக அமையப்பெற்ற இக்கிராமப்புறத் தொழில் பேட்டை, மற்ற பிராந்தியங்களுக்கு ஒரு முன்மாதிரியாக, வெற்றி நடைபோட்டு வருகிறது.

## பஞ்சாயத்துக் கூட்டங்களுக்கு மாவட்ட அதிகாரிகள்

மாவட்ட மட்டத்தில் உள்ள அதிகாரிகள் அனைவரும் தத்தம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் கூட்டங்களுக்கு குறைந்த பட்சம் இரண்டு முறையாவது சென்று வரவேண்டும் என்று ராஜஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. பல்வேறு திட்டங்கள் சம்பந்தமாக மாவட்ட அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்குமிடையே ஒருங்கிணைப்புப் பாங்கு மேலும் வளர்வதற்காக இந்தத் தொடர்பு அவசியம் என அரசாங்கம் கருதுகிறது, இதன்படி யூனியன் மன்றக் கூட்டங்களுக்குச் செல்லும் மாவட்ட அதிகாரிகள், தாங்கள் ஆங்காங்கு சென்று வந்தது சம்பந்தமாகவும் யூனியன்களில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் குறித்தும் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களுக்கும், மாவட்ட அபிவிருத்தி அதிகாரிக்கும் அறிக்கை அனுப்புவார்கள். மாவட்ட அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரும்போது யூனியன் கமிஷனர் மட்டுமல்லாமல், விஸ்தரிப்பு அலுவலர்களும் உடன் இருந்து மாவட்ட அதிகாரியிடமிருந்து அவர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆலோசனை பெற்றுக் கொள்வார்கள்.

# நிலமிருக்கப் பயம் ஏன்?

**பலவாருகப் பாடுபட்டும், தமது பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் அவதியுற்று வந்த ஒரு விவசாயி, கடைசியில் தமக்குச் சொந்தமான சிறிது நிலத்தைக் கொண்டே தம் வருவாயைப் பெருக்குவதென முடிவு செய்து, அவ்விதமே செயல்பட்டு, அபார வெற்றி கண்ட சுவையான கதையைக் கூறுகிறது இக்கட்டுரை.**

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சிறு கிராமம் மதியால். அங்கு மல்காஜப்பா என்ற விவசாயி வசித்து வருகிருர். அவருக்குச் சொந்தமாக நான்கு ஏக்கருக்கும் சற்று அதிகமான நிலம் இருக்கிறது. இந்த நிலத்தில் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு, 11 பேர் கொண்ட தமது பெரிய குடும்பத்தைப் பராமரிப்பது மல்காஜப்பாவுக்கு மிகவும் கடினமாக இருந்தது. நான்கு ஏக்கர் நிலம் என்ருல், அதிலும் பெரும்பகுதி நீர்ப்பாசன வசதியில்லாமல் வரண்டு கிடந்தது. எனவே சீரான, முழுமையான விவசாயம் செய்ய முடியவில்லே. மல்காஜப்பாவின் நான்கு பிள்ளேகள், விவசாயத் தொழிலாளர்களாக மற்றவர்களது நிலங்களில் வேலே செய்து வந்தார்கள். அவர்கள் அப்படிச் சம்பாதித்து வந்துங்கூட, குடும்பத்திற்குப் போதவில்லே. பற்ருக்குறை நிலேமை நீடித்து வந்தது.

**வாரத்திற்குப் பயிரிடவும் நிலம் தருவாரில்லே**

நான்கு பிள்ளேகளே, விவசாயத் தொழிலாளர்களாக வேலேக்கு அனுப்புவதைவிட, வேறு யாரிடமிருந்தாவது கொஞ்சம் நிலத்தை 'வாரத்'திற்கு எடுத்துப்பயிரிட்டால், அந்த நிலத்தில் தம் பிள்ளேகளேப் பாடுபடச் செய்தால், சிறிது அதிக வருமானம் கிடைக்குமே என எண்ணிஞர் மல்காஜப்பா. எனவே பல நிலச்சுவான்தார்களே அணுகி, அவர்கள் நிலங்களில் ஒரு பகுதியைத் தம்மிடம் 'வாரத்'திற்கு விடும்படி கேட்டார். ஆனல் ஒருவராவது இணங்கவில்லே. காரணம், ஏர்வாரம், குடிவாரம் போன்றவை சம்பந்தமாக உள்ள சட்டப் பாதுகாப்பை, வேறு பலரைப்போல மல்காஜப்பாவும் நாட ஆரம்பித்தால், அது தங்களுக்குப் பாதகமாக முடியும் என்று நிலப்பிரபுக்கள் அஞ்சினர்.

இந்நிலேயில் மல்காஜப்பாவுக்கு ஒன்றும் தோன்றவில்லே. வெளியார் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை அறவே ஒழிந்து விட்டது. இனி என்ன செய்வது? ''சுய உதவியே சிறந்த உதவி'' என்ற முதுமொழி நினேவுக்கு வந்தது. அதன்படியே நடப்பதென மல்காஜப்பாவும் அவரது பிள்ளேகளும் முடிவுக்கு வந்தனர். தங்களுக்கு ஏற்கனவே சொந்தமாக உள்ள நிலத்திற்குப் போதுமான நீர்ப்பாசன வசதி செய்து விவசாயம் செய்தால், அந்த நிலத்திலேயே நல்ல மாசூல் கிடைக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையால் தங்கள் நிலத்தில், தங்கள் உழைப்பின் மூலமே கிணறு தோண்டுவதென முடிவு செய்தனர்.

**பூமி அன்னே அருள் புரிந்தாள்**

கிணறு எடுத்து, தண்ணீர் கிடைத்து விட்டால் போதும், பூமி அன்னே அருள் புரிவாள், பசுங்கதிர்களே வாரி வழங்குவாள் என்ற நம்பிக்கையோடு உற்சாகத்தோடு குடும்பம் முழுவதும் கிணறு தோண்டும் வேலேயில் தீவிரமாக ஈடுபட்டனர். இரவென்றும் பகலென்றும் பாராமல் பாடுபட்டனர். பலனும் கிடைத்தது. கிணற்றில் தண்ணீர் வரத்தொடங்கியதும் அதைக்கண்ட மல்காஜப்பாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லே. துள்ளிக்குதித்துக் கூத்தாடினர். ஆம், அந்நாள் அவரது வாழ்விலேயே ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய நாள் அல்லவா?

கிணற்றுப்பாசனம் மூலம், மல்காஜப்பா எழுப்பிய பயிர், முதல் ஆண்டில் அவ்வளவு நல்லபலன் தர

வில்லை. ஆனால், மேட்டுப்பாங்கான தம் நிலப் பகுதிகளை நிரவி சமன்படுத்தி, எல்லா இடங்களுக்கும் எளிதாக நீர்பாயும்படிச் செய்தார். அதோடு திருந்திய விவசாய முறைகளையும் கடைப்பிடித்தார். மிளகாய், கரும்பு முதலியவற்றில் மிகவும் கணிசமான மாசூல் கிடைத்தது.

### வருமானம் 10 மடங்காக பெருகியது

கிணறு எடுத்துப் பாசன வசதி கிடைப்பதற்கு முன், மல்காஜப்பாவின் வரண்ட புஞ்சை நிலங்களில் சுமார் ரூ. 300 அளவுக்குத்தான் வருமானம் கிடைத்து வந்தது. இப்போது ரூ. 3,000 அளவுக்கு வருமானம் பெருகிவிட்டது. குடும்பத்தினர் அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். போதுமான வருவாய் கிடைக்கிறது என்பது மட்டுமல்ல. அன்றாட கூலியத்திற்காக வெளியார் நிலங்களுக்குச் சென்று வேலை செய்வதோ, வாரத்திற்குப் பயிரிட, யார் நிலமாவது கிடைக்குமாஎனத் தேடி நிற்பதோ அவசியமில்லாமல், குடும்பத்தில் வேலை செய்யக்கூடிய அனைவருக்கும் தங்கள் சொந்த நிலத்திலேயே வேலை வாய்ப்பு கிடைத்து விட்டதும் அவர்களுக்கு மனநிறைவைத் தருகிறது.

### புதிதாக 10 ஏக்கர்

திருந்திய, நவீன விவசாய முறைகளால் உடனடி பலன் கிடைக்கிறது என்பதை மல்காஜப்பா கண்டு கொண்டார். ஆகையால் புதிய, புதிய முறைகளையெல்லாம் அவர் கையாண்டு வருகிறார். மாசூலும் பெருகி வருகிறது. இந்தக் கூடுதல் வருமானத்தைக் கொண்டு, மூன்று ஜதை உழவு மாடுகள், பல நவீன விவசாயக்கருவிகள், மற்றும் தம் நில அபிவிருத்திக்கு அத்தியாவசியமான பல பொருட்கள் ஆகியவற்றை வாங்கியிருக்கிறார்.

இத்தகைய வசதிகள் ஏற்பட்ட பிறகு, விவசாயத்தை மேலும் பெரிய அளவில், செய்ய விரும்பிய மல்காஜப்பா, புதிதாக 10 ஏக்கர் நிலம் வாங்கினார். ஏற்கெனவே இருந்த 4 ஏக்கர் நிலத்தை ஒட்டியே புதிய நிலங்களும் அமைந்தது அவருக்குச் சௌகரியமாக இருந்தது. ஆனால் மொத்தம் இப்போது 14 ஏக்கர் ஆகிவிட்டதால், இந்த நிலம் முழுவதற்கும் நீர்ப்பாசன வசதியளிக்கும் பிரச்னையை அவர் சமாளிக்க வேண்டியதாயிற்று. பம்பு செட் ஒன்றைப் பொருத்தினால்தான் முடியும் என்பதை உணர்ந்துள்ள அவர், பம்பு செட் வாங்குவதில் இப்போது குறியாக உள்ளார்.

### செழித்து வளர்ந்த இனிய காட்சி

நான்கு ஏக்கருக்கும் அதிகமாக, சொந்தமாக நிலம் வைத்திருந்தும் குடும்பத்தைப் பராமரிக்க முடியாமல், பலவாறு அவதியுற்று வந்த மல்காஜப்பா, "நமக்கென்று நிலமிருக்கப் பயம் எதற்கு?" என்று இறுதியாக முடிவு செய்து, உறுதியுடன் பாடுபட்டு வெற்றி கண்டதும், இன்று 14 ஏக்கர் நிலத்தின் சொந்தக்காரராக, நல்லதொரு விவசாயியாகத் திகழ்வதை, அதன் ரகசியத்தை அவரைச் சூழ்ந்துள்ள பலரும் உணரத் தலைப்பட்டனர். அவரைப்போன்றே, தங்கள் புஞ்சை நிலங்களில் பசுமை தழையச் செய்துள்ளனர். மல்காஜப்பாவைப்போல் 12 பேர் கிணறு எடுத்துப் பலன் அடைந்துள்ளனர். அவற்றில் 6 கிணறுகளுக்குப் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த தீவிர முயற்சிகளால், காய்ந்து வெளுத்துக்கிடந்த நிலங்களெல்லாம் இன்று செழித்த பயிர்களுடன் இனிய காட்சி தருகின்றன.

---

## பாலை நிலத்தில் பசுமை குலுங்குகிறது

பஞ்சாப் மாநிலத்தின் பாலை நிலம் என வழங்கப்பெற்று வந்த ஹரியானா என்ற பிரதேசம், தேச சுதந்திரத்திற்குப் பிறகு, புது வாழ்வு பெற்று மிளிர்கிறது. இந்தப்பகுதி பெரும்பாலும் மணற்பாங்காக, கரம்பாக காய்ந்து வரண்டு கிடக்கும். இத்தகைய இடத்தில் இன்று பயிர்கள் செழுமையாக வளர்ந்து அபரிமிதமான மாசூல் கிடைக்கிறது. இந்த அதிசய மாற்றம் எப்படி நிகழ்ந்தது ? நமது பாரத அரசாங்கம், தனது ஐந்தாண்டுத் திட்டங்களில் முதன் முதலில் நீர்ப் பாசனத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது தான் காரணம். அத்தகைய திட்டங்களில் ஒன்றாக உருவாகிய பக்ரா அணையினால், தாராள நீர்ப் பாசன வசதி கிடைக்கப்பெற்ற ஹரியானா பகுதியும் இன்று வளம்புடைத்து நிற்கிறது.

இதே போல், மேற்கு யமுனை கால்வாய் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு ரெவாரி பாசனத்திட்டம் பூர்த்தியடையும்போது, கங்குவான், மோகிந்தர்கார் ஆகிய பகுதிகளில் உள்ள மணல் நிறைந்த கரம்பு நிலங்களும் வளமடையும்.

ஹரியானா பிரதேசத்தில், கடந்த 12 ஆண்டுகளில் உணவு தானியம், பருத்தி, கரும்பு முதலிய பயிர்களின் உற்பத்தி மிகவும் பெருகியிருக்கிறது. 1950–51-ல் உணவு தானிய உற்பத்தி 11·86 லட்சம் டன்னாக இருந்தது. அது 1962-63-ல் 25·66 லட்சம் டன்னாக அதிகரித்தது. அதாவது 125 சதவிகித உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் பருத்தி (பஞ்சு) உற்பத்தி 50,000 பேல்களில் இருந்து 1,49,000 பேல்களாக அதிகரித்திருக்கிறது. கரும்பு உற்பத்தியும் 134 சதவிகிதம் பெருகியிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம், அரசாங்கம் ஏற்படுத்தித் தந்த நீர்ப்பாசன வசதிதான். அந்த வசதி கிடைத்த உற்சாகத்தில் விவசாயிகளும் பாடுபட்டார்கள், பலன் கண்டு வருகிறார்கள்.

## ஆயிரம் கோடி அளிக்கும் —
# கால்நடைச் செல்வம்

**இந்தியாவில் கால்நடைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்தபோதிலும், தேசியப் பொருளாதாரத்தில் அவற்றின் பங்கு அதற்கேற்பதாக இல்லை. எனவே, கால்நடை வளர்ப்புத் திட்டங்களுக்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் முக்கிய இடம் அளிக்கப்பெற்று, அவற்றின் அபிவிருத்திக்கென பெருந் தொகை ஒதுக்கப்பெற்றுள்ளது. இத்துறையில் காணப்பெற்றுள்ள சாதனைகளை விவரிக்கிறது, இக்கட்டுரை.**

கால்நடைகள் முறைப்படியாகப் பராமரிக்கப்பட்டு வருகிற நாடுகளில், நிலம் வளம் பெற்று, மக்கள் உடல்நலம் மேம்பட்டு நாடு முழுவதுமே சுபிட்சநிலை எய்தப்பெறும் என்பது மூதுரையாகும். நாட்டின் பொருளாதாரக் கட்டுக்கோப்பில் விவசாயத்துறை மையமாகவும், விவசாயத்துறை அபிவிருத்தியில் கால்நடைகள் பராமரிப்பு மையமாகவும் அமைந்திருக்கும். இந் நாட்டுக்கு, இக்கூற்று மிகவும் பொருந்தும்.

இந்தியாவில் மொத்தம் 33·6 கோடி கால்நடைகள் உள்ளன. அவற்றில் 22·6 கோடி எருமைகளும், பசுக்களும் 4 கோடி செம்மறியாடுகளும். 6·1 கோடி வெள்ளாடுகளும், 90 லட்சம் இதர வகைப்பட்ட விவசாயப் பிராணிகளும் உள்ளன. இவை தவிர, 11·6 கோடி கோழி, வாத்து வகைகளும் உள்ளன. இவற்றின் மூலம், நாட்டுக்கு, 1000 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் கிடைத்து வருகிறது.

### இதோ ஒரு புதிர்!

இப்படியிருந்தும், நம்முடைய விவசாயத்துறையில் உற்பத்தி, மிகவும் குறைந்த அளவிலேயே இருந்து வருகிறது. கால்நடைகள் விஷயமோ கேட்க வேண்டியதேயில்லை. இந்நாட்டில் பால் கறவையளவும், கம்பளி உற்பத்தியும், முட்டை உற்பத்தியும் குறைந்த அளவிலேயே இருந்து வருகின்றன.

இந்நாட்டு மக்களின் சரிபாதியினர் போதிய அளவு சத்துணவு இன்றியும், போதிய அளவுக்கு உணவு கிடைக்கப் பெறாமலும், இருந்துவருகின்றனர். மக்களின் உணவின் தரத்தை உயர்த்துவதற்கு, மேலும் அதிக அளவுக்குப் பாலும், பால் பொருட்களும், முட்டையும் அவசியமாக உள்ளன. கிடைத்து வரும் பாலின் அளவோ பாதிபேருக்குக் கூடப் போதிய அளவினதாக இல்லை. ஊண் பொருட்கள் தேவை, கிடைத்துவரும் அளவைப் போன்று பத்து மடங்கு அதிகமாக உள்ளது. முட்டை விஷயத்தில் தட்டுப்பாடு அதைக்காட்டிலும் அதிகமாகவே இருந்து வருகிறது.

கம்பளி, ஆட்டு மாட்டுத்தோல்கள் போன்ற, பெரிதும் வர்த்தக முக்கியத்துவமுள்ள பொருட்கள் விஷயத்திலும்கூட, உற்பத்தி வேகமாக இல்லை. ஆனால், நாட்டில் பொருளாதாரத்துறையில் ஏற்பட்டு வந்துள்ள வேகமான வளர்ச்சியின் காரணமாக, கம்பளி, தோல் பொருட்கள் தயாரிப்புத் தொழில்களுக்கு இந்த மூலப் பொருளின் தேவைகள் பெரிதும் அதிகரித்துள்ளன. மேலும் கம்பளியும், தோலும் நாட்டுக்கு மிகுந்த அந்நியச் செலாவணியை சம்பாதித்துக் கொடுக்கின்றன.

### திட்டத்தில் வழிவகை

எனவே நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு கால்நடைகளின் அபிவிருத்தி இன்றியமையாததாக உள்ளது. அதற்கு வகை செய்யும் பொருட்டு, ஐந்தாண்டுத் திட்டங்களில் அவற்றின் அபிவிருத்திக்கான திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. இதைத்தவிர, மேம்பாட்டின் மூலமும், உணவளிப்புக்கான சிறந்த ஏற்பாடுகள், நோய்க் கட்டுப்பாட்டிற்கான வழிவகைகள் இலாபகரமாக இல்லாத கால்நடைகளின் இனப்பெருக்கத்தைக்கட்டுப்படுத்துவது ஆகியவை போன்ற ஏற்பாடுகளின் மூலமும் கால்நடைகளின் உற்பத்தித் திறன், செயல் திறன் ஆகியவற்றை மேம்படுத்த வகை காணப்பட்டுள்ளது. கால்நடைகள், பால்பண்ணை அபிவிருத்திக்கென முதலாவது திட்டக்காலத்தில் 22 கோடி ரூபாயும், இரண்டாவது திட்டத்தில் 56 கோடி ரூபாயும், செலவிடப்பட்டது. நடப்பு திட்டத்தில் அதற்கு 90 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### இணைந்ததொரு பகுதி

கால்நடை அபிவிருத்தி ஏற்பாடுகளை பலதரப்பட்ட அம்சங்கள் அடங்கியதான, விவசாயத் துறையின் இணைந்ததொரு பகுதியாக மேற்கொண்டு வர இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது. கலப்பு விவசாய முறையே இப்பொழுது பிரதானமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. நிலவளத்தையும், கால்நடை ஆதாரங்களையும் பின்னும் சிறப்பான முறையில் பயன்படுத்தி வரும் பொருட்டு, இந்த ஏற்பாட்டில் பயிர் சாகுபடியோடு கால்நடை வளர்ப்பு ஏற்பாடுகள் ஒன்றிணைந்த ரீதியில் மேற்



G.N.₂—4

கொள்ளப்படுகின்றன. விவசாயி அவரது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான மார்க்கெட் வசதிகளை அதிகரிப்பதற்கும், மண்வளம் குன்றாமல் காத்து வருவதற்கும் சிறப்பான முறையில் பயன்படும்படியாக, மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் இடையே பரஸ்பர சார்புக்கு வகை செய்வதற்கும் இது பொதுவாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சாகுபடிக்கு லாயக்கான தரமான எருதுகள் கிடைத்து வருவதற்கும் உட்கொள்வதற்குத்தரமான பால் அதிக அளவில் கிடைத்து வருவதற்கும் வகை செய்யும் ரீதியில், இத்துறையில் அபிவிருத்திக்கு வகை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதை செய்வதற்கு, கால்நடைகளின் இனப்பெருக்கத்துக்கான கொள்கையொன்றும் இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கிறது.

இங்கு குறிப்பிடவேண்டிய பிறிதொரு முக்கியமான திட்டம் கால்நடைகளின் அபிவிருத்திக்கான தீவிர திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதிலுமாக கால்நடைகள் அபிவிருத்திக்கு சகல விதங்களிலும் அதாவது விஞ்ஞான ரீதியில் இனப்பெருக்கம், முறைப்படியான உணவளிப்பு, சீர்பட்ட முறையிலான நிர்வாகம், பயன்தரும் வகையிலான நோய்த் தடுப்பு ஏற்பாடுகள் ஆகிய நடவடிக்கைகளின் வாயிலாக, திட்டம் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளதுடன் உற்பத்தித்திறன் மிகுந்த தரமான கால்நடைகளை விருத்தி செய்வதற்கான வழிவகை ஏற்பாடுகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்புத்திட்ட கால இறுதிக்குள்ளாக, கால்நடைகளுக்கு யமனாக விளங்கி வருகிற கோமாரி நோய் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டு விடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் எருதுகளின் இனத்தர மேம்பாட்டுக்கும் அது பெரிதும் வகை செய்யும்.

### பால்பண்ணைத் திட்டங்கள்

கால்நடை மேம்பாட்டுக்கான ஏற்பாடுகள், பால்பண்ணைத் தொழில் அபிவிருத்தி ஏற்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். விவசாயத் துறை இலாபகரமானதாக இருப்பதற்கு கால்நடைகள் பராமரிப்புக்கான சிறந்த ஏற்பாட்டுடன், நன்கு அபிவிருத்தி பெற்ற பால் பண்ணைத்தொழில் ஒன்றும் இன்றியமையாததாகும்.

இத்துறையில், பால் வழங்குவதற்கான திட்டங்கள், பால் பண்ணைகள், பாலேடு உற்பத்தி நிலையங்கள், பால்தூள், கால்நடை தீவனங்கள் தயாரிப்புக்கான தொழிற்சாலைகள் ஆகிய பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அத்துடன், பால்பண்ணை பெருக்கம் பயிற்சி ஆராய்ச்சி ஏற்பாடுகள், பால்பண்ணை உபகரணங்கள், யந்திர சாதனங்கள் உற்பத்தி, உற்பத்தியாளர்கள் கூட்டுறவுகள் அமைப்பு ஆகியவை வகையிலும் பல துணைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

### கம்பளித் தொழில் வளர்ச்சி

உயர்தர செம்மறியாடுகளின் இனவிருத்தி அதிகரிப்பு இப்பொழுது பெரிதும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது விஷயமாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளில், செம்மறியாடு, மற்றும் கம்பளி உற்பத்தியின் அபிவிருத்திக்கு வகை செய்வதற்கான ஆராய்ச்சிகளுக்கென தமிழ் நாட்டிலும் ஆராய்ச்சி நிலையமொன்று ஏற்படுத்தப்பட்டிருப்பது முக்கியமானதொன்றாகும்.

கோழி, பன்றி முதலியவை உணவுப்போஷாக்குத் தரத்தை அதிகரிப்பதற்கு அவசியமான, சத்து மிகுந்த புரதப்பொருளை அளிப்பதுடன், கிராமங்களிலும், மற்றும் நகரப் பகுதிகளிலும்கூட மக்களுக்கு இலாபகரமானதொரு ஜீவனோபாயத்தையும் அளிக்கின்றன. இவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்கெனவே நாட்டில் நல்ல கிராக்கியிருந்து வருகிறது. இத்துறையில் பல தரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஏற்பாடுகளின் பலனாக, முட்டை உற்பத்தி அளவு 1956–57-ல் ஆண்டொன்றுக்கு 190 கோடியாக இருந்தது. 1960–61-ல் ஆண்டொன்றுக்கு 288 கோடியாகப் பெருகியிருக்கிறது. 1965–66-ல் அது 600 கோடிக்குப் பெருகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### மக்கள் ஒத்துழைப்பு

கால்நடைகளின் அபிவிருத்திக்கான திட்டங்கள் வெற்றி பெறுவது மக்களின் ஒத்துழைப்பு மூலமே சாத்தியமானதாகும். இத்துறையில் அரசாங்க உதவி அதிக அளவில் கிடைத்து வருவது அவசியம் என்ற போதிலும், மக்கள் அவற்றுக்குத் தீவிர ஒத்துழைப்பு அளித்து வர வேண்டியது, அதைவிட முக்கியமானதாகும். இது விஷயத்தில் மக்களுக்கிருந்து வருகிற குருட்டு நம்பிக்கைகளையும், அறியாமையையும் போக்கி, முறைப்படியான பராமரிப்பு நிர்வாக ஏற்பாடுகளின் மூலம், கால்நடைகளின் உற்பத்தித்திறனையும், செயல்படுதிறனையும் மேம்படுத்த தீவிர முயற்சி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.



# பண்டித மதன்மோகன் மாளவியா

**பழம்பெரும் தேசபக்தர் பண்டித மதன்மோகன் மாளவியா. தியாகத் தீயிலே புடம் போட்டு எடுத்த பத்தரை மாற்றுத் தங்கம் அவர், காசி ஹிந்து பல்கலைக்கழகம் கண்டவர். அவர் தம் தியாக வரலாறு, படிப்பவரையும் புனிதப்படுத்தி விடும் என்பதில் ஐயமில்லை.**

1886-ம் ஆண்டு கல்கத்தா நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. மகாசபையின் தலைவரான தாதாபாய் நௌரோஜியும் மற்றும் சிலரும் அரசாங்கத்தின் போக்கைக் காரசாரமாகக் கண்டித்துப் பேசினர். அதைக் கேட்ட, பிரதிநிதியாக வந்த ஒருவருக்கு, தானும் அவர்களைப் போல் பேச வேண்டும் என்ற ஆவல் உள்ளத்திலிருந்து கிளம்பியது. சட்டென்று எழுந்தார். நிதானமாக, ஆனால் கம்பீரமாக, முழங்கினார் அவர்;—




'' ஆண்டு தோறும் சட்டங்களும் சாசனங்களும் கிளம்புகின்றன; அவற்றிற்கு உட்பட்டு நாமும் வாழ்கின்றோம், வருந்துகின்றோம். எனவே, அவற்றைக் குறித்து நம் கருத்தைத் தெரிவிக்க நமக்கு உரிமை வேண்டாமா? ஒரு வார்த்தை கூட சொல்ல வகையில்லையே! சட்டசபைகளில் நமக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. இந்தியரையும் சரி சமமாக நடத்துவோம் என்ற ராணியின் வாக்குறுதி எங்கே? நமக்கு மட்டும் ஏன் இந்தப்பாரபட்சம்?''

இருபத்தி ஐந்தே வயது நிரம்பிய இளைஞரின் கணீர் என்ற அந்தப் பேச்சைக்கேட்டு, மகாசபைக்கு வந்திருந்தோர் உற்சாகத்துடன் கை தட்டினர். இவ்வளவு அழகாக கோவையாகப் பேசுகிறாரே என்று பலரும் வியந்தனர். அன்று அப்படிப் பலராலும் பாராட்டப்பட்ட இளைஞர் தான் பண்டித மதன்மோகன் மாளவியா! ''விடுதலை பெற்ற பின்பே மாள்வேன்'' என்று சூளுரைத்தவர் அவர். தேச சேவைக்காக தன் உயிரையும் உடலையும் அர்ப்பணித்தவர். சொன்ன சொல் தவறாதவர். சத்தியவான் என்றால் நம் கண் முன் நிற்பவர் மகாத்மா! அவருக்கு ஈடான ஒரு மனிதரைக் குறிப்பிட வேண்டுமென்றால், மாளவியாவைத்தான் குறிப்பிட வேண்டும். சுயநலமற்ற தியாகி. கண்ணால் கண்டதை மட்டுமே நம்புவார். கண்டது தவறென்றால் கண்டிக்கவும் தயங்கார். அதற்கு உதாரணம், 1933-ல் கல்கத்தாவில் நடந்த கலகம் பற்றி, அவர் கொதித்தெழுந்த சம்பவம்!

அவ்வருடம் கல்கத்தாவில் காங்கிரஸ் மகா சபை நடந்தது. கூட்டம் நடத்தக் கூடாது என்று போலீசார் உத்தரவிட்டனர். மீறிக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். அப்படியும் சுமார் 300 பேர் குழுமியிருந்தனர். போலீஸ் வந்தது. அடக்குமுறை நடந்தது. தடியடிப்பிரயோகம் நடத்தினர். யாரும் அசையவில்லை. கண்மூடித்தனமாகத் தாக்கினர் போலீஸார்.

அது கேட்டு மாளவியா கல்கத்தாவிற்கு விரைந்தார். காயமுற்றோரைக்கண்டு கண்ணீர் வடித்தார். அரசினரின் அக்கிரமத்தைக் குறித்து, உடனடியாக ஓர் அறிக்கை வெளியிட்டார் அப்போதைய லண்டன் காமன்ஸ் சபையில் கேள்வி பிறந்தது. அன்றைய இந்திய மந்திரியாக இருந்த ஸர். சாமுவேல் ஹோர், மாளவியாவின் அறிக்கையை மறுத்து, ஓர் இந்திய தலைவர் தவறான அறிக்கையை வெளியிட்டு இருப்பது வருந்தக்கூடியது என்று கூறினர். இது கேட்ட மாளவியா உடனே தந்தியடித்தார். "அரசாங்கம் நடந்தது பற்றி விசாரணை நடத்தட்டும். தகுந்த ஆதாரத்தோடு மெய்ப்பிக்கிறேன். நடந்தவை பொய்யென்றால் என் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்" என்று. அரசாங்கம் விசாரணை நடத்தவுமில்லை. மாளவியா மீது நடவடிக்கை எடுக்கவுமில்லை. நடந்ததை அப்படியே மறைத்து விட்டது!

## படிப்பாளி மாளவியா

வசதியிருந்தால் வாழ்நாள் முழுதும் படிப்பதிலேயே காலத்தைக் கழிக்கவும் சித்தமாயிருந்தார் மாளவியா. சிறு வயதிலேயே நல்ல அறிவாளியாகத் திகழ்ந்தார். எல்லா வகுப்பிலும் முதன்மையாகத் தேறினர். பண்டிதரின் அறிவுத்திறன் கண்டு அவருடைய ஆசிரியரும் அதிசயித்தனர். ஒரு முறை கேட்டால் போதும். மீண்டும் மறக்கவே மாட்டார். தன்னுடைய இருபத்தி இரண்டாவது வயதில் பி.ஏ. பட்டம் பெற்றார். வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாளவியா பெரிதும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

மேலும் மேலும் படிக்கத்தான் விரும்பினர் மாளவியா. ஆனால் குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியால் படித்த பள்ளியிலேயே ஆசிரியராக அமர்ந்தார். கிடைத்ததைக் கொண்டு இனிமையாக வாழ்க்கை நடத்தினர்.

சிறிது காலம் 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையிலும் இந்தியன் யூனியன் பத்திரிகையிலும் வேலை பார்த்தார். பத்திரிகையின் மூலம் மக்கள் மனத்தில் விடுதலை உணர்ச்சியை எழுப்பினர். அனைவரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் கட்டுரைகள் எழுதினர்.

இச்சமயத்தில் சட்டக்கல்வி படித்து வக்கீலாக விருப்பம் கொண்டார். ஆனால் பண வசதிக்கு எங்கே போவது? 'நான் இருக்கிறேன்' என்று முன் வந்து பொருளுதவியளித்தார் ராஜராம பாலசிங் என்ற ஜமீன்தார். 'ஹிந்துஸ்தான்' பத்திரிகை உரிமையாளர் அவர். வக்கீல் பரீட்சையில் தேறி வக்கீலானர் மாளவியா.

## கட்டணச் சலுகை நீடிப்பு

சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவல்களுக்கு உட்பட்டும் அதற்குப் புறம்பாகவும் உள்ள பதவிகளுக்கு நியமனம் சம்பந்தமாக ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் மலைஜாதியினர், பின்னடைந்த வகுப்பினர் ஆகியோருக்கு, விண்ணப்பக் கட்டணங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகை, 1964-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியுடன் காலாவதியாகி விட்டது. 1965 ஜனவரி 1-ம் தேதியிலிருந்து இச்சலுகைகளை மேற்கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. எனவே 1966 டிசம்பர் 31-ம் தேதி வரை இக்கட்டணச் சலுகை நீடிக்கும்.

---

## பல்கலைக்கழகம் நிறுவியவர்

தான் படித்தால் மட்டும் போதாது. இந்நாட்டின் வருங்கால சந்ததிகள் இப்போதைய மக்களைப்போலன்றி கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும். அவர்கள் மூலமாகவே அந்நிய ஆட்சியை விரட்ட வேண்டும் என்று எண்ணினர். ஆங்கிலக் கல்லூரிகளில் படிப்பதால் எவ்விதப் பயனும் இல்லை என்பதை உணர்ந்த அவர், தானே ஒரு கல்லூரி அமைக்க வேண்டும் என்று எண்ணினர். தைரியம், ஊக்குவிப்பது என்பது மருந்துக்குக் கூட கிடைக்காத அந்தக் காலத்தில், விடாப்பிடியாக முனைந்து, அதில் வெற்றியும் கண்டார். அவர் கனவு நனவாகியது. அவருடைய விடாமுயற்சியின் பயனாக, காசி இந்து பல்கலைக் கழகம் தோன்றியது.

## உழைப்பாளி மாளவியா

பண்டிதர் சிறந்த உழைப்பாளி. தாய்மொழியில் பற்றும், தேச விஷயத்தில் சிரத்தையும் சமூக ஒற்றுமையில் ஊக்கமும் கொண்டு உழைத்தார். அலகாபாத் நகர சபையில் அங்கம் வகித்தார். நகர மேயராக மாறினர். மூன்றாவது காங்கிரஸ் மகாசபை சென்னையில் நடந்தபோது சட்ட திருத்தம் குறித்து அழகாக, அருமையாக ஆனால் ஆணித்தரமாகப் பேசினர். அவரது பேச்சைக்கேட்ட தலைவர்கள் அனைவரும் ஒரு மனதாகப் போற்றினர். அது முதல் காங்கிரசில் பண்டிதருக்கு நல்ல பெயர்.

1909-ல் காங்கிரஸ் அக்கிராசனராகப் பதவியேற்றார். அப்போது மாளவியாவுக்கு வயது நாற்பதுக்கும் குறைவே. இந்த வயதில் எவருக்கும் அந்தப்பதவி கிட்டியதில்லை. அந்தப் பதவியையும் திறமையாக நிர்வகித்தார். அவரது திறமையைக் கண்டு வெளிநாட்டினரும் போற்றினர்.

அதன்பின் சட்டசபையில் நுழைந்தார். மக்களுக்காக உழைத்தார். எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசினார். அரசாங்கத்தின் வரவு–செலவுத் திட்டங்கள் பற்றி அவரைப்போல் அலசியவர்கள் வெகு சிலரே!

பேச்சாளி மாளவியா

மாளவியா இன்றைய நாகரீகத்தின் அடிமையல்ல. அன்றைய புராதன நாகரீகத்தின்பால் மோகம் கொண்டவர். சத்தியத்திற்கு கட்டுப்பட்டவர். கொள்கையின் எல்லையைத் தாண்டாதவர். உள்ளமும் உதடும் ஒருசேரப் பேசி அனைவரையும் கவரக் கூடிய சாந்தத்தைப் பெற்றவர். அவர் பேச்சில் பொருள் ஆழத்தைக் காணலாம். ஆணித்தரத்தையும் காணலாம். கம்பீரமும் கருணையும் ஒருசேரப் பேசுவார். வாக்கியத்தில் அழகுற சொற்களைச் சேர்த்து கோவையாக மற்றவர் மனம் கோணாதபடி பேசுவார். வரம்பு மீறி ஒரு சொல் சொல்லமாட்டார்.

பிச்சைப் பிரபுக்கள்

த நலத்திற்காக பிச்சை எடுப்போர் பலர். பொதுநலத்திற்காக நிதி கேட்டவர்களில் மகாத்மாவும், மாளவியாவுமே அதிகமாகப் பொருள் சேர்த்தனர். மகாத்மா ஏழைகளிடமிருந்து ஒரு கோடி ரூபாய் வரை சேர்த்தார். அவர் சேர்த்த நிதி 'திலகர் சுயராஜ்ய நிதி'. ஏழைகளிடம் இருந்து எளிதில் பணம் பெற்றுவிடலாம். தனவந்தர்களிடமிருந்து பணம் சேர்ப்பது மிகவும் கஷ்டம். ஆனாலும் அவர்களிடமிருந்து ரூபாய் ஒரு கோடிக்குமேல் சேர்த்தார் மாளவியா. பணம் படைத்த மனிதர்களிடமிருந்து அவ்வளவு பணம் திரட்டியவர் மாளவியா ஒருவர்தான். இவ்விருவரையும் பற்றி, ஒரு நண்பர், ''பிச்சைப் பிரபுக்கள்'' என்று புகழ்ந்தார். 1912-ல் கல்கத்தாவில் அவர் பேசிய ஒரு பிரசங்கத்திற்குப் பின் செல்வந்தர்களும், வியாபாரிகளும் கட்டு கட்டாக பவுன்களாக கொண்டு வந்து குவித்தனர். அதைக் கண்டு பண்டிதர் அருகிலிருந்த ஸர். விசுவேசுவரய்யா அதிசயித்தார். அவர்மட்டுமென்ன? அப்போதைய அரசாங்கமும் அதிசயித்தது. மொத்தம் இரண்டு கோடிக்குமேல் பணம் சேர்ந்தது.

சுதேசி உணர்வு

பிறந்த நாள் முதல் பண்டிதர் சுதேசியவாதி. சட்டைக்குப் பொத்தான் போடமாட்டார். கயிறுதான் கட்டிக்கொள்வார். ஊரெல்லாம் சுதேசியத்தைப் பரப்பினார். சுதேசியத் தொழில்களை ஆதரிக்கும் பொருட்டு அலகாபாத்தில் ஒரு வர்த்தகசாலை தோன்றியது. அதன் ஸ்தாபகர்களில் பண்டிதரும் ஒருவர்.

1930-ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பில் பண்டிதரும் சிறையானார். அவர் சிறையானதைத் தொடர்ந்து காசி இந்து சர்வகலாசாலை மாணவர்களும் போரில் ஈடுபட்டனர். அரசாங்கம் கலாசாலைக்கு அளித்து வந்த பண உதவியை நிறுத்திவிடப்போவதாகப் பயமுறுத்தியது. அதற்காக மாளவியாவும் மற்றவர்களும் ஒரு சிறிதும் மனம் கலங்கவில்லை. வித்யாலயத்தின் வீறும் குன்றவில்லை. 1933-ல் தேசமெங்கும் அவசரச் சட்டம் தாண்டவமாடியது. கல்கத்தாவில் மகாசபை கூடவேண்டும். மாளவியாதான் அக்ராசனர். அவரும் புறப்பட்டார். ஆனால், வழியில் அவரைப் போலீஸ் கைது செய்தது. அவரை மட்டுமின்றி கூட்டத்திற்கு வந்த அனைவரையும் கைது செய்தது. ஆனாலும் மகாசபை கூடித்தான் கலைந்தது.

மகள் இறந்த போதும்....

சொன்னசொல் தவறாதவர், பண்டித மாளவியா. செய்வதைத் திருந்தச் செய்வதே அவரது குணத்தில் உள்ள தனிச் சிறப்பு. எக்காரணத்தைக் கொண்டும் தன்னுடைய சொல்லை மாற்றிக் கொள்ளமாட்டார். காசநோயால் அவரது அருமை மகள் இறந்தாள். அடுத்த நாள் காசி சர்வகலாசாலையில் ஒரு முக்கியமான விழா. மகளின் மரணத்திற்காக, மனம் உருகினாலும், அதற்காக தன்னுடைய பயணத்தை நிறுத்தவில்லை. பண்டிதரின் தலைமையில் அவ்விழா சிறப்பாக நடந்தேறியது!

பண்டித மதன்மோகன் மாளவியா வருங்கால பாரத ரத்தினங்களுக்கு முன்னோடி. பாரத மக்களுக்காகப் பாடுபட்டவர். விடுதலைக்கு வித்திட்ட வீரர். மகாத்மா காந்தியை குன்றின்மேலிட்ட விளக்குக்கு ஒப்பிட்டால், பண்டித மாளவியாவை ஆலயத்தின் அகல் விளக்காகக் கூறலாம். காந்தி அஹிம்சாமூர்த்தி. மாளவியா கருணைக்கடல். ஒருவர் உயர்வுக்கு இமயமலையை ஒப்பிட்டால், மற்றவரின் மேதைக்கு புனித கங்கையை ஒப்பிட வேண்டும். மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக மகிமை வாய்ந்த மகா புருஷர், பண்டித மதன் மோகன் மாளவியா!

"குலபதி"

---

"ஒரு நாட்டில் இருக்கக்கூடிய இரும்பு, நிலக்கரி போன்ற இயற்கை வளங்கள் முக்கிய மானவை தாம் என்றாலும், ஒரு நாட்டில் உள்ள மக்களின் பண்பைப்பொறுத்தே, அதற்குச் சிறப்பு ஏற்படுகிறது. தங்கள் மக்களின் பண்பு காரணமாக– எண்ணிக்கை காரணமாக அல்ல—பெருமை பெற்றுள்ள சிறிய தேசங்கள் எத்தனையோ உண்டு."

அமரர் நேரு

# நடைமுறைச் சத்துணவுத் திட்டம்

நடைமுறைச்சத்துணவுத் திட்டம் (Applied Nutrition Programme) மாநில அரசாங்கத்தாரால் ஐ. நா. சிறுவர் அவசர நிதி நிறுவனத்தின் (UNICEF) உதவியுடன் நிறைவேற்றப்பட்டதாகும். இது எஸ். வி. நகரம், கிருஷ்ணகிரி, பவானிசாகர், டி. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, ஆடுதுறை, கோயில் பட்டி முதலிய கிராம வளர்ச்சிப்பயிற்சி நிலையங்களிலும், ஆரணி, கிருஷ்ணகிரி, பவானிசாகர், டி. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர், கோயில்பட்டி முதலிய ஏழு வட்டாரங்களிலும் தொடர்ந்து நிறைவேற்றப் பட்டு வருகிறது. இத்திட்டத்தை அரசாங்கம் இன்னும் இரண்டு வட்டாரங் களிலும் நிறைவேற்ற உத்தேசித்துள்ளது. அவைகளாவன; செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பூவிருந்தவல்லியும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூரும். அதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

முட்டை, மீன், பால், பழவகைகள், காய்கறிகள் முதலிய சத்துள்ள உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தல், பயன்படுத்தல் ஆகியவை குறித்தும் சத்துள்ள உணவுப் பொருட்களைப் பயன்படுவதன் அவசியத்தைக் குறித்து விளக்கக் காட்சிகள் ஏற்பாடு செய்தல், இவற்றைக் கிராமங்களில் எளிதான முறைகளில் உற்பத்தி செய்தல், ஆகியவற்றைக் குறித்தும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வட்டாரக் கோழிப்பண்ணை யூனிட் டுகளை அமைத்தல், கிராமக் கோழிப்பண்ணை யூனிட்டுகளை அமைத்தல், பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் நீர்நிலைகள் இருப்பின் அவற்றில் மீன்களைச் சேகரித்தல், பஞ்சாயத்துக்களுக்காகவும், கிராமப் பள்ளி களுக்காகவும் காய்கறி, பழத்தோட்டங்களை வைத்து வருதல், யூனிசெ.ஃப் நிறுவனம் வழங்கும் பால் பவுடரை வழங்குதல் ஆகியவையும் இவ்வேலைத் திட்டத்தில் அடங்கும்.

இவ்வேலைத் திட்டம் முழுவதும் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத் துக்கள் ஆகியவற்றின் உதவியால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திட்டமிட்ட ஏழு வட்டாரங்களிலும் பெரிய கோழிப் பண்ணை யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன.

கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கான செலவில் 75 சதவீதத்தை மாநில அரசாங்கம் ஏற்கிறது. மீதமுள்ள தொகையைப் பஞ்சாயத்துக்கள் ஏற்கின்றன. யூனிசெஃப் நிறுவனம் அளிக்கும் கருவிகளை மாநில அரசாங்கம் இலவசமாகப் பண்ணைகளுக்கு அளிக்கும். 1965-ம் ஆண்டு இறுதிவரை இந்த வசதிகள் கிடைக்க அரசாங்கம் வகை செய்யும். அதற்குப் பஞ்சா யத்துக்களே இக் கோழிப்பண்ணைகளை கவனித்துக்கொள்ள வேண்டும். அதற்காக குடியானவர்கள் கோழிப்பண்ணை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் உள்ளூர் கிராமவாசி ஒருவருக்குப் பயிற்சி அளித்து அவருக்கு மாதம் ரூ. 30 நன்கொடை அளிக்கப்படுகிறது. மீன் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மீனளத்துறை பஞ்சாயத்துக்களுக்கு மீன் குஞ்சுகளை இலவசமாக அளிக்கிறது. யூனிசெஃப் நிறுவனம் நைலான் வலைகளையும், கருவிகளையும் அளிக்கிறது. மேலும் 2,000 மக்களில் இரண்டு கிராமவாசிகளுக்கு, குறுகிய கால மீன் வளர்க்கும் பயிற்சியளிக்க உதவித் தொகையும் அளிக்கிறது.

இத்திட்டத்தின்கீழ், பெருவாரியான பஞ்சாயத்துக்களில் கிராமத் தோட் டங்களும், பள்ளி தோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில பஞ்சா யத்துக்கள் கிராமத் தோட்டங்கள் அமைப்பதன் மூலமாக, கணிசமான வருவாய் பெற்று வருகின்றன, கிராமத் தோட்டங்களில் கிணறுகளை வெட்டுவதற்காக மாநில அரசினர் உதவியளிக்கின்றனர். அவற்றிற்குத் தேவையான மோட்டார், பம்பு செட்டுகள் ஆகியவற்றிற்குரிய உதவியை, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிறுவனம் வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிறுவனம் பால் பவுடர் வழங்குகிறது. இத் திட்டம் அமைக்கப்பட்டுள்ள கிராமங்களில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களுக்கு பவுடர் பால் வழங்கப்படுகிறது. கிராமப் பண்ணைகளையும், மீன் குளங்களையும் கவனமாக கண்காணிக்கும்படி வட்டார அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உதவி எதிர் பார்க்கும் மக்களுக்குமட்டும் பால் போன்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதைக் கவனிக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# எலும்புருக்கி நோயிலிருந்து எல்லோருக்கும் விடுதலை

எலும்புருக்கிநோய் (Tuberculosis) தடுப்பு சம்பந்தமாக, மிகச்சிறந்த முறையில் ஆராய்ச்சிகள், உலக சுகாதார நிறுவனத்தினல் (World Health Organisation) செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாராய்ச்சிகளின் பலனுய், ஓர் உண்மை புலனுகிறது. இன்றைய உலகில் கிடைக்கின்ற வைத்தியவசதிகளை மனதில்கொண்டு பார்த்தால், மிகக் குறைந்த செலவிலேயே, எலும்புருக்கி நோய் பிடித்த ஒரு நோயாளியை அப்பிணியிலிருந்து விடுதலை பெறச் செய்யமுடியும், என்பதுதான் அந்த உண்மை. இந் நோயினல் தாக்கப்படாத ஒருவர், இளம் வயதிலேயே தடுப்பு ஊசி போட்டுக்கொண்டால், பத்தாண்டுகளுக்கு இந்நோய் தன்னைப் பிடிக்குமோ என்ற அச்சம் சிறிதுமின்றி வாழலாம். இந்தத் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள ஆகும் செலவும் மிகமிகக் குறைந்ததுதான்.

### சர்வதேசக் கருத்தரங்கு

மலேசியாவில் கோலாலம்பூர் நகரில் உலக சுகாதார நிறுவனத்தின் ஆதரவில், சர்வதேச எலும்புருக்கிநோய்த்தடுப்பு கருத்தரங்கு (International Tuberculosis Seminar) ஒன்று அண்மையில் நடைபெற்றது. இதுவரையில், பணவசதி படைத்தவர்களால் மட்டும்தான் இந்நோயிலிருந்து விடுதலைபெற முடியும் என்றிருந்த நிலை போய், இனிமேல், உலகத்தில் இன்று இந் நோயினல் அவதியுறும் 150 லட்சம் பேருக்கும் அருமையான மருத்துவ வசதிகள் அளிக்க முடியும் என்ற ஒரு கருத்தினை இக் கருத்தரங்கு வெளியிட்டுள்ளது.

இதற்கான மருத்துவ ஆதாரங்கள் கைவசம் உள்ளன. பிரதேசங்களின் தேவைகளை ஒட்டி, அவை களை உபயோகிப்பதற்கான வழிமுறைகளைத்தான் நாம் கண்டுபிடித்தாக வேண்டும். "இந் நோயினல் அவதியுறும்எண்ணற்ற கிராம மக்கள், இந்நோயினைத் தீர்க்க போதிய வைத்திய வசதியே இல்லாத நிறுவனங்களைத் தேடி அலைகின்ற அவலநிலை இன்றும் உள்ளது" என்றும் இக் கருத்தரங்கு கருத்து தெரிவித்துள்ளது.

### எலும்புருக்கி நோயை ஒழிக்க....

இந் நோயினை ஒழிக்க மிகச் சிறந்த மருந்துகள் என்று கருதப்படும் இஸோனியசிட், (Isoniazid) பி. ஏ. எஸ். (PAS), ஸ்ட்ரேப்டோமைசின் (Streptomycin) போன்றவை முழுக்க முழுக்க உபயோகிக்கப்படுவதில்லை. இதற்கு முக்கிய காரணம், இந்த மருந்துகள், அநேகமாக நோயாளிக்குக் கிடைப்பதில்லை. திறமையான முறையில் காரியங்கள் நடைபெருதது, நிர்வாகக் கோளாறுதான் இதற்குக் காரணம்.

எலும்புருக்கி நோய்க் கிருமிகளை அறவே உடம்பிலிருந்து ஒழித்துவிடலாம். தொடர்ந்து 12 மாதங்களுக்கு, ஸ்டெரப்டோமிசினுடன் ஐசோனியசிட் என்ற மருந்தும், தையாசிடிஸோன் (Thiacetazone) அல்லது பி. ஏ. எஸ். மருந்தும் சேர்த்து உபயோகித்துகொண்டே வந்தால், அநேகமாக புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட 100-க்கு 90 சதவிகிதம் வியாதிஸ்தர்களுக்கு இந்தநோய்க் கிருமி பரவாமல் குணமாகிவிடுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### எலும்புருக்கி நோய் வராமல் தடுக்க

ஏழிலிருந்து 10 ஆண்டுகள் வரையுள்ள கால அளவுக்கு, பி சி. ஜி. ஊசி குத்திக் கொண்டால், இந் நோயிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும். 100-க்கு 80 சதவிகித பேருக்கு இந்தப்பயன் கிடைத்துள்ளது. ஆனல் ஊசி மருந்து மிகவும் நல்ல தரமான மருந்தாக இருக்கவேண்டும்.

மக்களிடையே இந் நோயானது தொத்து நோயாக பரவாமல் தடுக்க வேண்டுமென்ருல், சிறு பிராயத்திலே ஊசிகுத்திக்கொள்ள வேண்டும். மிகவும் அதிகமான அளவில் இந்த நோய் பரவியுள்ள நாடுகளில் இப்படி ஊசி குத்திக் கொள்வது மிகவும் அவசியமான தொன்ருகும்.

உலகத்தில் எந்தப்பகுதியிலும், பி.சி.ஜி.ஊசி குத்திசகொள்ளுதல் தான், இந்நோய்க்கு மிகச்சிறந்த தடுப்பு முறையாக உள்ளது.

### தேசிய திட்டம்

எலும்புருக்கி நோயை ஒழிக்க வேண்டுமென்ருல், தேசிய அளவில் ஒரு திட்டம் அவசியம் தேவை. இத் திட்டம் மிகச்சிறந்த முறையில் அமைய வேண்டுமானல், தேசம் பூராவுக்குமாக இத்திட்டம் அமைய வேண்டும். அத்துடன், தேசிய சுகாதார வேலைத்திட்டத்துடன், இத்திட்டமானது நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும். இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதில், நாட்டில் உள்ள சமூக நல நிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில், ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் நாட்டில் உள்ள மக்கள் பூராவுக்கும் அமுல் செய்யக்கூடிய அளவில் ஒரு தேசிய திட்டம் உருவாக்கப்படாத காரணத்தினல், இத்திட்டமானது தோல்வியே கண்டுள்ளது. அப்படி ஒரு திட்டம் இருந்தாலும் அதைச் சரியான முறையில் நிறைவேற்றுவதில்லை. இந்தத் தவறுகளை, வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எலும்புருக்கி நோயினல் பீடிக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் மார்பில்

(அடுத்த பக்கம் பார்க்க)

## விறகு மரக்காடு வளர்ப்பு

முன்னாள் ஜமீன் பஞ்சாயத்துப் பகுதிகளிலும் பரவலாகக் கிடக்கும் ஒதுக்கப்பட்ட காடுகளிலும் 5,700 ஏக்கர்களில் விறகு மரங்களையும் தீவன இனவகை மரங்களையும் வளர்த்து மண்ணரிப்பு மேலும் ஏற்படாது தடுப்பதும், விறகு உற்பத்தியைப் பெருக்குவதுமே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1963-64 ஆண்டு முடிவு வரை 800 ஏக்கரில் மண்வளப் பாதுகாப்பு வேலை மேற்கொண்டதோடு, 21,427 ஏக்கரில் மரங்கள் நடப்பட்டன. 1964-65-ல் 2000 ஏக்கரில் காடு வளர்க்கப்படும்· 1,480 ஏக்கரில் மண்வளப் பாதுகாப்பு வேலை நடைபெறும். 1965-66-ல் 1,700 ஏக்கர் காடு வளர்ப்பும் (முந்திரி வளரும்) 1,500 ஏக்கரில் மண்வளப் பாதுகாப்பு வேலையும் நடைபெறும்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சளியும், வலியும் காணப்படுதல், ஆகும். இப்படிக் காணப்படுகிற நோயாளிகளில் பெரும்பாலோருக்கு உடனே உரித்தான வைத்திய வசதி அளிக்கப்பட வேண்டும். நோயாளி மருந்தை தேடி அலையக்கூடாது. நோயாளிக்கு அலைச்சல் இல்லாமல், உடனே அந்த மருந்து கிடைக்கும்படியான வழிவகைகளை செய்வதுதான் மிகவும் முக்கியமானதாகும். எல்லா நாடுகளிலும் தீவிர முறையில் இயங்குகிற தேசிய எலும்புருக்கி நோய்த் தடுப்புவேலைத் திட்டம் ஒன்றினைத் தோற்றுவிப்பதன் மூலம்தான் இப்பிரச்னையை சமாளிக்க முடியும். இதற்கான மருந்துகள் கிடைக்கின்றன. மருத்துவ வசதிகள் பெருகியுள்ளன. ஆகவே அப்படி ஒரு வேலைத் திட்டத்தை எந்த நாடும் துவக்க மிக சுலபமான முறையில் இயலும்.

(உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு குறிப்பிலிருந்து.)



# திரும்பிப் பார்!


'திருப்பிப்பார்' வரிசையில் முதல் பகுதி முடிவு விபரம் 1965 மார்ச் 'கிராமநலம்' இதழில் வெளியாயிற்று.

1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 'கிராம நலம்' இதழில் வெளியான 'திருப்பிப்பார்' பகுதிக்குச் சரியான விடைகள்:—

1 மதுரை
2 மெக்கா
3 600 மைல்
4 1946
5 பார்வதிபுரம்
6 15 லட்சம்
7 சந்திரசேகரபுரம்
8 பத்துப்பாட்டு
9 வாஷிங்டன்
10 ஜவஹர்லால் நேரு
11 கண்ணதாசன்
12 வின்ஸ்டன் சர்ச்சில்


சரியான விடை அனுப்பியவர்கள் விவரம்:—

1. ஜி. கே. முத்துக்குமார ராஜ், கோயம்புத்தூர்-6.
2. சலுப்பை இராசேந்திரன், மீன் சுருட்டி, தஞ்சாவூர்.
3. சலுப்பை பாஷ்யம், கல்லக்குடி, திருச்சி.
4. சு. பாண்டியன், ஊத்துமலை, திருநெல்வேலி.
5. ஆ ஜே. தணிகாசலம், வாலாஜா, வடார்ககாடு.
6. இரா. அருணாசலம், கழுநீர்குளம், திருநெலவேலி.
7. ஆா. சுப்பிரமணியம், மலலிப்பட்டினம்.
8. வி. சங்கரவெங்கடராமன், அவனியாபுரம், மதுரை.
9 வெ. சின்னையா, நரிப்பட்டி, மதுரை.
10. எட்வர்ட் செல்லையா, நச்சலூர், திருச்சி.
11. கே. டி. தீனதயாளு, அரககோணம, வடார்க்காடு.
12. கே. மாதப்பன, புளியம்பட்டி, சேலம்.
13. த. குமரகுருபரன், கல்வெட்டுப்பாளையம்.
14. எஸ். கருப்பன், பாச்சல், சேலம்.
15. இரா. ஆறுமுகம், சௌந்திரியபுரம்.
16. டி. விஜயலட்சுமி, பாலப்பாளையம், சேலம்.
17. ஈ. ஜானகி, வீரியன்கோட்டை, தஞ்சாவூர்.
18. உ. வீரமணி, போளம், தஞ்சாவூர்.
19. ஜி. ஞானசேகரன், சிங்கப்பெருமாள்கோவில், செங்கற்பட்டு.
20. பி. கனகவல்லி, குன்னத்தூர், அய்யம்பாளையம், சேலம்.
21. ஆ. கலியராமன், தியாகராஜபுரம், தென்னார்க்காடு.
22. என். நாகசுவாமி, கடம்பத்தூர், செங்கற்பட்டு.
23. மரியசூசை, கருமத்தம்பட்டி புதூர், கோயம்புத்தூர்.
24. பெ. கிருஷ்ணசாமி ரெட்டியார், ஆலங்குடி, தென்னார்க்காடு.
25. கே. வி. எ குழந்தை தெரசா, கன்னிவாடி, மதுரை.
26. இரா. இராமச்சந்திரன், சத்திரப்பட்டி, மதுரை.
27. கே. கிருஷ்ணசாமி, பெரம்பலூர், திருச்சி.
28. எஸ். சுந்தரேசன், தூசி கிராமம், வடார்க்காடு.
29. பி. வி. ஞானசேகரன், பாச்சல், சேலம்.
30. எ. அர்த்தநாரி, சேலம்-1.
31. பி. எஸ். ராமாச்சாரி, அறந்தாங்கி, தஞ்சாவூர்.
32. ஆர். பூபதி, தொப்பம்பட்டி, சேலம்.
33. செ. பலராமன், நாடறப்பள்ளி, வடார்க்காடு.
34. ஆ. வடமலை, மண்டையூர், திருச்சி,
35. எ. ஜெயகரன், பாச்சூர், வடார்க்காடு.



இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் வைர விழா டில்லியில் அண்மையில் நடைபெற்றபோது, விவசாயி ஒருவர், தாம் விளைவித்த பயிரின் வளத்தை, பிரதம மந்திரியிடம் பெருமையுடன் காட்டி மகிழ்கிறார்.

உணவு, விவசாய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் விழாவில் உரை நிகழ்த்துகிறார்.






"பெண்களும், கூட்டுறவும்" என்பது பற்றிய அகில இந்திய கருத்தரங்கை, மார்ச் 25-ந்தேதி, டில்லியில், தகவல் — ஒலிபரப்பு அமைச்சர் திருமதி இந்திரா காந்தி துவக்கி வைத்தார்.



ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் இதுவரை நடந்திராத மிகப் பெரிய சர்வதேச வர்த்தக-தொழில் கண்காட்சி ஒன்று சென்னையில் 1966-67—ல் நடத்தப்படவிருக்கிறது. இதுபற்றிய விவரங்களை, அகில இந்திய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு லாலா ஹன்ஸ்ராஜ் குப்தா, ஏப்ரல் 5-ந்தேதி, சென்னை பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.




அகில இந்திய கைத்தறி வாரம் சென்னையில் ஏப்ரல் 4-ந்தேதி ஆரம்பமாயிற்று. ஏப்ரல் 6-ந் தேதி நிகழ்சசிக்குத் தலைமை வகித்த முதலமைச்சர், கண்காட்சியில் பல நூதனமான கைத்தறி ஆடைகள் வைக்கப்பட்டிருப்பதைப் பார்வையிடுகிறார்.



கவிச் சக்கரவர்த்தி கம்பர் விழா, கவிஞர் பெருமான் பிறந்த ஊரான தேரெழுந்தூரில், இவ்வாண்டு, மார்ச் 18, 19 தேதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு மேல் சபைத் தலைவர் திரு எம். ஏ. மாணிக்கவேலு, விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகிறார்.




'' எழுத்தறிவித்தவன் இறைவனாவான் '' என்பது ஆன்றோர் வாக்கு. அத்தகைய உயரிய பணியைச் சிறப்புறச் செய்யும் ஆசிரியப் பெருமக்களுக்கு, ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி, தமிழ்நாடு அரசாங்கம், பெருமை செய்து வருகிறது. இவ்வாண்டில், ஆரம்ப ஆசிரியர்களில் சிறந்தவர்களெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, முதலமைச்சர், 28–3–65-ல், விருதுகளை வழங்கினார்.



அகில இந்திய திரைப்பட ரசனைக் கருத்தரங்கு, சென்னையில், மத்திய அரசாங்க துணை அமைச்சர் திரு சி. ஆர். பட்டாபிராமன் தலைமையில், மார்ச் 27–ந் தேதி நடைபெற்றது. முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம் கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்.

திரைப்படம், நாடகம், இசை முதலிய துறைகளைச் சேர்ந்த புகழ்பெற்ற கலைஞர்களுக்கு, தமிழ்நாடு சங்கீத, நாடகச் சங்கத்தினால் பரிசுகள் அளிக்கப்பட்டன. சென்னையில் மார்ச் 30-ந் தேதி நடைபெற்ற இவ்விழாவுக்குத் தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் தலைமை வகித்தார்.




## பனஞ்சீனி ஆலை துவக்க விழா

பனைமரம், பற்பல வகைகளில் பலன் தரக் கூடியது. இதைக்கொண்டு தொழில்கள் பல நடத்த முடியும். அத்தகைய தொழில்களைத் தோற்றுவித்தும், ஊக்குவித்தும் தமிழ்நாடு பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் பணி புரிந்து வருகிறது. இதில் குறிப்பிடத் தக்க ஒரு பெரும் முன்னேற்றமாக, பனஞ்சீனி ஆலை ஒன்று, சென்னையை அடுத்த மாதவரத்தில் நிறுவப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம், மார்ச் 24-ந்தேதியன்று, ஆலையைத் துவக்கிவைத்தார்.





கிராமத் தொழில்கள் மூலமே இந்தியப் பொருளாதாரம் சிறப்படையும் என்று வலியுறுத்தியவர் அண்ணல் காந்தியடிகள். அந்தக் காந்திய பொருளாதாரத் தத்துவத்திற்கு விரிவான விளக்கம் தந்த மேதை சாலஞ் சென்ற திரு ஜே. சி. குமரப்பா அவர்கள். அவரது திருவுருவப் படத்தை, பனஞ்சீனி ஆலை துவக்க விழாவில், அமைச்சர் திரு கக்கன் அவர்கள் திறந்துவைத்தார்.



வைத்த விழி வாங்காமல் பார்க்கும்படி, பெண்களைக் கவரும் இத்தனை பொருள்களும் இன்ன பிறவும் பனையிலிருந்து தயாரிக்கப் படுகின்றன.

மெட்ரிக் எடைகள் எளியவை. ஓரே சீரானவை. வாங்குவோர், விற்போர் ஆகிய இரு சாராரிடையே நம்பிக்கை மனப்பான்மையையும், தோழமை உணர்ச்சியையும் அவை வளர்க்கின்றன.

திரு கி. இராஜநாராயணன்

குப்புசாமி நாயக்கர், தலையிலிருந்த பருத்தி மூட்டையை கீழே போட்டார்: 'உஸ் அப்பாடா' என்று பெருமூச்சு விட்டு மேல்துண்டை எடுத்து வேர்வையைத் துடைத்துக் கொண்டார்.

கடையில் கடைக்காரர் இல்லை; மதியச் சாப்பாட்டுக்குப் போயிருந்தார். பையன்தான் இருந்தான்.

நாயக்கர், மூட்டையை நிழலுக்கு உருட்டி, அதன் மேலேயே உட்கார்ந்தார். 'வெக்கை' தாள முடியாததாய் இருந்தது. வியர்வை கோடு கோடாக இறங்கியது உடம்பிலிருந்து.

அது, சில்லரைப் பருத்தி வாங்கும் கடை. பஜாரிலிருந்து பிரியும் ஒரு ரோட்டின் பாலச்சுற்றின் மேல் முன்பாகத்தையும், கீழே ஓடுகிற சாக்கடை ஓடையில் இரண்டு கால்களையும் ஊன்றி அமர்ந்திருந்தது அந்தப் பெட்டிக்கடை.

நாயக்கர் பையனைப்பார்த்தார்: 'பயல்' துரு துரு என்றிருந்தான். சின்னப்பையனா இருக்கிறானே! கடையில் ஆள் இல்லாத போது கல்லாவிலிருந்து துட்டு கிட்டு எடுத்துக்கொள்ள மாட்டானா; என்று நினைத்தார். பனிதன் நினைப்பு அப்படி! 'சே..சே.. அப்படியெல்லாம் நாணயப் பிசகாக நடக்காது' என்று உடனே தன்னைத் தானே தேற்றிக் கொண்டார்.

பையனிடம் பேச்சுக் கொடுத்தார். பையன் இவரிடம் பேசுவதை விரும்பவில்லை என்று தெரிந்தது. அவனுக்கு, தன்னை ஒத்த ஜோடிகளாக இருக்கவேண்டும், அல்லது ஆளாவது பார்க்க நன்றாக இருக்க வேண்டும். இரண்டும் இல்லை; இவருக்கு என்ன தெரியும்? ஒரு சினிமாவின் பெயரைச் சொல்லி அதன் டைரக்டர் யார் என்று கேட்டால் தெரியுமா? ஒன்றும் தெரியாத அப்புராணி! சுத்தப்பட்டிக்காட்டுக் கிழம்! இள வட்டம் இந்தக் கிழத்துடனா பேசுவது?

நாயக்கர் பையனை விட்டு, கடையில் மாட்டியிருந்த தராசுவைப் பார்த்தார். அப்புறம் படிகளைப் பார்த்தார். படிகள் ஒன்றின்மேல் ஒன்றாக அழகாக ஒரு கோபுரம்போல் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன! ஒரு இரும்பு கோபுரம், ஒரு பித்தளை கோபுரம்; அவ்வளவும் புதுதாக வந்த கிலோ கிராம் படிகள்! நாயக்கருக்கு அவரையும் அறியாமல் சந்தோஷம் பிறந்தது; அந்தப் படிகளையும் அவைகள் வரக் காரணமாய் இருந்தவர்களையும் மனசுக்குள் பாராட்டினார். இப்பொழுது எல்லாம் ஒழுங்காக, மனக் கிலேசத்திற்கு இடமில்லாமல் நடக்கிறது என்று அவருக்கு ஒரு நிம்மதி. இதற்கு முன்பெல்லாம் அப்படி அல்ல. ஒரே சந்தேகம்! முன்பெல்லாம் எடையில் என்னவென்னவோ ஏமாற்று வேலை! தகுல்பாஜித்தனம்!

ஐம்பது வருஷத்துக்கு முந்தி எல்லாம், பருத்தியை மூட்டையாகக் கட்டிக்கொண்டு பத்து மைல் தொலை நடந்து, கயத்தாற்றுக்குத் தான் கொண்டு போக வேண்டும். அப்போதெல்லாம் இந்தக் கோயில்பட்டி ஊர் இவ்வளவு பெரிசாக வில்லை. இப்ப நினைத்தால், உடனே காரிலோ' ரயிலிலோ கோயில்பட்டிக்கு பருத்திப் பொட்டணம்

களை கொண்டு வந்து விடலாம். அவ்வளவு வசதி யாகி விட்டது. அப்போதெல்லாம் கயத்தாற்றுக்கு என்ன, எங்கேயும் பஸ் போக்குவரத்து கிடையாது. நடந்தே தான் போகனும்! நாயக்கர் பருத்திப் பொட்டணத்தை, கழுத்து வலிக்க சுமந்துகொண்டு போவார் கயத்தாற்றுக்கு. உப்பன் பருத்தி தான் அமோகமாக விளையும். வியாபாரிகள் ஊர்தேடி வந்து வாங்குகிற வழக்கம் ஏற்படவில்லை. ஆகவே தலை ஒடிய சுமக்க வேண்டும். சுமந்து கொண்டு போய் தான் பருத்தியை கடையில் விலைக்குப்போட வேண்டும்.

அங்கயற்கண்ணி என்று ஓர் அம்மாள், பருத்தி வாங்கும் கடை வைத்திருந்தாள், அடேயப்பா! இப்போ நினைத்தாலும் ஞாபகம் நன்றாக இருக்கிறது! பூசணிப்பழம்போல் நிறம். நல்ல உயரமும் உருட்டும், சிரித்த முகம். எந்நேரமும் வெற்றிலை யும் கருப்பட்டிப் புகையிலையும் வாய் நிறைந்து சிவேரென்று இருக்கும். காதுகளில் சிகப்புக் கம்மல். நெற்றியில் ஒற்றை நாமம் போல பச்சை குத்தியிருப்பாள். இரண்டு கைகளிலும் பச்சைக் கோலங்கள். உச்சி வகுடு எடுத்த சுருட்டை தலை யில் ஊடுநரை, கைகளில் கனமான பித்தளைக் காப்பு. கால்களில் கனமான உருண்ட வெள்ளித் தண்டை. பச்சை நிறச்சேலை தான் எந்நேரமும்!

விற்க வருகிறவர்கள் பருத்தி மூட்டைகளோடு கடை வாசலில் போய் நின்றால், அவர்களை முறை வைத்துச் சொல்லி, அழைத்து வரவேற்பாள். கை கொடுத்து மூட்டையை இறக்கி வைப்பாள்.

ஆனால் ஒரு சங்கடமென்னவென்றால், பருத்தி விற்க வந்தவர்கள் மதித்த எடை, நிறுக்கும் போது இருக்காது. இந்தக்காலம் மாதிரி தண்ணீர் தெளித்து பருத்தியை அடைத்து கொண்டுபோகிற நீச வழக்கம் அப்பொழுது உண்டாகி இருக்கவில்லை. அதைக்கூட இந்த வியாபாரிகள் வந்து தான், அவர்களுக்குச் 'சொல்லி' கொடுத்தார்கள்!

சுத்தமான பருத்தி. ஒரு தூசி தும்பு பார்க்க முடியாது. நன்றாக வெயிலில் காயவைத்து எடுத்துக் கொண்டு போவார்கள்.

அந்தக்காலத்தில் கடைகளில் இருக்கும் அந்தத் தராசுக்கு. துலாக்கோல் தராசு என்றோ என்னவோ பெயர் சொல்லுவார்கள். ஒன்னரை முழத்தில் ஒரு கருப்புக் கம்பு உருண்டையாக ஒரு பக்கத்தில் கனமாகவும், போகப்போக சிறுத்தும் இருக்கும். சிறுத்த நுனியில் 'ய' மாதிரி ஒரு வளையம் தொங் கும். ஒற்றைத் தட்டு தான். தட்டு இரும்புத் தகடு அல்ல. ரெட்டுத்துணி. அதில் சம்சாரிகள் பருத்தியை அள்ளி வைப்பார்கள். படி கிடையாது. தராசுக் கம்பில்வெள்ளை நிறத்தில் பல்லி முட்டையள வில் நுனி சிறுசிறு வட்டங்களாக ஒருவரிசை இருவரிசை என்று வட்டங்கள் இருக்கும். எடைக்கு தகுந்தபடி, சுருக்குக் கயிற்றை நகர்த்திப் பிடித்துக் கொண்டுதான் நிறுக்கிறது. துலா கணக்கில்தான் நிறுக்கலாம், அதில்.

அங்கயற்கண்ணி குனிந்து தராசு பிடித்து நிறுக்கிறதே ஓர் அழகாக இருக்கும்! பருத்தி போட வந்தவர்களுக்கு ஒரு கணக்கும் தெரியாது, அவளைப்பார்த்து அவர்கள், "அங்கயகண்ணி, இங்கே பாரம்மா....பாவமும் புண்ணியமும் உன் கையிலே" என்று கருடாழ்வார் சிலைமாதிரி, இரண்டுகைகளையும் அவளை நோக்கி விரித்து வைத்துகொண்டு, சொல்லுவார்கள். இப்படிச் சொல்லக் கேட்கும் போதேல்லாம் அங்கயற் கண்ணி கெக்கொலி கொட்டிச் சிரிப்பாள். அந்த சிரிப்புச்சத்தம் இப்போ நினைத்தாலும்கூட காதில் கேட்கிறமாதிரி இருக்கிறது! ஆனால் எடை கேட்க கூடாது, அவள் வச்சதுதான் சட்டம்! துலாக்கோல் தராசு தானே! பின்னே எப்படி இருக்கும் எடை!

கொஞ்ச காலம் கழித்து, படியும், தராசும் வந்தன. பருத்தி மூட்டைபோட வந்தவர்களுக்கு ஏதோ சிலவிஷயங்கள் புரிவது போல தெரிந்தன. ஆனால் மிகக் கொஞ்ச காலத்துக்கெல்லாம் அந்தப் பழைய மாயை வந்து அப்பிக்கொண்டது. கள்ளப்படிகள் வந்து நடமாட ஆரம்பித்தன. பெரிய பலம், சின்னபலம், பெரிய துலான், சின்ன துலான் என்றெல்லாம் ஒரே குளறுபடி!

காலம் மாறியது—நல்லாட்சி, இந்த கொள்ளையை தடுத்து நிறுத்த முன்வந்தது.

நட்ட நடுஇருட்டில் உச்சியில் பொழுது திடீ ரென்று தோன்றியது மாதிரி, ஒரு நாள் எல்லாப் படிகளும் தராசுகளும் ஜப்தி செய்து அப்புறப் படுத்தப்பட்டன. புது மாதிரி கிலோ கிராம் படிகளும், தட்டோட்டம் இல்லாத புதிய தராசு களும் எங்கே பார்த்தாலும் வந்துவிட்டன! எந்த ஊருக்குப்போனாலும், எந்த ஜில்லாவுக்குப் போனாலும் எங்கேயும் மெட்ரிக் எடை! ஒரே எடை! ஒரே நிறை! எந்த வகையான குளறுபடிக்கும் இட மில்லை. சின்னப்பையன் கூட சீராக ஏமாற்றாமல் நிறுக்கலாம். வியாபாரம் செய்யலாம். நியாயமான, குளறுபடிக்கு இடமில்லாத மெட்ரிக் எடை அளவு நாட்டில் புகுத்தப்பட்டது. அங்கயற்கண்ணி போன்றவர்களின் பாச்சா இனிமேல் பலிக்காது!

......கருப்பு நிறத்தில் அடுக்கப்பட்டிருந்த புதிய கிலோ படிகளையும், மஞ்சள் நிறத்தில் அடுக்கப்பட்டிருந்த கிராம் படிகளையும் நாயக்கர்

மீண்டும் பார்த்தார். உதட்டை உறுத்துகிற வெள்ளிமீசைக் கற்றைகளைத் தொட்டுத்தடவி சரி செய்தார். பையனும் அவரைப்பார்த்து அதே மாதிரி தன் மேல் உதட்டைத் தொட்டுத் தடவி விட்டுக்கொண்டான். தூரத்தில் வந்துகொண்டிருந்த கடைக்காரர், தன் பையன், நாயக்கரைப் பார்த்து செய்கிற சேஷ்டைகளைக்கண்டு அனுபவித்துச் சிரித்துக்கொண்டே வந்தார்.

''ஐயா வாங்க, ஐயா வாங்க''

கடைக்காரர் வந்துவிட்டார் பையனுக்கு இப்பொழுது தான் விடுதலை கிடைக்கப் போகிறது! தன்னுடைய கூட்டாளிகள் இந்நேரமெல்லாம் ஜோராகச் சாப்பிட்டு விட்டு வந்து, பள்ளிக்கூடத்து வேப்பமர நிழலில் சடுகுடு விளையாடிக்கொண்டிருப்பார்கள், தான் மாத்திரம் அதில் கலந்து கொள்ள முடியாமல், தினம் தினம் இந்தப் பட்டிக்காட்டுக் காரர்களையே மத்தியான வேளைகளில் பார்த்துக்கொண்டே இருந்து தொலைக்க வேண்டியதிருக்கிறது, கிரகசாரம்!....

நாயக்கர் பருத்தியை எடுத்து எடுத்துத் தட்டில் வைத்தார். பையன் எழுந்து அவருடைய முதுகுக்குப் பின்னால் வந்து நின்று கொண்டு வாயைக் கோணலாக வைத்துக்கொண்டு அவருக்கு அழகு காட்டினான்!

''எலே ; சீ கழுதை! பெரியவர்! சும்மா இருடா''

கடைக்காரர் தொந்தி குலுங்க சிரித்துக் கொண்டே பையனைப்பார்த்து ஒரு பொய் அதட்டுப் போட்டார். நாயக்கரோ ஒன்றுமே தெரியாதவர் போல் தன் காரியத்தில் கவனமாய் இருந்தார். பையன் கலாட்டா செஞ்சால் செஞ்சுவிட்டுப் போறான்! எடை சுத்தமாக இருக்கில்ல! ஒன்றும் ஏமாற்று வேலையில்லையே! சீரான எடை! மன நிறைவுடன் வியாபாரம்! அதுபோதாதா மனசுக்கு நிம்மதி தர!

அவரையுமறியாமல், நாயக்கரின் நெஞ்சம், சீரான மெட்ரிக் எடை முறையை அமுலில் கொண்டு வந்தவர்களை வாழ்த்தியது!

## பஞ்சாயத்து யூனியன்களும் மீனளங்களும்

பஞ்சாயத்து யூனியன் மீன் வளர்ப்புத் திட்டத்திற்காக ரூ. 54,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், பஞ்சாயத்து வழங்கியுள்ள ரூ. 18,000-மும் அடங்குகிறது. இத் திட்டத்தில் மீன்களின் இனப்பெருக்கத்திற்காகவும், வளர்ப்பிற்காகவும் குளங்களை வெட்டுதல் முதலியன அடங்குகின்றன. தேர்ந்தெடுத்த வட்டாரங்களில் இவ்வாறு அமைக்கப்பட்ட குளங்களில், இத் திட்டத்தின் கீழ், மீனளத் துறை மீன் குஞ்சுகளையும் மீன் முட்டைகளையும் சேகரிக்கும். ஆரம்பத்தில் இத்திட்டத்தை 100 வட்டாரங்களில் நிறைவேற்றலாம் என உத்தேசிக்கப்பட்டது. இதுவரை 1964 ம் வருடம் அக்டோபர் மாதம் 31-ம் தேதி முடிய, 183 இடங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மீனளத்துறைக்கு பிளாஸ்டிக் பைகள், தகர டின்கள், பிராணவாயுஜாடிகள், மீன் குஞ்சுகளை முட்டையிடும் நிலையங்களிலிருந்து வட்டாரத் தலைமையிடங்களுக்கு எடுத்துச்செல்ல வண்டிகள் முதலியன கூடுதலாகத் தேவைப்படுகின்றவென்று தெரிய வந்தது. இதற்காக மீனளத் துறை வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 33,000 கூடுதலாக அனுமதிக்கப்பட்டது.

ஆண்டு தோறும் அல்லது நீண்ட பருவ காலம் முழுவதும் தண்ணீர் உள்ள ஆதாரங்களைச் சார்ந்து தான் வட்டார மீன்குஞ்சு வளர்ப்புத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இத்தகைய நிலை தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவுகின்றது என திருப்திகரமாகத் தெரிய வந்துள்ளதால், தஞ்சாவூர் மாவட்டத்தில் 36 வட்டாரங்களில் மீன்குஞ்சு வளர்ப்புத் திட்டங்களைக் கவனிப்பதற்காக காவலாளிகள் மீனள மேற்பார்வையாளர்கள் ஆகியோரை நியமித்தல், மூன்று சக்கர சைக்கிள்களை வாங்குதல் ஆகியவற்றிற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை, அரசாங்கம் அனுமதித்துள்ளது. இத் திட்டத்திற்கான செலவு வேளாண்மை மானியத்தின்கீழ் ஒதுக்கியுள்ள தொகையில் இருந்து செய்யப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் இத் திட்டத்ினால் மட்டும், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 9,000 மெட்ரிக் டன் மீன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இதன் மதிப்பு ரூ. 4,95,000 ஆகும்.

---

## "கேர்" ஸ்தாபனத்தின் நன்கொடை

சமீபத்தில், சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் பஞ்சாயத்துக்கு 'கேர்' (CARE) ஸ்தாபனம் நன்கொடையாக 'பம்புசெட்' ஒன்றினை அளித்துள்ளது. இதற்கான அன்றாட செலவை, தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. பஞ்சாயத்து, மனித உழைப்பினை நல்குகிறது. இதுவரையில் உற்பத்தி காணாத 7 ஏக்கர் நிலங்களுக்கு இதனால் நீர்ப்பாசனம் கிடைக்க ஏதுவாகும். அதில் 1½ ஏக்கர் நிலம், காய்கறிகள் பயிரிடப் பயன்படும். இப்பிரதேசத்தில் உள்ள ஆரம்பப்பள்ளிகளுக்கு மதிய உணவிற்காக, இக்காய்கறிகள், இலவசமாக வழங்கப்படும். மிச்சமிருக்கிற பகுதியில் பழ மரங்கள் வைக்கப்படுகின்றன. இவைகளிலிருந்து கிடைக்கும் பயனை, பஞ்சாயத்தில் உள்ள மக்கள் அடைவார்கள். 'கேர்' ஸ்தாபனத்தின் மற்றொரு பயன் தரத்தக்க நன்கொடை இப் பம்புசெட்.

# இந்தியாவில் கோழி வளர்ப்பு

இந்தியக் கோழிப் பண்ணைத் தொழில் பழைய நிலையை விட்டு இப்போது முன்னேற்ற வழியில் சென்று கொண்டிருக்கிறது. ஒரே அடை காக்கும் முறையில் பல நூற்றுக்கணக்கான குஞ்சுகளைப் பொறிக்கும் நடு ரக அடை காக்கும் முறை, இப்போது கையாளப்பட்டு வருகிறது.

சென்ற சில ஆண்டுகளாக இந்தியாவில் கோழிப் பண்ணைத் தொழில் வளர்ச்சியைக் கண்டு வருகிற ஒருவருடைய கருத்து இது. நம் நாட்டில் இப் புதிய முன்னேற்ற வழிக்கு மிகவும் உதவியவர் அவர். அமெரிக்கக் கோழிப்பண்ணை நிபுணர் டாக்டர் ஏர்ல் என். மூர் என்பது அவருடைய பெயர்.

இந்தியாவில் கோழிப் பண்ணைத் தொழில் வளர்ச்சிக்கு டாக்டர் மூர் கூறுகின்ற கீழ்க்கண்ட யோசனைகள் பயனுள்ளவையாகும்

1. தீவனத்தில் அபிவிருத்தி.—கோழிப்பண்ணை வளர்ச்சிக்கு இது வரை நல்ல தீவனம் ஒரு பெரும் இடையூறாக இருந்தது. இப்போது வணிக முறையில் தீவனம் உற்பத்தி செய்யும் தொழிலில் சில பெயர் பெற்ற ஸ்தாபனங்கள் ஈடுபட்டிருப்பதால், பண்ணை வளர்ச்சி துரிதமாக நடக்கும்.

2. நல்ல இனம்.—அமெரிக்க ஆர்போர் ஏக்கர் வகை கோழிகளை மகாராஷ்டிராவில் உள்ள அவருடைய பண்ணையில் விரைவில் வளர்க்கப்போவதால் கூடிய விரைவில் பெரிய அளவில் கோழிகளை வளர்க்க முடியும் என்கிறார் அவர். இது கோழி வளர்ப்புக்குப் பெரிதும் ஊக்கமளிக்கும்.

3. விஞ்ஞான முறையில் கோழிப் பண்ணை நிர்வகிப்பதில் பயிற்சி.—இவ்வகையில் பண்ணை ஆட்களுக்கு ஒரு மாதம் முதல் 6 மாதங்கள் வரை உஸ்மானியப் பல்கலைக் கழகம் பயிற்சி அளிக்கிறது. இப் படிப்பட்ட பயிற்சிக்கு ஆதரவு மேன்மேலும் பெருகுகிறது.

4. நல்ல, மலிவான கோழிக் கூண்டுகள் அமைப்பது.—கிராமங்களில் 100 முதல் 200 கோழிக் குஞ்சுகளை வளர்க்க மூங்கில் மூலம் கோழிக்கூண்டுகள் அமைக்கலாம். இதே முறையில் 2,000 கோழிக் குஞ்சுகளை வளர்க்கவும் ஏற்பாடு செய்யலாம்.

5. இறப்பு விகிதத்தைக் குறைக்க வழி.—ஆழ்ந்த கவனம், நல்ல மருத்துவ வசதிகள் அதாவது ஊசி முறை போன்றவை மூலம் இறப்பு விகிதத்தை 2 சத வீதத்திற்கோ அல்லது அதற்கும் குறைவாகவோ குறைக்கலாம்.

விற்பனை வாய்ப்பு.—உபரி முட்டைகளை வைத்துப் பாதுகாக்க குளிர்சாதன வசதிகள் வேண்டும். 10,000 முட்டைகள் வரை சேமித்து வைக்க வசதியிருந்தால் விற்பனைக்கு வசதியாக இருக்கும்.

இந்தியாவில் தீவிர விவசாயத் திட்டம் அமுலில் உள்ள பகுதிகளில், கோழிப் பண்ணை வளர்ப்பு முறையை, மேற்கொள்ள இவ்வாண்டு இறுதிக்குள் டாக்டர் மூர் முடிவு செய்திருக்கிறார். நாடு முழுவதிலும் நடத்திய ஆராய்ச்சியின் பயனாக கிட்டிய பலன்களைக் கொண்டு, கோழிப் பண்ணை வளர்ப்பில் புதிய முறைகளைப் புகுத்துவதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தினை பலம்பெறச் செய்வதே இப் புதிய முயற்சியின் நோக்கம்.

## ஜனத்தொகை அதிகரிப்பின் ஆபத்து

நம்முடைய நாட்டின் ஜனத்தொகை தற்போதைய விகிதத்திலேயே, அதாவது, ஆண்டொன்றுக்கு இரண்டு சத விகிதம் அடிப்படையில் தொடர்ந்து பெருகிவர விட்டு விடப்பட்டால், 1975-ம் ஆண்டுக்குள், அது 62·5 கோடிக்குப் பெருகி விடும். நாட்டின் பொருளாதார வளங்களின் வளர்ச்சி வேகத்தையும் மிஞ்சிய அளவில் ஜனத்தொகை பெருகி வருவது பின்னும் மோசமான நிலைக்குக் கொண்டு சென்றுவிடும். ஜனத்தொகை அதிகரிப்பை முற்றிலும் கட்டுப்படுத்தி வருவதுடன், தொழில் துறை விவசாயத் துறை ஆதாரங்களை அபிவிருத்தி செய்து வருவது தான், இந்தச் சங்கடங்களுக்குத் தீர்வு கண்டு, நாடு சுபிட்ச நிலையை எய்தச் செய்வதற்கு வகை செய்யக்கூடிய ஒரே வழியாகும்.

(மத்திய அரசாங்க துணை சுகாதார அமைச்சர் திரு. பி. எஸ். நாஸ்கர், அண்மையில் புது டெல்லியில் கிராமத் தலைவர்கள் முகாமினை துவக்கி வைத்துப் பேசுகையில் வெளியிட்ட தகவல்.)

## கிராமங்களில் க்ஷேம நல ஊழியர்களுக்கு வீட்டு வசதி

சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு, வட்டார அபிவிருத்தி பள்ளிக்கூடங்கள் போன்ற க்ஷேமநல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கிராமப் பகுதிகளில் பெருமளவில் வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டுமென்று, தேசிய அபிவிருத்தி கவுன்சில் நியமித்துள்ள சமூக சேவை பற்றிய கமிட்டி கூட்டம், அண்மையில் நடைபெற்ற பொழுது, பொதுவாக ஒப்புதல் அளித்துள்ளது.

# உறக்கத்திலிருந்த 9 கிராமங்கள்

யாகாச்சி நதி, தன் சுற்றுப்புறத்தைப் பற்றிய கவலையின்றி, அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் கரையில் தொட்டக்கனகலும் மற்றும் எட்டு கிராமங்களும் இருக்கின்றன. இவை, மைசூர் மாநிலம் ஹாசன் மாவட்டத்தைச் சேர்ந்தவை. இந்த ஒன்பது கிராமங்களில் வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு வந்தனர். ஒருவருக்கொருவர் உறுதுணையாக, ஒத்து வாழ்வது என்பது அவர்களுக்குத் தெரியாத ஒன்ருக இருந்தது. தங்கள் சமுதாயம் முழுவதும் முன்னேற்றமடைய ஒன்றுபட்டு பாடுபடலாம் என்ற எண்ணமே அவர்களுக்கு எழவில்லை. தங்கள் எதிர்காலச் சந்ததியாரைப் பற்றி அவர்களில் ஒருவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களது பெற்ருேர்கள், மூதாதையர்கள் மட்டும் அவர்களுக்கு உருப்படியாக என்ன வைத்து விட்டுப் போனுர்கள்? ஒன்றுமில்லை. ஆகையால் அவர்களும் தங்கள் சந்ததியாரின் நலன் பற்றி கவலைப்படவில்லை. ஆக, எங்கும் துன்பம், வறுமை சண்டை, சச்சரவுகள் இவற்றுடன் அக்கிராமங்கள் காலத்தைக் கடத்தி வந்தன.

ஆனுல், காலம் அப்படியே போய் விடவுமில்லை. ஏதோ ஒரு தூண்டுதல், ஊக்குவிப்புக்குத் தான் இத்தனை நாள் காத்திருந்தது போல், திடீரென ஒரு நாள் இந்த ஒன்பது கிராமங்களும் விழிப்படைந்தன. அத்தகைய விழிப்பைத்தரும் தூண்டு கோலாக வந்தது சமுதாய நல அபிவிருத்தித் திட்டம்.

இத் திட்டம் இப் பகுதியில் அமுல் செய்யப்பட ஆரம்பித்ததும், தொட்டக்கனகலில் புதிய வாழ்வு மலரத் தொடங்கியது. கசப்பு, காரம் என்ற வெறுப்புணர்வுகளில் மூழ்கியிருந்த கிராம மக்களிடையே இனிய கூட்டுறவு உணர்வு தோன்றியது. இவ்வாறு சேர்ந்து பாடுபடுவதன் பலனை உணர்ந்து செயல்படத் தொடங்கியதால், இக்கிராமம் வெகுவாக முன்னேறியது. இறுதியில், 1963-64-ல் மாவட்டத்திலேயே மிகச் சிறந்த கிராமமாக தொட்டக்கனகல் தேர்ந்தெடுக்கப்பட்டு பெருமை பெற்றது.

இன்று, தொட்டக்கனகல் தன் உன்னத சாதனைகளைப் பறைசாற்றி நிற்கிறது. ஒரு கிராம மக்களுக்குச் சரியான தலைமை கிடைத்து, அத் தலைமையின் கீழ் அனைவரும் ஒற்றுமையாக உழைத்தால், அந்தக் கிராமம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைய முடியும் என்பதற்கு தொட்டக்கனகல் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. இவ்வூர் பஞ்சாயத்து, இன்னும் பின்னணியில் உள்ள சுற்றுப்புற கிராமங்களுக்கு ஒரு வழிகாட்டியாக, உற்சாகமூட்டும் ஒரு முன்னேடியாக இருந்து வருகிறது. இன்றைய சமுதாயம் மட்டுமின்றி, எதிர்காலச் சமுதாயமும் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற பரந்த கண்ணேட்டத்துடன் இந்தப் பஞ்சாயத்து, பற்பல பணிகளை ஆற்றி வருகிறது.

தொட்டக்கனகல் பஞ்சாயத்தைச் சேர்ந்த ஒன்பது கிராமங்களும் குடிதண்ணீர் வசதி பெற்றிருக்கின்றன. இந்தக் கிராமங்கள் அனைத்தையும் இணைக்கக்கூடிய சாலை இருக்கிறது. இந்தச்சாலையின் பெரும்பகுதி, கிராம மக்கள் வழங்கிய உழைப்புத் தானத்தாலும், நன்கொடையாலுந்தான் உருவாயிற்று. ஐந்து ஆரம்பப் பள்ளிகள், விளையாட்டுத் திடல் வசதியுடன் நிறுவப்பட்டுள்ளன. மாநில முதியோர்கல்வி கவுன்சில் அளித்த உதவியைக் கொண்டு நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் ஒரு பள்ளிக்கூடம், கூட்டுறவு பண்டக சாலை, மருந்தகம் சமுதாய மண்டபம், மாதர் பொழுதுபோக்கு மன்றம், குழந்தைகள் மண்டபம் ஆகியவை கட்ட, பஞ்சாயத்து நிலம் வாங்கியிருக்கிறது. யுவக் மண்டல் என்ற பெயரில் இயங்கும் இளைஞர் சங்கம் சுறுசுறுப்பாக இருந்து வருகிறது. இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் காய்கறிகள், பழவகைகள் சாகுபடி செய்வதற்காக நான்கு ஏக்கர் நிலத்தைப் பஞ்சாயத்து வழங்கியிருக்கிறது. இந்த சங்கத்தினர் உற்பத்தி செய்த தானியங்கள், பள்ளிக் குழந்தைகளுக்கான நண்பகல் உணவுத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல, இச்சங்கத்தினர் கட்டிட வேலைகளை காண்டிராக்ட் எடுத்து மூன்று வீடுகளை வெற்றிகரமாகக் கட்டிமுடித்தனர். அவர்கள் சில கலவை எருக்குழிகளை பராமரித்து வருவதோடு ஒரு கோழிப்பண்ணையையும் நடத்தி வருகிருர்கள்.

(32-ம் பக்கம் பார்க்க)

## மாவட்ட சிறப்புத் தகுதி பெற்றன

# வேலையின்மை பிரச்னை இல்லாத கிராமம்

மேற்குவங்க மாநிலம், கிருஷ்ணநகர் அபிவிருத்தி வட்டாரத்தைச் சேர்ந்த கோபால்பூர் என்ற சிறு கிராமம் சுயமுயற்சிக்கும், விவசாய முன்னேற்றத்திற்கும் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. தனது எல்லைக்குள், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்னைக்கே இடம் இல்லாதபடி செய்த பெருமை இக்கிராமத்திற்கு உண்டு.

கோபால்பூரில் 95 குடும்பங்கள் வாழ்கின்றனர். இங்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை, செங்கல் கட்டிட வீடு ஒன்று கூட இருந்ததில்லை. இப்போதோ, 84 செங்கல் கட்டட வீடுகள் உள்ளன. மேலும் சில கட்டப்பட்டு வருகின்றன. ஐந்தே ஆண்டுகளில் இந்த அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்குக் காரணம் விவசாய அபிவிருத்தி மூலம் அடைந்த செல்வ வளப் பெருக்கந்தான். கிராம மக்களில் சுமார் பாதி பேர்கள், தங்கள் சொந்த நிலங்களில் விவசாயம் செய்து வருமானம் பெறுகிறார்கள். நிலமில்லாத மற்றவர்களுக்கும், வருட முழுவதிலும் எந்த நேரத்திலும் வேலை வாய்ப்பு இல்லாமற் போவதில்லை.

### அன்றும் இன்றும்

முன்பு போல் இல்லாமல், இப்போது திருந்திய விவசாய முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ரசாயன உரங்கள் தாராளமாக உபயோகிக்கப்படுகின்றன. குறைந்த ஆழத்திலேயே தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு, குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருப்பதால், நல்ல நீர்ப்பாசன வசதி கிடைத்திருக்கிறது. இந்த வசதிகள், புதிய முயற்சிகளோடு முன்பைவிட பெருத்த அளவில் விவசாயம் நடைபெறுகிறது. நெல், சணல், வெங்காயம், உருளைக்கிழங்கு, கடுகு முதலியவை சீரிய முறையில் சாகுபடி செய்யப்படுகின்றன. மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை, கிராம மக்கள் யாவரும் சணல் பயிரிடுவதில் தீவிரமாக ஈடுபடுகின்றனர். நவம்பரிலிருந்து ஏப்ரல் வரை வெங்காயம், கடுகு, உருளைக் கிழங்கு, மற்றும் பல காய்கறி வகைகளைப் பயிரிடுகின்றனர். இப்படி ஆண்டு முழுவதும், ஏதாவது ஒரு வகையான விவசாயம் தொடர்ந்து நடைபெறுவதால், கிராம மக்கள் அனைவருக்கும் எப்போதும் வேலை வாய்ப்பு இருந்து கொண்டே இருக்கிறது. எனவே, இக் கிராமத்தைச் சேர்ந்த எவரும், பற்றுக்குறை ஏற்பட்ட நேரங்களில் கூட, அரசாங்கத்திடமிருந்து உதவிப் பணம் (வாழ்க்கை நடத்துவதற்காக) கோரியதில்லை. மேலும், விவசாய காரியங்கள் தீவிரமாக நடைபெறும் உச்ச கட்டங்களில், அண்டை கிராமங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் இக் கிராமம் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்த ஆண்டு கோபால்பூரில், ஏக்கர் ஒன்றுக்கு சராசரி மாசூல், சணல் 30 மணங்கும், நெல் 27 மணங்கும், கடுகு 9 மணங்கும் ஆகும். விவசாயிகளுக்கு மேலும் ஊக்கம், பயிற்சி அளிப்பதற்காக செய் முறை மாதிரிப் பண்ணை ஒன்று விவசாய இலாகாவினால் இக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

எல்லா வகைகளிலும் சுயதேவைப் பூர்த்தி லட்சியத்தை நோக்கி நம்பிக்கையுடன் முன்னேறும், நாட்டின் முன் மாதிரி கிராமங்களில் ஒன்றாக, கோபால்பூரும் விளங்குகிறது.

---

# நெல் உற்பத்தி நான்கு மடங்காகியது

உத்திரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சிதாரா கஞ்ச் என்ற விடத்தில் திறந்த வெளி சிறை ஒன்று இருக்கிறது. அங்கு கைதிகளைக் கொண்டு விவசாயமும், தொழில்களும் நடத்தப்படுகின்றன. அந்தச் சிறைக்கு, சம்பூரணானந்த் விவசாய தொழில் முகாம் சிறை என்று பெயர். அங்கு நெல் சாகுபடி செய்யப்பட்டு வருவதில், சென்ற ஆண்டைப்போல் நான்கு மடங்குக்கும் அதிகமான மாசூல் இந்த முறை கிடைத்திருக்கிறது. சென்ற ஆண்டு 1,600 மணங்கு நெல் கிடைத்தது என்றால், இவ்வாண்டு 7,300 மணங்கு கிடைத்திருக்கிறது. சராசரி நெல் மாசூல் அளவு, ஏக்கர் ஒன்றுக்கு 22 மணங்காக உயர்ந்திருக்கிறது. கோதுமையும் நல்ல மாசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு சுமார் 1,000 ஏக்கர் நிலத்தில் கோதுமை விதைக்கப்பட்டிருக்கிறது.

நெல் உற்பத்தி, சராசரி மாசூல் அளவு பெருகியிருப்பதற்கும், கோதுமை முன்பைவிடப் பரந்த அளவில் சாகுபடி செய்யப்படுவதற்கும் முக்கிய காரணங்கள் சில உண்டு. முன்பு இல்லாத நாற்று நடவு முறை இப்போது கையாளப்படுகிறது. புதிய பொறுக்கு விதைகளும், ரசாயன உரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அதோடு சிறை அதிகாரிகளும், கைதிகளும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் தீவிர அக்கறை செலுத்தி வருகின்றனர்.

**கிராம மக்கள், தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள அல்லது தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள, அவர்களே திட்டமிட்டுச் செயலாற்ற முடியும் என்பதை நம்ப மறுக்கிறவர்கள், மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த மந்த்வா கிராமத்தைப் பார்த்தபின் தங்கள் கருத்தை மாற்றிக்கொள்வார்கள்.**

# வருமானம் இரட்டிப்பாக கிராமத் திட்டம்

ஔரங்காபாத் மாவட்டத்தில், சுமார் 800 மக்கள் தொகையும் 100 குடும்பங்களும் கொண்ட ஒரு சிறு கிராமம் மந்த்வா. ஜல்னா நகரிலிருந்து பிரதான சாலை வழியாக ஏழு மைல் தூரம் சென்று அங்கிருந்து கிளைப்பாதையில் மூன்று மைல் சென்றால் மந்த்வாவை அடையலாம். இந்தக் கிளைப்பாதை, கிராம மக்கள் சிரமதானத்தால் போடப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த கிராம முன்னேற்றத்தில், அதிசயிக்கத் தக்க அம்சம் என்னவென்றால், இக்கிராமம் தனக்கென ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்திவருவதுதான். இந்தக் கிராமத் திட்டம் தேசிய திட்டங்களோடு பொருந்தி அமையக்கூடியதாகவும் இருக்கிறது. இத்திட்டத்தின்படி, மிக விரைவில் கிராம வருமானத்தை இரட்டிப்பு மடங்காக அதிகரிக்க மந்த்வா மக்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

இத்தகைய குறிக்கோளை முன்வைத்து செயலில் இறங்கியுள்ள இந்த மக்களுக்கு உற்சாகமூட்டவும் விஞ்ஞான, தொழில் நுட்ப யோசனைகள் பொருளாதார உதவிகள் அளிக்கவும், உள்நாட்டு—வெளிநாட்டு ஸ்தாபனங்கள் பல பணிபுரிந்து வருகின்றன. விரிவான இந்தக் கிராமத் திட்டத்திற்கு ஜல்னா பஞ்சாயத்து யூனியன், ஔரங்காபாத் மாவட்டக் கூட்டுறவு நில அபிவிருத்தி பாங்கு, ஜல்னா கிராம சேவக் பயிற்சி நிலையம் ஜல்னா ரோட்டரி சங்கம் முதலிய உள்நாட்டு ஸ்தாபனங்கள் துணைபுரிந்து வருகின்றன.

ஜல்னா ரோட்டரி சங்கம், தனது சமுதாய சேவைக்குரிய இடமாக இக்கிராமத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறது. சங்கத் தலைவரான திரு. சி.பி. சாஸ்திரியும், இன்னொரு உறுப்பினரான திரு. பி.ஆர். பார்வாலியும் (இவர் ஒரு முற்போக்கு விவசாயி) மந்த்வா கிராமத் திட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். சரியான தலைமை இருந்து, தக்க வசதிகளும் அளிக்கப்பட்டால், கிராமங்கள் மிகவும் சிறப்பான வளர்ச்சி அடைய முடியும் என்பதைக் கிராமப்புற மக்களுக்குச் செயல்முறையில் காட்ட வேண்டும் என்பது அவர்கள் அவா. நாட்டைப் பாதுகாக்க யுத்தக் கருவிகள் எவ்வளவு முக்கியமோ, அதே போல் நாடு வளம்பெற விவசாயமும் முக்கியம் என்ற திடமான நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது, ஆகையால் விவசாய அபிவிருத்திக்குத் தங்களால் இயன்றதைச் செய்யவேண்டும் என்பதில் நாட்டம் கொண்டுள்ளனர்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கிளீவ்லாந்து ரோட்டரி சங்கம், 'வறுமையை எதிர்த்துப் போர்' என்ற பெயரில் இயங்கும் உலக ஸ்தாபனம் ஆகியவையும் மந்த்வா கிராம அபிவிருத்தி திட்டத்தில் தீவிர அக்கறை காட்டி வருகின்றன. இந்த கிராமத்தின் குடிதண்ணீர் பிரச்னை தீர்வுக்காக, அந்த ரோட்டரி சங்கம் 800 டாலர் (சுமார் ரூ. 4,000) நன்கொடை வழங்கியிருக்கிறது. அதே கிராமத்தில் நிலங்களுக்கு நீர்ப்பாசனக் கிணறுகளைச் சொற்பச் செலவில் தோண்டுவதற்கு உதவியளிக்க இன்னொரு ஸ்தாபனம் சம்மதித்திருக்கிறது.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான அம்சம் நீர்ப்பாசனத் திட்டந்தான். இத்திட்டம் ஆரம்பமாவதற்கு முன், இக்கிராமத்தில் ஒரு ஐந்தாறு விவசாயிகளிடந்தான் அவர்களது நிலத்தில் நீர்ப்பாசன கிணறு இருந்தது. இந்த அதிர்ஷ்டசாலிகள் மற்ற விவசாயிகளைவிட அதிக

மாகுல் பெறவும், மேலான வாழ்க்கை நடத்தவும் முடிந்தது. அதனுல் மற்றவர்களும் எண்ணத் தொடங்கினர், "ஏன் ஒவ்வொருவரது குடும்பத் திற்கும் அவரவர் நிலத்தில் கிணறு எடுக்க முடியாது? அப்படிக் கிணறு தோண்டி தண்ணீர் வசதி கிடைத்து சாகுபடி செய்தால் இப்போதை விட அதிகப் பலன் அடையலாமே! ஏன் அவ்வாறு செய்யக்கூடாது?" என்று சிந்தித்தனர். அந்தச் சிந்தனையின் விளைவாக, ஒருவரோடு ஒருவர் இதைப் பற்றி அடிக்கடிப் பேசிவந்ததின் பலனுகத்தான் கிணறுகள் தோண்டும் திட்டம் உருவாயிற்று,

இன்று, மந்த்வா கிராமத்தின் வயல்களில் எங்கு பார்த்தாலும் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. அநேகமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு நீர்ப்பாசன கிணறு இருக்கிறது. சிலருக்கு நல்ல ஊற்று கிடைத்திருக்கிறது. ஆகையால் அவை வற்ருத கிணறுகளாய் அமைந்திருக்கின்றன.

கிராமத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டிருக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களில் ஒன்றுதான் கிணறுகள் வெட்டுதல், இதே போல் வேறு வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. உதாரணமாக, புதிய பள்ளிக்கட்டிடம் ஒன்று அநேகமாக கட்டி முடிக்கப்பட்டு விட்டது. கிராமத்தை, முக்கிய சாலையுடன் இணைக்கும் சிறு சாலையொன்று போடும் வேலை பாதி முடிவடைந்திருக்கிறது. ஒரு சேவைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. கிணற்று பாசனத்திற்கு வசதியாகப் பொருத்த ஆயில் எஞ்சின்கள், 'பம்பு' செட்டுகள் வாங்க, 'ஆர்டர்' கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இவ்வளவு ஆவலோடு இருக்கும், இதே கிராம மக்கள் இரண்டாண்டுகளுக்கு முன் மிகவும் மெத்தனபோக்கில் இருந்ததும் உண்மை. ரோட்டரி உறுப்பினர்கள், அபிவிருத்தி யோசனைகள் பலவற்றைக்கூறியபோது, அவற்றைக் காது கொடுத்துக் கேட்டார்களில்லை. ஆனுல் கிணறுகள் தோண்டப்பட்டு அதன் பலனை அனுபவிக்கத் தொடங்கிய பிறகு தான் இப்படித் திட்டமிட்ட வேலை செய்வதன் அவசியத்தை உணர்ந்து, அவர்களே இவற்றில் இப்போது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## அவர்களும் சேமிக்கிருர்கள் !

நகரங்களில், பலர் பலவிதமாக பிழைப்பு நடத்துகிருர்கள். அவர்களில் ஒரு வகையினர், நாகரிக உடையணிந்து செல்பவர்களின் காலணிகளுக்குப் 'பாலீஷ்' போட்டு, நபர் ஒன்றுக்கு இரண்டணு; நாலணு என்று ஊதியம் கேட்டுப் பெறுவர். இத்தொழிலில் பெரும்பாலும் சிறுவர்களே ஈடுபடுகின்றனர். இத்தகைய பையன்கள் சிலர்—லட்சுமணபுரியைச் சேர்ந்த ஹரத்கஞ்ச் என்ற இடத்தில் இருப்பவர்கள்—ஒன்று சேர்ந்து, சிறு சேமிப்புச்சங்கம் ஒன்றை அமைத்திருக்கிருர்கள். சிறுகச் சிறுகப்பணம் சேர்ப்பதற்கான ஊக்கத்தைத் தருவதற்குத் தான் சங்கம் இருக்கிறது. மற்றபடி, ஒவ்வொருவரும் தம்மால் இயன்றதைத் தனித்தனியாகத்தான் சேமிப்பு செய்கிருர்கள். இச்சங்கத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், தபாலாபீசில் தத்தம் பெயரில் சேமிப்பு கணக்கு வைத்திருக்கிருர்கள். இந்தக்கணக்குகள் மூலம் மாதம் ரூ. 5 முதல் ரூ. 30 வரை சேமிப்பதென அவர்கள் முடிவு செய்திருக்கிருர்கள்.

சிறு சேமிப்புத்திட்டத்தின் பலன்களை உணரத் தலைப் பட்டுள்ள இச் சிறுவர்கள், தங்களுடைய மற்ற தோழர்களையும் இவ்வாறு செய்யும்படித் தூண்டி வருகின்றனர். இவர்களில் சிலர் நாளொன்றுக்கு இரண்டு ரூபாய் அளவுக்குக்கூடச் சேமித்து வருகிருர்கள்.

---

29-ம் பக்கத் தொடர்ச்சி

இளைஞர் சங்க உறுப்பினர்கள் காட்டிய உற்சாகம், எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனுக இப்பகுதியில் நெல் உற்பத்தி 15 சதவிகிதமும், கேழ்வரகு போன்ற புஞ்சை தானியங்கள் உற்பத்தி 25 சதவிகிதமும் அதிகரித்தது. மீனள அபிவிருத்தியில் பஞ்சாயத்து கவனம் செலுத்தி வருகிறது. இத்தகைய வசதிகள் பலவும் பெருகி, மக்கள் முன்பைவிட நல்வாழ்வு வாழ்வதால், இப்போது தொட்டக்கனகலிலிருந்து வழக்குகளை எடுத்துக்கொண்டு கோர்ட்டிற்கு ஓடுவது என்பது அநேகமாக இல்லாமற் போய்விட்டது. மேலும் சிறு சிறு வழக்குகள் தோன்றினுலும் அவற்றைத் தீர்த்து வைக்க 'நியாயப் பஞ்சாயத்து' இருக்கிறது. இந்த கிராம கோர்ட் இதுவரை சுமார் 75 வழக்குகளில், இரு தரப்பாருக்கும் திருப்தியளிக்கக்கூடிய நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

முன்னேற்றப் பாதையில் குறிப்பிடத்தக்க தூரம் கடந்துவிட்ட தொட்டக்கனகல் செல்வ வள இலட்சியத்தை விரைவாக அடையும் என நம்பலாம்.

---

'பஞ்சாயத்து ராஜ்' இதழிலிருந்து இடம் பெறுபவை:
பக்கங்கள்: 9, 10, 11, 12, 29, 30, 31, 32 (8 பக்கங்கள்)
**Articles reproduced from 'Panchayati Raj' on pages 9, 10, 11, 12, 29, 30, 31, 32 (8 pages)**

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART 2
பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்திபற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெறுகிறது.)

## பஞ்சாயத்துத் தலைவர் அல்லது நிர்வாக அதிகாரி அல்லது அங்கத்தினரின்மீது வழக்குத் தொடரும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

**Act—Madras Panchayats Act 1958—Section 169—Power to accord sanction for prosecution of President or executive authority or member of a Panchayat—Delegated to Collectors.**

**(G.O.Ms. No. 500, R.D. and L.A., dated 2nd March 1965.)**

கிராமப் பஞ்சாயத்திலுள்ள நிர்வாகிகளின் மீது வழக்குத் தொடரும் அதிகாரத்தை, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று புதுடில்லியில் 1964-ம் ஆண்டு ஜூலையில் கூடிய சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்து ஆட்சியின் வருடாந்திர மகாநாட்டிலும், மற்றும் மாநில அமைச்சர்களின் சமுதாய அபிவிருத்தி பஞ்சாயத்து ஆட்சி மகாநாட்டிலும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 169-வது பிரிவுப்படி, பஞ்சாயத்துத் தலைவர் அல்லது நிர்வாக அதிகாரி அல்லது அங்கத்தினர் ஆகியோரின் மீது வழக்குத் தொடரும் அதிகாரம் அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைத்து அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 500-ன் சுருக்கம்.)

---

## பஞ்சாயத்துக்களிடம் நிறைவேற்றப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்த கிராம வேலைகள் திட்டம் ரத்து செய்யப்படுகிறது.

**Works—Village Works Programme—Entrustment of works to Panchayats for execution—Provision—Cancelled.**

**(Memorandum No. 246242/P4/ R.D. and L.A., dated 16th March 1965.)**

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2103-ல் பத்தி 6 (7)-ல் உள்ள உத்தரவுகள் படி, கிராம வேலைகள் திட்டத்தின்கீழ், நிறைவேற்றப்படவேண்டிய காரியங்கள், பொதுவாக பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். பஞ்சாயத்துக்கள் அவ்வேலைகளை அவைகளால் நிறைவேற்ற முடியாது என்று தெரிவித்துக்கொள்ளும் போதும் அல்லது வேறொருவரை நியமிக்க இயலாத போதும் மட்டுமே, டெண்டர்கள் விடப்பட்டு, வேலைகள் கண்டிராக்டர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

(2) அரசாங்கம் மேற்கண்ட நிலையை தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்) மற்றும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்தது. அதன்படி டெண்டர்கள் விடப்பட்டு, கண்டிராக்டர்களிடம் வேலைகள் ஒப்படைக்கப்படுவது, அதிக நன்மை பயக்கும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப, மேற்கண்ட பத்தி1-ல் கண்டுள்ள உத்தரவுகளுக்கு திருந்தமாக, கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படவேண்டிய காரியங்கள் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் ரத்து செய்யப்படவேண்டும் என்றும், பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கான டெண்டர் விதிகளுக்கேற்ப, டெண்டர்கள் விடப்பட்டு, கண்டிராக்டர்களிடம் வேலைகள் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 16-3-1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 246242-ன் சுருக்கம்.)

## பஞ்சாயத்தில் வானொலிப் பெட்டிகள் அமைப்பது பற்றிய உத்தரவு.

## Radio sets—Installation of additional radio sets in the Panchayats—Orders—Issued.

## (G.O. Ms. No. 480, R.D. and L A., dated 26th February 1965.)

தமிழ்நாட்டில் உள்ள எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் வானொலிப் பெட்டிகள் வழங்கப்படவேண்டும் என்றும், மொத்தம் 8,000 வானொலிப் பெட்டிகள் வழங்குவது திட்டத்தின் லட்சியம் என்றும் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. முன்னம் இருந்த தமிழ்நாடு ஒலிபரப்புத் துறை மூலமாகவோ அல்லது சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாகவோ, ஏற்கெனவே உதவித் தொகையைப் பெற்ற எந்த பஞ்சாயத்தும், மேற்கண்ட திட்டத்தின்படி, வானொலிப் பெட்டிகள் பெற தகுதியுடையன அல்ல என்று கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 26099-ல் அரசாங்கம் விளக்கம் தந்துள்ளது. மேலும் பஞ்சாயத்துக்களில் பொருத்தப்படவேண்டிய அங்கீகரிக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளின் மாதிரி வகைகள் பற்றி விரிவான விளக்கங்கள் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 725, மற்றும் அதேத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 800 ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கவேண்டும் என்ற திட்டத்தின் இலட்சியம் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் பூர்த்தியாயிற்று. இதற்கிடையில், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 26099-ல் உள்ள திட்டத்தின்கீழ் வராத பஞ்சாயத்துக்கள், மற்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குக்கிராமங்களை தன்னுள் கொண்டுள்ள பஞ்சாயத்துக்கள் ஆகியவை, அதற்குள் உள்ள பல்வேறு கிராமங்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ள, கூடுதலாக வானொலிப் பெட்டிகளை அமைத்துத்தரவேண்டும் என்று வேண்டுகின்றன. இந்த விஷயம் அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்பட்டது. அதன்பேரில், எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் ஒவ்வொரு வானொலிப் பெட்டி வழங்கும் திட்டத்தின் இலட்சியம் நிறைவேறிய பிறகே, பஞ்சாயத்துக்களுக்கு கூடுதலான வானொலிப் பெட்டிகள் வழங்கப்படும் விஷயம் ஆலோசிக்கப்படும் என்று உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கூறிய திட்டத்தின் இலட்சியம் நிறைவேறியவுடன், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள், சமூக நலனுக்கான பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கள் ஆகியவை மூலமாக, பஞ்சாயத்துக்கள், அவற்றுக்கு கூடுதலான வானொலிப் பெட்டிகள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளன.

2. பஞ்சாயத்துகளிடமிருந்து வந்துள்ள கோரிக்கைகளை அரசாங்கம் பரிசீலனை செய்தது. அதன்படி, சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை, கணிசமாக குறைக்கப்பட்டுவிட்டதால், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 725-ல் அனுமதிக்கப்பட்டுள்ள விகிதப்படி, பஞ்சாயத்துக்களுக்கு தேவைப்படும் எல்லா கூடுதலான வானொலிப் பெட்டிக்கும் உதவித் தொகை வழங்குவது இயலாது என்று அரசாங்கம் கருதுகிறது. இருந்தபோதிலும், பஞ்சாயத்துக்களின் வற்புறுத்தல் காரணமாக, சமூகக் கல்வி மானியத்திலிருந்து, உதவித் தொகையை பெற்றோ, பெறாமலோ, பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, கூடுதலான வானொலிப் பெட்டிகளை பஞ்சாயத்துக்களில் அமைக்கலாம் என்று அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது:—

(i) அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற வானொலிப் பெட்டிகளையே, ஒப்புதல்பெற்ற விலையில் பஞ்சாயத்துக்கள் வாங்கி பொருத்த வேண்டும். (அங்கீகரிக்கப்பெற்ற வானொலிப் பெட்டிகளின் மாதிரிகள், வகைகள் அடங்கிய பட்டியல், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1555-ல் தரப்பட்டுள்ளது.)

(ii) வெளிப்புற ஒலிப்பெருக்கியும், ஏரியல் சாதனமும் (aerial kit) கூடுதலான வானொலிப் பெட்டிகளுடன் வாங்கிப் பொருத்தப்பட வேண்டும்.

(iii) பஞ்சாயத்து யூனியனின் சமூகக் கல்வி மானியத்தில், போதிய நிதியிருந்தால், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், பஞ்சாயத்துக்களுக்கு கூடுதலாக வானொலிப் பெட்டிகள் வாங்க, உதவித் தொகைகளை அளிக்கலாம். அத்தகைய உதவித் தொகைகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குக்கிராமங்களை உள்ளடக்கிய பஞ்சாயத்துக்களுக்கு, கூடுதலாக மேலும் ஒரே ஒரு வானொலிப் பெட்டி வாங்குவதற்கு மட்டுமே அளிக்கப்படவேண்டும். கூடுதலான வானொலிப் பெட்டியின் தேவையானது, குறிப்பிட்ட பஞ்சாயத்திற்கு உண்மையிலேயே நியாயமானதா என்பதை, உதவித்

தொகைகளுக்கு ஒப்புதல் அளிக்கும்போது, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தெளிவு செய்துக் கொள்ளுதல் வேண்டும்.

(iv) வானொலிப் பெட்டி வாங்க அளிக்கப்படும் உதவித் தொகையானது, ஒவ்வொரு கூடுதலான வானொலிப் பெட்டிக்கும் ரூ. 100-க்கு (ரூபாய் ஒரு நூறு மட்டும்) மிகாமல், அல்லது வானொலிப் பெட்டியின் (ஏரியல் சாதனம், மற்றுப் வெளிப்புற ஒலிப்பெருக்கி உள்பட) விலையில், மூன்றில் ஒரு பங்கு, இவற்றில் எது குறைந்த செலவினமோ, அதை அளிக்கவேண்டும்.

(v) மேற்கண்ட துணைப் பத்தி (iii)-ல் கூறியுள்ளதுபோல், உதவித் தொகை பெற்று, கூடுதலாக வானொலிப் பெட்டி பொருத்த இயலாத பஞ்சாயத்துக்கள், மற்றும் இரண்டு குக்கிராமங்களுக்கு மேல் உள்ளடக்கிய பஞ்சாயத்துக்கள் இருந்து, அவற்றிற்கு கூடுதலாக ஒரு வானொலிப் பெட்டிக்கு மேல் தேவை இருந்தால், அந்த பஞ்சாயத்துக்களின், நிதி நிலை திருப்திகரமாய், அவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மற்றைய தவிர்க்க இயலாத செல வினங்களுக்கு நிதி ஒதுக்கிய பின்னரும், நிதி எஞ்சியிருந்தால், தேவையான, வானொலிப் பெட்டிகளின், மொத்த விலையையும், தங்கள் நிதியிலிருந்து கொடுத்து வாங்கிக்கொள்ளலாம். ஆனால் அத்தகைய வானொலிப் பெட்டிகள் ஒப்புதல் பெற்ற வானொலிப் பெட்டிகளாய் இருத்தல் வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 480-ன் சுருக்கம்.)

---

கிராமங்களில் பணிபுரியும் பெண் டாக்டர்கள், நர்ஸுகள் சுகாதார உதவியாளர்கள், தாயிகள் போன்றோருக்கு பாதுகாப்பு அளித்தல்.

## Establishment—Panchayats, Panchayat Union Councils and Panchayat Townships—Provision of safety measures to Lady Doctors, Nurses, Health Visitors, Thayis etc.—Working in rural areas—Instructions issued.

**(Memorandum No. 39705/E-5/R.D. and L.A., dated 17th March 1965.)**

இந்திய அரசாங்க, சுகாதார அமைச்சகத்தின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் தேதியிட்ட கடிதம் எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், நகரப் பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரிகள், மற்றும் பஞ்சாயத்து டவுன்ஷிப் குழுக்கள் ஆகியோருக்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக இத்துடன் அனுப்பப்படுகிறது. [கடிதத்தின் நகலைக் கீழே காணலாம்.] கிராம வாசிகளுக்கு வைத்திய உதவி அளிப்பதற்காக, கிராமங்களில் நியமிக்கப்பட்டுள்ள, பெண் டாக்டர்கள், நர்ஸுகள், சுகாதார உதவியாளர்கள் (Health visitors) மற்றும் தாய்கள் (Thayis) போன்றவர்களுக்கு தங்குவதற்கு தகுந்த வசதி செய்து கொடுத்து' அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளித்து, அவர்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்ய போக்குவரத்து வசதிகளையும் அளிப்பது, கிராமவாசிகளின் கடமை என்பதை, கிராம வாசிகள் உணரும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்திய அரசாங்க சுகாதார அமைச்சகத்தின்
8—2—1965 தேதியிட்ட கடிதத்தின் சுருக்கம்.

இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் கிராமங்களில் வசித்துவருகின்றனர். அவர்களின் நோய்களைத் தீர்ப்பதற்காகக் கூடுமானவரை எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. இதனையொட்டி ஏற்படுத்தப்பட்டுள்ள மருந்தகங்கள், கிளினிக்குகள் போன்றவற்றில் வைத்திய அதிகாரிகள், நர்ஸுகள், சுகாதார உதவியாளர்கள் போன்றோர் நியமிக்கப்பட்டுள்ளனர். கிராமங்களில் பணி புரிவதற்காக நியமிக்கப்படுபவர்கள், அங்கு தங்கும் வசதி, போக்கு வரவு ஆகியவை பற்றாக் குறையினால், அவ்விடங்களை விட்டு சீக்கிரமாகவே நகரங்களுக்கு கிளம்ப, சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். மேற்கண்ட வசதிக் குறைவுகள், வேலைக்காக நியமிக்கப்பட்டுள்ள பெண் அலுவலர்களைத்தான் மிகவும் பாதிக்கிறது. சில இடங்களில் இவர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது.

மேலும் சுகாதார உதவியாளர்கள், தாய்கள் போன்றோர் வாகன வசதிகளைப் பெறுவதற்கு மிக இன்னல் அடைகின்றனர்; அதிலும் முக்கியமாக பிரசவங்களை கவனித்த பிறகு மீண்டும் தலைமையிடங்களுக்குத் திரும்புகையில் வாகன வசதி கிடைப்பதில்லை. பெண் அலுவலர்கள் கொலை செய்யப்பட்ட விஷயங்கூட தெரியவந்துள்ளது.

கிராமங்களில் நற்பணி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் நியமிக்கப்பட்டுள்ள பெண் டாக்டர்கள், நர்ஸுகள், சுகாதார உதவியாளர்கள், தாய்கள் போன்றோருக்குப் போதிய பாதுகாப்பு அளித்தல், தங்க வசதிகள் செய்தல், போக்கு

வரத்து ஆகியவற்றில் வசதி செய்தல் அரசாங்கம், மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பொறுப்பாகிறது.

தங்கள் வரம்பிலுள்ள கிராமவாசிகளை இப் பெண் பணியாளர்களுக்குப் போதிய, பாதுகாப்பும் தகுந்த இடவசதியும் செய்து தருவது, அவர்களின் கடமை என்பதை பஞ்சாயத்துக்கள் உணரச்செய்வதில் தான், நன்மை விளையும். பிரசவங்கள் மற்றும் அதையொத்தக் காரியங்களை கவனித்துவிட்டு, மீண்டும் தலைமையிடத்திற்கு இப்பெண் அலுவலர்கள் திரும்புகையில், வாகன வசதிகள் அளிப்பதும் கிராம வாசிகள் கடமை என்பதை உணரச் செய்தல் வேண்டும்.

சமூகப் பணிக்காக ஏராளமான நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றை அணுகி, "கிராமவாசிகளுக்கு வைத்திய உதவி செய்யவே இப் பெண் அலுவலர்கள் பணி புரிகிறார்கள் என்றும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் தங்களின் பொறுப்பே" என்பதை கிராமவாசிகளுக்கு எடுத்துக் கூறும்படியும் செய்யவேண்டும்.

(கிராம-நல தல நிர்வாகத் துறையின் 17—3—1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 39705-ன் சுருக்கம்.)

---

## பூதானப் பகுதிகளில் உள்ள, கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருளாதார உதவி.

## Bhoodan and Gramdan—Bhoodan areas—Financial Assistance to Co-operative Societies —1964—65—Sanctioned.

### (G.O. Ms. No. 601, R. D and L.A., dated 12th March 1965.)

நிலமற்றவர்களுக்கு வகை செய்வதற்காக, பூதானப்பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்க, ஒரு குறிப்பிட்டத் தொகையை, இந்திய அரசாங்கம், திட்டகமிஷனுடன் கலந்தாலோசித்து ஒதுக்கியுள்ளது. நிலங்களை பயிர் செய்ய தகுதியாக்கவும், திருத்தியமைக்கவும், இத்திட்டத்தின்கீழ், பூதானப்பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகள் கிடைக்கும். இக்குறிக்கோளின் விவரங்கள், இவ் வாணையின் இரண்டாவது இணைப்பில், கொடுக்கப் பட்டுள்ளன.

2. பூதானநிலங்கள் ஒருங்கே அமைந்துள்ள இடங்களுக்கும், அந்நிலங்களிலிருந்து பயன் பெறுபவர்களுக்காக, தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்துள்ள இடங்களுக்கும், பொருளாதார உதவி கிடைக்கும். இவ்வுதவிகள், மாவட்ட கூட்டுறவுச்சங்கங்கள் மூலம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடைக்கும். இவ்வாறு அளிக்கப்பட்ட நிதி உதவிகளை திரும்பிப்பெறவும், உதவிகள் தகுந்த முறையில் பயன்படுத்தப்படுவதைக் காணவும், சென்னை கூட்டுறவு பதிவாளர் பொறுப்புடையவர் ஆவார்.

3. கிராமங்களிலுள்ள 6 நிலப்பகுதிகளுக்கு இந்திய அரசாங்கம் நிதி உதவி அளிக்க இசைந்திருக்கிறது. அக்கிராமங்கள், இவ்வாணையின் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாணையின் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ள கிராமங்களிலுள்ள 6 கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1964—65ம் ஆண்டிற்கு மத்திய அரசாங்க உதவி தொகையாக ரூ. 33,170 (ரூபாய் முப்பத்தி மூன்று ஆயிரத்து நூற்று எழுபது மட்டும்) தருவதற்கு மத்திய அரசாங்கம் இசைந்துள்ளது.

4. மேலும் இவ்வாணையின் இணைப்பு I—ல் கூறப்பட்டிருக்கும், கிராமதான கிராமங்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு' 1964—65 ஆண்டின், மத்திய அரசாங்க உதவியாக ரூ. 1,32,680—ஐ (ரூபாய் ஒரு லட்சத்து, முப்பத்து இரண்டாயிரத்து, அறுநூற்று எண்பது மட்டும்) கடனுகத்தரவும், இந்திய அரசாங்கம் இசைந்துள்ளது. (இவ்விரு உதவி தொகைகளும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.)

5. வட்டி விகிதமும், கடனைத் திருப்பித்தர வேண்டிய காலமும், பின்னர் மாநில அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்படும் என்று இந்திய அரசாங்கம் கூறியுள்ளது.

6. இந்திய அரசாங்கத்தால் வரையறுக்கப் பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கும், உட்பட்டு கடனும், மானியமும் வழங்கப்படும்.

(i) நிலத்தை சாகுபடி செய்ய தகுதியாக்க ஏதேனும் நிதி உதவியளிக்க திட்டம் இருந்தால், அதற்கான ஈட்டு மானியத்தை, மாநில அரசாங்கம், அதனுடைய திட்டத்தின் உச்சத்துக்குள்ளேயே பெற்றுக்கொள்ளவேண்டும்.

(ii) இந்த நிதி உதவியை, சங்கங்களுக்கு பொதுப்படையாக அளிக்கலாகாது. மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை, நிலப்பரப்பு, திட்டத்தின் வகை, அதாவது, நிலத்தை சீர்படுத்துதல், நிலத்தை அபிவிருத்திச் செய்தல், மேற்கொள்ளப் படும் நீர்பாசன திட்டம், ஒவ்வொருவகைத் திட்டத்திற்கும் தேவைப்படும் தொகை ஆகியவற்றை சீர்தூக்கி நிதி அளிக்கவேண்டும்.

(iii) சேவைக்கூட்டுறவுகளுக்கு உதவி அளிப்பதாய் இருந்தால், அக்கூட்டுறவுகள் பூதான நிலங்களுக்கு மட்டுமே ஏற்பட்டதாகவும், மாறுபட்ட சூழலில் இயங்கக் கூடியதாகவும், இது விஷயத்தில் விதிக்கப்பட்டுள்ள அம்சங்களை நிறைவு படுத்தக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

## இணைப்பு I.

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | நிலையங்கள் அமைந்துள்ள கிராமங்களின் பெயர். | கிராமங்களில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை. | இத்திட்டத்தில் செயல்புரிய வேண்டிய நிலப்பரப்பு. | நிலத்தை பண்படுத்தும் செலவு (Reclamation Charges). | மறுதீர்வுத் தொகைகள் (Resettlement Charges) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | ஏக்கர். | ஏக்கர். | ரூ. | ரூ. |
| 1. | மதுரை | மெய்க்குடி | 30 | 50 | 5,000 | 9,100 |
| 2. | ராமநாதபுரம் | சிவனூர் | 50 | 96 | 9,600 | 22,000 |
| 3. | திருச்சிராப்பள்ளி | மலையாளப்பட்டி | 36 | 100 | 10,000 | 22,000 |
| 4. | செங்கல்பட்டு | வெள்ளப்புதூர் | 42 | 59 | 5,900 | 15,400 |
| 5. | தென் ஆர்க்காடு | ரெங்கநாதபுரம் | 32 | 50 | 5,000 | 21,300 |
| 6. | தென் ஆர்க்காடு | திருச்சிற்றம்பலம் | 44 | 97 | 14,550 | 26,000 |
| | | மொத்தம் .. | 234 | 452 | 50,050 | 1,15,800 |

பண்படுத்தும் செலவு ,, ரூ 50,050
மறுதீர்வுத்தொகை ,, ரூ 1,15,800

மொத்தம் ,, ரூ 1,65,850

## இணைப்பு II.

இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளபடி உதவி கிடைப்பதற்கான விவரங்கள்:

(அ) உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்ற, குறுகிய இடைக்கால கடன்கள்.

(ஆ) நிலமற்றவர்களுக்கு வகைசெய்யவும், கூட்டுறவுத் திட்டம் போன்றவற்றில், கடனும் உதவித் தொகையும் கீழ்க்கண்டவற்றில் அளிக்கப்படும்.

(i) நிலத்தை பயிர்செய்யத் தகுதியாக்குதல்,

(ii) நிலத்தை சரிக்கட்டுதல், கரைக்கட்டுதல், வேலி அமைத்தல், கிணறுகள் வெட்டுதல் நீர்ப்பாசனங்களை அபிவிருத்திச் செய்தல் முதற்கொண்டு, நில அபிவிருத்தி வேலைகள்.

(iii) விவசாய உற்பத்திக்கு அவசியமான எருதுகள், வண்டிகள், விவசாயக் கருவிகள், விதைகள் உரங்கள் போன்றவற்றை வாங்குதல்.

(iv) கால்நடைக் கொட்டில்கள், கிடங்குகள் கட்டுதல்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 12—3—1965 தேதியிட்ட அரசாங்க ஆணை 601-ன் சுருக்கம்.)

---

## ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காக, சாலைகள் அமைத்தல்—அரசாங்க மானியமும், ஹரிஜன நலத் துறையின் நிதி உதவியும் பற்றி விளக்கங்கள்.

## Works—Village Works Programme—Roads formed for the benefit of Harijans and backward classes—Payment of 90 per cent Government grant for metalling roads and sanction of contributions from Harijan Welfare funds—Permitted.

**(Memorandum No. 185304,/P4, R.D. and L.A., dated 24th February 1965.)**

கிராம வேலைகள் திட்டத்தின் கீழ், இப்போதுள்ள சாலைகளுக்கு சரளைகள் போடுவதற்காக இரண்டாவது மானியத்தை அளிப்பதைப் பொறுத்து, கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 68234-ல் அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. புதிதாக ஏற்படக் கூடிய வேலைகளைப்போலவே, ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காக உள்ள இப்போதுள்ள சாலைகளுக்கு சரளைகள் போட கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் 90 சத வீத அரசாங்க மானியம் அளிக்கலாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, 1963-ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் தேதி கூடிய, கிழக்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

(2) அரசாங்கம் இந்த வேண்டுகோளை பரிசீலனை செய்தது. ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினர்கள் ஆகியோரின் நலனுக்காக, புதிதாக கிராம சாலைகள் அமைத்தல், மதகுகள் கட்டுதல் ஆகியவற்றிற்கு கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் 90 சதவீத அரசாங்க மானியத்தைப் பெறத் தகுதியிருப்பதாலும், கிராம வேலைகள் மானியத்தின்கீழ் இந்தத் தொகையை சரளைகள் போட பயன்படுத்திக் கொள்ள, அரசாங்கம் அனுமதித்துள்ளதாலும், ஹரிஜனங்கள் பின்தங்கிய வகுப்பினர்கள் ஆகியோரின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள சாலைகளுக்கு சரளைகள் போட, அதே விகித மானியம் அளிக்கப்படவேண்டுமென்று, அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன்படி, ஹரிஜனங்கள் பின்தங்கிய வகுப்பினர்கள் ஆகியோரின் நலனுக்காக அமைக்கப்படும் சாலைகளுக்கு, கிராம வேலைகள் திட்டத்தின்கீழ், 90 சத வீத அரசாங்க மானியத்துடனும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1414-ல் பத்தி 5-ல் கண்டுள்ள உத்தரவுகளுக்கு ஒப்ப, இந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிதித் தொகைக்கு உட்பட்டு, 10 சத வீத ஹரிஜன நல நிதி உதவியுடனும், சரளைகள் போடும் வேலைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

3. மீனவர்கள் சமூக நலனுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளுக்காகவும், மேற்கண்ட பத்தி 2-ல் கண்டுள்ள உத்தரவுகள் பொருந்தும். இவர்கள் விஷயத்தில் இந்த 10 சத வீத உதவி, மீனளத்துறை நிதிகளில் இருந்து பெறப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 185304.)

---

## கோழி வளர்ப்பவர்கள் சாதனங்கள் வாங்கும் நடைமுறையில் மாறுதல்கள்.

## Community Development—Animal Husbandry—Grant of subsidy to private breeders of poultry—Purchase of equipments—Revised procedure—Instructions—Issued.

### (Memorandum No. 103832,/P-2, R.D. and L.A., dated 9th March 1965.)

தற்போது நிலவிவரும் முறைப்படி, வட்டாரங்களில் கோழிப் பண்ணைகளை நடத்த தேவையான சாதனங்களை வாங்க வேண்டுமெனில், சென்னை கால்நடை பராமரிப்பு இயக்குநரின் ஒப்புதல் பெற்ற, வணிக நிலையங்களிலிருந்துதான் பெற முடியும். இத்தகைய வணிக நிலையங்களில் சில, கிராமங்களிலிருந்து வெகு தொலைவில் இருக்கின்றன; அனேக சந்தர்ப்பங்களில் அச்சாதனங்களின் விலைகள், அவற்றையொத்த அதே பொருட்கள், வேறு இடங்களில் விற்கப்படுவதைவிட, அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. ஆகவே உள்ளூரிலேயே கிடைக்கும் சாதனங்களை, பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட கால்நடை பராமரிப்பு அதிகாரிகள் அல்லது உள்ளூர் கோழிப் பண்ணை வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோரின் ஒப்புதல் பெற்று, வாங்க அனுமதித்தால், கோழி வளர்ப்புத் திட்டம் தங்கு தடையின்றி செயல்படும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை கால்நடை பராமரிப்பு இயக்குநரும் இக் கருத்திற்கு சம்மதம் தெரிவித்து, தேவையான அறிக்கைகளை வெளியிடுமாறு கோரியுள்ளார்.

(2) மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதற்கேற்ப பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், மாவட்ட கால்நடை பராமரிப்பு அதிகாரிகள்/கோழிப்பண்ணை வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோரின் ஒப்புதல் பெற்று, உள்ளூரிலேயே கோழி வளர்ப்புச் சாதனங்களை வாங்கிக் கொள்ளவும் அனுமதித்து, அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது. மேற்கண்ட உத்தரவு, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460க்கு திருத்தமாகும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 9—3—1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 103832.)

---

தனிப்பட்ட முறையில் கோழி வளர்ப்பவர்களுக்கு உதவித் தொகை அளித்தல், கருவிகள் வாங்குதல் ஆகியவற்றின் நடைமுறைகளில் மாறுதல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**Community Development—Animal Husbandry—Grant of subsidy to private breeders of Poultry—Purchase of equipments—Mode of payment—Revision not accepted–Instructions issued.**

**(Memorandum No. 103832/ P2, R.D. and L.A., dated 9th March 1965.)**

வட்டார உதவித் தொகை திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்பவர்கள், கோழி வளர்ப்புக் கருவிகளைப் பெற ரூ. 100-ஐ கருவூலத்தில் செலுத்தி கோழி வளர்ப்புச் சாதனங்களைப் பெறுவதைவிட, அவர்களே அவற்றை வாங்கிக்கொண்டு பின்னர் அதற்குரிய உதவித் தொகையைக் கோரலாம் என்று மதுரை (வடக்கு) மாவட்ட அபிவிருத்தி மன்றம் கருத்து தெரிவித்தது. இக்கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்கு கோயம்புத்தூர் அபிவிருத்தி மாவட்டத்தின், மாவட்ட அபிவிருத்தி மன்றம், இந்த சிபாரிசை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

2. கையால் இயங்கும் ஸ்பிரேயர்கள் (Hand operated sprayers டஸ்டர்கள் Dusters வழங்கும் திட்டத்தின் கீழ், ரயத்துக்களுக்கு வேண்டிய கருவிகளை, அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து, அவர்களே தெரிந்தெடுத்துக்கொண்டு, அதற்குண்டான தொகையிலிருந்து உதவித் தொகையைக் கழித்து, எஞ்சியுள்ள தொகையை, பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்கு செலுத்த வேண்டும். அடுத்து, பஞ்சாயத்து யூனியன் மன்றம் சம்பந்தப்பட்ட கம்பெனிக்குப் பொருள்களை அளிக்குமாறு தெரிவிக்கும். பொருள்கள் வந்தடைந்தவுடன் விற்பனை வரி ஏதேனும் இருப்பின் அதை வசூலித்த பின், பஞ்சாயத்து யூனியன் மன்றம் அப்பொருள்களை ரயத்துக்களுக்குக் கொடுக்கும், இந்த நடைமுறை திருப்திகரமாகவே செயல்படுகிறது.

3. கோழி வளர்ப்புக் கருவிகளை உதவித் தொகை விலையில் ரயத்துக்களுக்கு வழங்குவதற்கு முன்பாகவே, ரயத்துக்களின் பங்கை வசூலிக்கும் முறையை மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 103832)

---

ஆசிரியைகள் குடியிருப்புக்களில் மின்சார வசதி.

**Education—Elementary Education—Quarters for women teachers—Electrification of—Orders passed.**

**(G.O. Ms. No. 335, E. & P.H. (Education), dated 16th March 1965.)**

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆசிரியைகளுக்குக் குடியிருப்புக்கள் கட்டுவதற்கான செலவின் உச்சவரம்பை ஒவ்வொரு காலாண்டுக்கு ரூ. 3,300-லிருந்து ரூ. 5,500-க்கு உயர்த்தி, கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (கல்வி) 1012-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாறு அதிகரிக்கப்பட்ட உச்சவரம்பு, மேற்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்ட காலத்தில் எடுத்துக் கொள்ளப்படாத குடியிருப்புகளுக்கே பொருந்தும்.

2. மேற்கண்ட ஆணை வெளியிடப்பட்டதற்கு முன்பு எடுத்துக்கொள்ளப்பட்ட குடியிருப்புக்களுக்கும், அதே ஆணை பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்பு எடுத்துக்கொள்ளப்பட்ட குடியிருப்புக்களுக்கும், மின்சார வசதி செய்வதற்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ. 300 உயர்த்தலாம் என்று தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை. கிராம வேலைகள்) இப்போது கோரியுள்ளார், அரசாங்கம் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அதற்கேற்றவாறு உச்சவரம்பு திருத்தப்படுகிறது என்று ஆணை பிறப்பிக்கிறது. நான்காவது திட்டத்தில் மேற்கொள்ளப்படும் குடியிருப்புகளுக்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ, 5,800-ஐ உச்ச வரம்பாகத் திருத்தி அரசாங்கம் மேலும் ஆணை பிறப்பிக்கிறது.

[கல்வி பொதுச் சுகாதாரத் துறையின் 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (கல்வி) 335.]

---

பஞ்சாயத்துக்களின் சாதாரணத் தேர்தல்கள்—தேர்தல் அலுவல்களுக்காக நியமிக்கப்பட்டவர் களுக்கு பயணப் படியும், போக்குவரத்து செலவும்.

## Elections—Ordinary—Panchayats—Grant of Travelling allowances and conveyance charges to persons deputed for election duties—Revised instructions—Issued.

### (Memorandum No. 30968 /Pt. Elec.,/R.D. and L.A., dated 22nd March 1965.)

மாநில அரசாங்கம், நகராண்மைக் கழகம், பஞ்சாயத்துக்கள் மற்றும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஆகியவற்றின் ஊழியர் அல்லாதவர்கள், பஞ்சாயத்துத் தேர்தல்களுக்காக நியமிக்கப்பட்டிருப்பின், அவர்களின் பயணப்படி, போக்குவரத்து செலவு பட்டியல்கள் ஆகியவை, அவர்கள் வேலைப் பார்க்கும் பகுதியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களால் தயாரிக்கப்பட்டு உரிய தொகை அளிக்கப்படவேண்டுமேயன்றி, ரிட்டர்னிங் ஆபீஸர்களால் அல்ல என்று, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2483-ல் 3-வது பத்தியில் உள்ள ஆணைக்கு, பகுதி-திருத்தமாக அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இப்பட்டியல் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் ரிட்டர்னிங் ஆபீசர்களால் எதிர்-ஒப்பம் (Counter-signature) செய்யப்படவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965 ஆண்டு மார்ச்சு மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 30968.)

—o—

டி. கல்லுப்பட்டியிலுள்ள கிராமத் தொழில்கள் மாதிரி நிலையம் மூடப்படுகிறது.

## Community Development—Model Centre for Village Industries at T. Kallupatti—Winding up of—Orders issued.

### (G.O. Ms. No. 715, R. D. and L. A., dated 24th March 1965.)

கிராம சேவக்குகளுக்கு எண்ணெய், காகிதம், சோப்பு தயாரித்தல், தேனீ வளர்த்தல் போன்ற கிராமத் தொழில்களில் தேவையான பயிற்சி அளிக்க 1951-ம் ஆண்டு டி. கல்லுப்பட்டியில் கிராமத் தொழில்கள் மாதிரி நிலையம் நிறுவப்பட்டது.

2. கிராம சேவக்குகளை விவசாய வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையின் காரணமாக, டி. கல்லுப்பட்டியில் நிறுவப்பட்டிருக்கும் கிராமத் தொழில்கள் மாதிரி நிலையத்தில் கிராம சேவக்குகள் பெறும் பயிற்சி அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது; ஆகவே, அரசாங்கம் பின்கண்ட ஆணைகளை பிறப்பிக்கிறது.

[அ] மேற்கூறிய மாதிரி நிலையத்தில் அளிக்கப்படும் கிராமத் தொழில்கள் பயிற்சி நிறுத்தப்பட வேண்டும். டி. கல்லுப்பட்டியில் இருக்கும் கிராமத் தொழில்கள் மாதிரி நிலையம் மூடப்படவேண்டும்.

[ஆ] காகிதப் பிரிவு, டி. கல்லுப்பட்டி வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு மாற்றப்பட்டு, அது அந்த வட்டார தொழில் வளர்ச்சி அதிகாரியின் மேற்பார்வையில் இருக்கவேண்டும்.

[இ] எண்ணெய்ப் பிரிவு, தச்சு, கருமார் பிரிவு, தேனீ வளர்க்கும் பிரிவு ஆகியவை, டி. கல்லுப்பட்டி கிராமீய விஸ்தரிப்புப் பயிற்சி நிலைய முதல்வருக்கு மாற்றப்படவேண்டும்.

[ஈ] மட்பாண்டப் பிரிவு மூடப்படவேண்டும்; அதற்கான சாதனங்கள் கிராமத் தொழில் அதிகாரியின் ஆலோசனையின்பேரில், மற்ற மாதிரி நிலையத்தில் பயன்படுத்துவதற்காக, வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு, மாற்றப்பட வேண்டும். இதன் அலுவலர்கள், மற்ற நிலையத்துடன் முறையாக சேர்க்கப்படும் வரை அவர்களை வட்டார வளர்ச்சி அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

3. கிராமத் தொழில்கள் மாதிரி நிலையத்திலுள்ள அலுவலர்களைப்பொருத்து, உத்தரவுகள் தனியாகப் பிறப்பிக்கப்படும். கௌரவ முதல்வரின் பதவி எடுக்கப்படும் இங்குள்ள அலுவலர்களை, மற்ற துறைகளில் எடுத்துக்கொள்ளப்படுவதைப் பொருத்து முடிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை, அவர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரி அல்லது கிராமீய விஸ்தரிப்புப் பயிற்சி நிலைய முதல்வர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965 ஆண்டு மார்ச்சு மாதம் 24 தேதியிட்ட அரசாங்க ஆணை 715-ன் சுருக்கம்.)

## தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டுக்கு புதிய அங்கத்தினர்கள் நியமனம்.

## Madras State Khadi and Village Industries Board—Resignation of official member—Accepted—Appointment of new members—Orders—Issued.

### (G.O. Ms. No. 444, R.D. & L.A., dated 23rd February 1965.)

"கதர், கிராமத் தொழில்கள்" சம்பந்தப்பட்ட அலுவல்கள், உணவு விவசாயத் துறையிலிருந்து கிராம நல-தல நிர்வாகத் துறைக்கு மாற்றப்பட்டிருப்பதையொட்டி, தமிழ்நாடு அரசாங்க உணவு-விவசாயத் துறை காரியதரிசி, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் போர்டில், அவர் வகித்து வந்த அங்கத்தினர் பதவியை இராஜினமா செய்துள்ளார். அரசாங்கம் அவருடைய இராஜினமாவை ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறு ஏற்பட்ட காலியிடத்தை பூர்த்தி செய்ய, தமிழ்நாடு அரசாங்க, கிராம நல-தல நிர்வாகத் துறையின் அரசாங்க கூட்டுக் காரியதரிசியை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் போர்டில் ஒரு அங்கத்தினராக, அரசாங்கம் நியமிக்கிறது.

(2) 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி முதல் அரசாங்கத்தின் நிதித் துறையிலுள்ள கூட்டுக் காரியதரிசி பதவி எடுக்கப்பட்டுவிட்டதால், தமிழ்நாடு அரசாங்க நிதித் துறையின் அரசாங்க காரியதரிசியை மேற்கண்ட போர்டில், ஒரு அங்கத்தினராக அரசாங்கம் நியமிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 444-ன் சுருக்கம்.)

——0——

## பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களில் கிராம நல-தல நிர்வாகத் துறை காரியதரிசி அங்கத்தினராக நியமனம்.

## Panchayat Development Committee—Committees—Panchayat Development Consultative Committees—Inclusion of the Secretary to Government, Rural Development and Local Administration Department as a member in all the three Panchayat Development Consultative Committees—Orders—Issued.

### (G.O. Ms. No. 354, R.D. and L.A., dated 17th February 1965.)

கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 797-ல் ஏற்படுத்தப்பட்ட மூன்று பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களிலும், தமிழ்நாடு அரசாங்க கிராம நல-தல நிர்வாகத் துறையின் காரியதரிசியை ஒரு அங்கத்தினராக நியமித்து, அரசாங்கம் ஆணைப்பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 354.)

——o——

## மகப்பேறு நிலைய உதவியாளர்கள், ஆயாக்களுக்கு சீருடை

## Maternity and Child Health Services—Maternity and Child Welfare Centres—Establishment—Maternity Assistants and Ayahs—Supply of uniforms—Further instructions—Issued.

### (G. O. Ms. No. 636 R. D. & L. A., dated 16th March 1965)

தங்கள் எல்லைக்குட்பட்ட தாய், சேய் நல நிலையங்களில் பணியாற்றும் மகப்பேறு உதவியாளர்கள் "Maternity Assistants" களுக்கு ஆண்டு ஒன்றுக்கு, மூன்று ஜோடி சீருடைகளை அளிப்பது பற்றி, பஞ்சாயத்து யூனியன்கள் பரிசீலிக்கலாம் எனவும், அதற்கான செலவை பொது நிதியிலிருந்து ஈடு செய்யவேண்டும், எனவும் சீருடைகளுக்குப் பதிலாக, பணத்தொகை அளிக்கலாகாது எனவும், கிராம நல தல நிர்வாகத் துறையின் 2—1—1964 தேதியிட்ட அரசாங்க ஆணை 1-ல் அரசாங்கம் ஆணைப் பிறப்பித்துள்ளது.

(2) மகப்பேறு நிலைய உதவியாளர்களுக்கு சீருடைகள் வழங்க, பஞ்சாயத்து யூனியன் செலவிடக் கூடிய செலவின் எல்லையைப் பற்றியும் அளிக்கப்படவேண்டிய சீருடையின் வகையைப்பற்றியும் தெரிவிக்கும்படி, மாயூரம் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(3) இப் பிரச்னையை அரசாங்கம், சென்னை பொதுச் சுகாதார இயக்குநருடன் கலந்தாலோசித்தது. அதன்படி, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களினால், நடத்தப்பட்டுவரும் தாய் சேய் நல நிலையங்களில் பணியாற்றி வரும் மகப்பேறு நிலைய உதவியாளர்களுக்கும் ஆயாக்களுக்கும், ஆண்டு ஒன்றுக்கு, முறையே ரூ. 100 (ரூபாய் ஒரு நூறு மட்டும்) ரூ. 75 (ரூபாய் எழுபத்து ஐந்து மட்டும்) க்கு மிகாமல் செலவிட்டு, கீழ்க்கண்டவாறு சீருடைகள் வழங்கவேண்டும் என்று அரசாங்கம் ஆணைப்பிறப்பிக்கிறது.—

| | |
|---|---|
| மகப்பேறு உதவியாளர்கள் : | சிகப்பு கரையிட்ட மூன்று வெள்ளை புடவைகள் மூன்று வெள்ளை ரவிக்கைகள் மற்றும் மூன்று ஜோடி காலணிகள். |
| ஆயாக்கள்; | கரையில்லாத மூன்று வெள்ளைப் புடவைகள் மூன்று வெள்ளை ரவிக்கைகள் மற்றும் இரண்டு ஜோடி காலணிகள். |

(4) மகப்பேறு நிலைய உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் பொருள்களுக்கும், ஆயாக்களுக்கு அளிக்கப்படும் பொருள்களுக்கும், தரத்தில் வித்தியாசம் இருத்தல் வேண்டும் இதற்கான செலவை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் பொது நிதியிலிருந்து செலவிடவேண்டும் என்றும் சீருடைகளுக்குப் பதிலாக பணத் தொகை அளிக்கலாகாது என்றும் அரசாங்கம் மேலும் வலியுறுத்துகிறது.

கிராம நல தல நிர்வாகத்துறையின் 16—3—1965 தேதியிட்ட அரசாங்க ஆணை 636.

---

மகளிர் நல அமைப்பாளர், கிராம சேவிகை பதவிகள் ஒன்றுக்கப்படுகின்றன.

## Establishment—Women's Welfare Department—Women's Welfare Organisers incharge of Women's Welfare branches and Gramasevikas working in Panchayat Unions—Encadrement of—Proposal—Approved.

### (G. O. Ms. No. 492, R.D. and L.A. dated 1st March 1965.)

தற்போது மாநிலம் பூராவும் மகளிர் நலத் துறையின்கீழ், 47 மகளிர் நலக் கிளைகள் இருக்கின்றன. மகளிர் மற்றும் குழந்தைகளுக்காக நற்காரியங்கள் செய்யும் பற்பல பிரிவுகளும், மகளிர் நலத் துறை சீர் செய்யப்பட்டதையொட்டி, இத்துறையோடு சேர்க்கப்பட்டன. முன்பு உதவி அபிவிருத்திக் கமிஷனரின் (பயிற்சி) கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய சேவிகைகள், கிராம சேவிகைகள் போன்ற பொது அலுவலர்களும், மகளிர் நலத் துறை இயக்குநரின் ஒன்றுக்கப்பட்ட நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் கொண்டுவரப்பட்டனர். கிராம சேவிகைகள், மகளிர் நல அமைப்பாளர்கள் (Women's Welfare Organisers) ஆகியோரின் வேலைத் தன்மையும், அவர்களின் சம்பள (ரூபாய் 90–4–110–3–140) அமைப்பும் ஒன்றுகவே இருக்கும் போது, கிராம சேவிகைகள், குறிப்பிட்ட கால வரம்பு பயிற்சியை பெற்றபின்பே வேலைகளில் நியமிக்கப்பட்டும், மகளிர் நல அமைப்பாளர்கள், முதலில் வேலையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பின்பு குடும்ப இயல் பிரிவில், கிராம சேவிகைகளின் பயிற்சிக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

(2) மகளிர் நலத் துறையிலுள்ள, மகளிர் நல அமைப்பாளர்கள், மகளிர் நல கிளைகளுக்கு பொறுப்புள்ள நிலையான அரசாங்க அலுவலர்களாக இருந்து, பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள கிராம சேவிகைகள் செய்யும் வேலைகளைப் போலவே, இவர்களும் பணிபுரிகின்றனர். ஆகவே, மகளிர் நல அமைப்பாளர்களும், கிராம சேவிகைகளும் பிணைக்கப்பட்டு, ஒரே இனமாக ஆக்கப்படவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. மகளிர் நலத் துறை இயக்குநரோடு ஆலோசித்ததில், அவர் மகளிர் நல அமைப்பாளர்கள், கிராம சேவிகைகளோடு ஒன்றுக்கப்பட்டுவிடலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். அரசாங்கம் இந்த முழு பிரச்னையையும் பரிசீலனை செய்து, பின்கண்டவாறு ஆணைப் பிறப்பிக்கிறது :—

மகளிர் நல அமைப்பாளர்கள், கிராம சேவிகைகள் இனத்துடன் ஒன்றுக்கப்பட்டு, கிராம சேவிகைகள் செய்வது போலவே, மகளிர் நல அமைப்பாளர்களும், நேரிடை அனுபவம்பெற, கிராமங்களில் ஓராண்டு வேலை செய்ய மாற்றப்படவேண்டும். அதற்கேற்றபடி, மகளிர் நல கிளைகளுக்கு, பொறுப்பிலுள்ள, மகளிர் நல அமைப்பாளர்கள், கிராம சேவிகைகள் இனத்துடன் ஒன்றுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 492.)

## வளர்ச்சி அதிகாரிகள், கிராம சேவக்குகளின் இரகசிய அறிக்கைகளைப் பற்றிய உத்தரவில் மாற்றங்கள்.

## Panchayat Development Programme—Extension Officers in Panchayat Unions and Grama sevaks—Personal files—Writing up, scrutiny and maintenance of—Instructions issued in G. O. Ms. No. 632, R.D. and L.A., dated 20th March 1963—Amendment—Issued.

### (Memorandum No. 227473/E4/R.D. & L.A., dated 20th February 1965.)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 632-ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகள் பலவற்றில், விவசாய வளர்ச்சி அதிகாரிகளின் இரகசிய அறிக்கைகளை (Confidential reports) துணை விவசாய இயக்குநர்கள் (Deputy Director of Agriculture) வைத்திருக்க வேண்டும் என்ற உத்தரவும் ஒன்றாகும். விவசாய வளர்ச்சி அதிகாரிகள் மற்றும் உயர்தர பணியாளர்களின் (Upper subordinates) இரகசிய அறிக்கைகளை வைத்திருப்பதில் உள்ள சில இன்னல்களைப் பற்றி, துணை விவசாய இயக்குநர்கள், முறையிட்டுள்ளதாக சென்னை விவசாய இயக்குநர் கூறியுள்ளார். ஆகவே மேலே கூறப்பட்டுள்ள ஆணையில் உள்ள உத்தரவுகளை திருத்தி, விவசாய வளர்ச்சி அதிகாரிகளின் இரகசிய அறிக்கைகளுக்கு, மாவட்ட விவசாய அதிகாரிகளை பாதுகாப்பாளராக ஆக்கலாம் என்று சென்னை விவசாய இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். அரசாங்கம், விவசாய இயக்குநரின் கருத்தை ஏற்றுக்கொள்கிறது. அதற்குத்தக, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 632-ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளுக்கு (பிறகு திருத்தப்பட்டபடி) கீழ்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.—

திருத்தம்

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 632-ன் இணைப்பில் உள்ள 5-வது பத்திக்கு பதிலாக, பின்வரும் பத்தி சேர்க்கப்படும். அதாவது :—

5. விவசாய வளர்ச்சி அதிகாரி

வட்டார வளர்ச்சி அதிகாரிகள்—பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், அரையாண்டு அறிக்கையைத் துவக்கிய பின், அதை வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அனுப்புவார். வருவாய்க் கோட்ட அதிகாரி, தன்னுடைய குறிப்புகளுடன், அந்த அறிக்கையை மாவட்ட விவசாய அதிகாரிக்கு அனுப்பி வைப்பார்; அவர் தன்னுடைய குறிப்புகளைச் சேர்த்த பின், அதை பரிசீலனைக்காகவும், எதிர் ஒப்பத்துக்காகவும், துணை விவசாய இயக்குநருக்கு அனுப்புவார். மாவட்ட விவசாய அதிகாரி, இரகசிய அறிக்கைகளை, பாதுகாத்து நிர்வகிக்கும் அதிகாரியாவார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 227473.)

---

## பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் பதவி காலியாயிருக்கையில் வளர்ச்சி அதிகாரிகள் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து விளக்கம்.

## Establishment—Post of Block Development Officer-cum-Panchayat Union Commissioner—Extension Officer posted to attend to current duties—Drawal of bills and cheques and operation on the Village Panchayat Consolidated Fund—Clarification—Issued.

### (Memorandum No. 176534 (R D. Accounts-6), R.D. & L. A., dated 23rd February 1965.)

வட்டார வளர்ச்சி அதிகாரி—பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் பதவி காலியாயிருக்கையில், நடைமுறை வேலைகளைக் கவனிக்க, முதுநிலை (Senior-most) வளர்ச்சி அதிகாரியை, கூடுதலான பொறுப்பில் வைக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 254595-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நடைமுறை வேலைகளை கவனிக்க ஏற்படுத்தப்பட்ட அதிகாரி, பட்டியல்களை (Bills) தயாரிக்கவும், உண்டியல்களை (Cheques) வழங்கவும், மற்றும் கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு நிதியை இயக்கவும் கூடுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

(2) பட்டியல்களை தயாரித்தல், உண்டியல்களை வழங்குதல், கிராமப் பஞ்சாயத்துத் தொகுப்பு நிதியை இயக்குதல் போன்றவை, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரின் பொதுவான காரியங்களாகும். ஆணையாளரின் நடைமுறை வேலைகளைக் கவனிக்க ஏற்படுத்தப்பட்ட அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரின் மேற்கண்ட பொதுவான காரியங்களையும் செய்வார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 176534.)

# சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரலாறு

சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்ற வீரர்கள் வரலாற்றைத் தொகுக்கும் வேலை இப்போது நடைபெற்று வருகிறது. சுதந்திரப் போரில் பங்கு பெற்றவர்களில் இதுவரை சுமார் 3,000 பேர்கள் பற்றி தகவல் கிடைத்துள்ளது. சுதந்திரப் போரில் தீவிரப் பங்கு கொண்டவர்களில் பலர் இன்று நம்மிடையே இல்லாதிருக்கலாம். அத்தகையவர்கள் பற்றி, அவர்களது குடும்பத்தினர், கீழே குறிப்பிட்டபடி தகவல்கள் கொடுத்தால், வரலாற்றுத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம். விடுதலை இயக்கம் சம்பந்தமான சத்தியாக்கிரகங்களில் அல்லது போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள் வெள்ளைத் தாளில் அல்லது அச்சிடப்பட்ட பாரத்தில் விவரங்கள் எழுதி அனுப்பலாம். (அச்சிடப்பட்ட பாரங்களை, 'கன்வீனர், சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரலாறு தொகுப்பு மாநில கமிட்டி, 1/18, மவுண்ட் ரோடு, சென்னை-2' என்ற முகவரியில் கேட்டுப் பெறலாம்.) முழு கையெழுத்துடன், கீழ்க்கண்ட தகவல்களை மேற்படி கமிட்டிக்கு அனுப்புமாறு கோரப்படுகிறது:—

1. பெயர், முகவரி
2. பிறந்த தேதி அல்லது வயது
3. கல்வி சம்பந்தமான தகவல்கள்
4. சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் கலந்து கொண்ட வருஷம்
5. கலந்து கொண்ட போராட்டங்கள், இயக்கங்கள் பற்றிய விவரம்
6. சிறை வாசம் பற்றிய விவரம் (எத்தனை தடவை சிறை வாசம், எந்த ஆண்டு, எந்த சிறை, தண்டனைக் காலம்)
7. சிறை சகாக்கள் ஒன்றிரண்டு பேரைக் குறிப்பிடலாம். சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களா என்பது தான் முக்கியம். அவர்களுடைய தற்போதைய அரசியல் சார்பு என்ன என்பது முக்கியமல்ல.

# முக்கிய அறிவிப்பு

## "கிராம நலம்" சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களையுடைய "கிராம நலம்" சந்தாதாரர்களின் ஆண்டுச் சந்தா, 1965 ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகிறது. "கிராம நலம்" இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களையுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு பிரதி ஒன்றுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 1–50 வீதம், சந்தாத் தொகையை "மானேஜர், கிராம நலம், கிராம நல தல நிர்வாகத்துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு உடனே மணியார்டர் மூலம் அனுப்பக் கோரப்படுகிறது. சந்தா எண், "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சந்தா எண்கள்

| | | |
|---|---|---|
| 12198 | 23053 to | 23634 to |
| 13685 | 23055 | 23675 |
| 13686 | 23057 to | 24042 |
| 13951 | 23064 | 24204 |
| 14045 | 23073 to | 24260 to |
| 14053 | 23078 | 24266 |
| 14066 | 23091 to | 24279 to |
| 14068 | 23104 | 24286 |
| 14097 | 23137 to | 25621 |
| 22666 to | 23162 | 25733 |
| 22905 | 23164 to | 26352 to |
| 22907 to | 23174 | 26359 |
| 23050 | | |

# எழுத்தாளர்களுக்கு

'கிராம நல'த்தில் வெளியிடுவதற்காக சிறு கதை, தொடர்கதை, கட்டுரை, நாடகம், ஓரங்க நாடகம் ஆகியவை வரவேற்கப்படுகின்றன. எழுதுகின்றவை அனைத்தும், கிராம பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டங்களையும், காந்தியப் பொருளாதார அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

பிரசுரத்திற்கு அனுப்பப்படும் விஷயங்கள் அனைத்தும், "பொதுஜனத் தொடர்பு அதிகாரி-ஆசிரியர், 'கிராம நலம்', கிராம நல—தல நிர்வாகத் துறை, சென்னை அரசாங்கத் தலைமை அலுவலகம் (Secretariat). சென்னை-9," என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

—ஆசிரியர்

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.

# தமிழ் நாட்டில் . . .

| | | |
|---|---|---|
| மாவட்டங்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக) | | 12 |
| மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (District Development Councils) | | 21 |
| ரெவின்யூ கோட்டங்கள் (Revenue Divisions) | | 45 |
| பஞ்சாயத்து யூனியன்கள் | | 374 |
| நகரப் பஞ்சாயத்துக்கள் (Town Panchayats) | (சுமார்) | 400 |
| கிராமப் பஞ்சாயத்துக்கள் (Village Panchayats) | (சுமார்) | 12,300 |
| பஞ்சாயத்து உறுப்பினர் தொகை | (சுமார்) | 1,25,000 (ஒரு லட்சத்து இருபத்து ஐயாயிரம்) |
| வாக்காளர் எண்ணிக்கை | (சுமார்) | 150 லட்சம் |
| பஞ்சாயத்து ஆட்சியில் உள்ள மக்களின் தொகை | (சுமார்) | 3 கோடி |

## மாவட்ட வாரியாக
## பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| 1. | வட ஆர்க்காடு | 36 |
| 2. | தென் ஆர்க்காடு | 34 |
| 3. | செங்கற்பட்டு | 27 |
| 4. | சேலம் | 51 |
| 5. | கோயம்புத்தூர் | 41 |
| 6. | நீலகிரி | 4 |
| 7. | திருச்சிராப்பள்ளி | 39 |
| 8. | தஞ்சாவூர் | 36 |
| 9. | மதுரை | 34 |
| 10. | இராமநாதபுரம் | 32 |
| 11. | திருநெல்வேலி | 31 |
| 12. | கன்னியாகுமரி | 9 |
| | மொத்தம் | 374 |

தமிழ்நாட்டில் மொத்த பஞ்சாயத்து யூனியன்கள் : 374

# விசுவாவசு - 1965-66

| நாட்கள் | சித்திரை - ஏப்ரல் மே | | | | | வைகாசி - மே ஜூன் | | | | | ஆனி - ஜூன் ஜூலை | | | | | ஆடி - ஜூலை ஆகஸ்ட் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ★ | 6 | 13 | 20 | 27 | 31 | 3 | 10 | 17 | 24 | ★ | 6 | 13 | 20 | 27 | 31 | 3 | 10 | $17_{1}$ | 24 |
| திங்கள் | ★ | 7 | 14 | 21 | 28 | $32_{14}$ | 4 | 11 | 18 | 25 | ★ | 7 | 14 | 21 | 28 | $32_{16}$ | 4 | 11 | 18 | 25 |
| செவ்வாய் | $1_{13}$ | 8 | 15 | 22 | 29 | ★ | 5 | 12 | $19_{1}$ | 26 | $1_{15}$ | 8 | 15 | 22 | 29 | ★ | 5 | 12 | 19 | 26 |
| புதன் | 2 | 9 | 16 | 23 | 30 | ★ | 6 | 13 | 20 | 27 | 2 | 9 | 16 | 23 | 30 | ★ | 6 | 13 | 20 | 27 |
| வியாழன் | 3 | 10 | 17 | 24 | $31_{13}$ | ★ | 7 | 14 | 21 | 28 | 3 | 10 | $17_{1}$ | 24 | $31_{15}$ | ★ | 7 | 14 | 21 | 28 |
| வெள்ளி | 4 | 11 | $18_{30}$ | 25 | ★ | $1_{14}$ | 8 | 15 | 22 | 29 | 4 | 11 | 18 | 25 | ★ | $1_{16}$ | 8 | 15 | 22 | 29 |
| சனி | 5 | 12 | $19_{1}$ | 26 | ★ | 2 | 9 | 16 | 23 | 30 | 5 | 12 | 19 | 26 | ★ | 2 | 9 | 16 | 23 | 30 |

| ★ | ஆவணி - ஆகஸ்ட் செப்டம்பர் | | | | | புரட்டாசி - செப்டம்பர் அக்டோபர் | | | | | ஐப்பசி - அக்டோபர் நவம்பர் | | | | | கார்த்திகை - நவம்பர் டிசம்பர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ★ | 6 | 13 | 20 | 27 | ★ | 3 | 10 | 17 | 24 | $1_{17}$ | 8 | 15 | 22 | 29 | ★ | 6 | 13 | 20 | 27 |
| திங்கள் | ★ | 7 | 14 | 21 | 28 | ★ | 4 | 11 | 18 | 25 | 2 | 9 | $16_{1}$ | 23 | $30_{15}$ | ★ | 7 | 14 | 21 | 28 |
| செவ்வாய் | $1_{17}$ | 8 | 15 | 22 | 29 | ★ | 5 | 12 | 19 | 26 | 3 | 10 | 17 | 24 | ★ | $1_{16}$ | 8 | 15 | 22 | 29 |
| புதன் | 2 | 9 | $16_{1}$ | 23 | 30 | ★ | 6 | 13 | 20 | 27 | 4 | 11 | 18 | 25 | ★ | 2 | 9 | $16_{1}$ | 23 | $30_{15}$ |
| வியாழன் | 3 | 10 | 17 | 24 | $31_{16}$ | ★ | 7 | 14 | 21 | 28 | 5 | 12 | 19 | 26 | ★ | 3 | 10 | 17 | 24 | ★ |
| வெள்ளி | 4 | 11 | 18 | 25 | ★ | $1_{17}$ | 8 | $15_{1}$ | 22 | 29 | 6 | 13 | 20 | 27 | ★ | 4 | 11 | 18 | 25 | ★ |
| சனி | 5 | 12 | 19 | 26 | ★ | 2 | 9 | 16 | 23 | $30_{16}$ | 7 | 14 | 21 | 28 | ★ | 5 | 12 | 19 | 26 | ★ |

| ★ | மார்கழி - டிசம்பர் ஜனவரி | | | | | தை - ஜனவரி பிப்ரவரி | | | | | மாசி - பிப்ரவரி மார்ச் | | | | | பங்குனி - மார்ச் ஏப்ரல் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ★ | 4 | 11 | 18 | 25 | ★ | 3 | 10 | 17 | 24 | $30_{13}$ | 2 | 9 | 16 | 23 | ★ | 7 | 14 | 21 | 28 |
| திங்கள் | ★ | 5 | 12 | 19 | 26 | ★ | 4 | 11 | 18 | 25 | ★ | 3 | 10 | 17 | 24 | $1_{14}$ | 8 | 15 | 22 | 29 |
| செவ்வாய் | ★ | 6 | 13 | 20 | 27 | ★ | 5 | 12 | $19_{1}$ | 26 | ★ | 4 | 11 | $18_{1}$ | 25 | 2 | 9 | 16 | 23 | 30 |
| புதன் | ★ | 7 | 14 | 21 | 28 | ★ | 6 | 13 | 20 | 27 | ★ | 5 | 12 | 19 | 26 | 3 | 10 | 17 | 24 | $31_{13}$ |
| வியாழன் | $1_{16}$ | 8 | 15 | 22 | $29_{13}$ | ★ | 7 | 14 | 21 | 28 | ★ | 6 | 13 | 20 | 27 | 4 | 11 | 18 | 25 | ★ |
| வெள்ளி | 2 | 9 | 16 | 23 | ★ | $1_{14}$ | 8 | 15 | 22 | $29_{11}$ | ★ | 7 | 14 | 21 | 28 | 5 | 12 | $19_{1}$ | 26 | ★ |
| சனி | 3 | 10 | $17_{1}$ | 24 | ★ | 2 | 9 | 16 | 23 | ★ | $1_{12}$ | 8 | 15 | 22 | 29 | 6 | 13 | 20 | 27 | ★ |

©
தமிழ்நாடு அரசாங்கம் - 1965

REGD.NO.M-7277